Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
டிச.06-12,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 286



## காத்திருக்க வைத்தார்

## இராணுவ அவசரம் பிரபா



## ரம்பா பதில்கள்

## கல்யாண மன்னர்

# முரசம்

## நியாயமான கேள்வி

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

இப்போதெல்லாம்
தமிழ் மக்களைப் பாதிக்கும்
பிரச்சனைகள் தொடர்பாக
ஆட்சியாளர்கள்
அலட்டிக் கொள்வதில்லை!

யாழ் குடாநாட்டில்
காணாமல் போனோர்
விவகாரம் வெளியாகி
இரண்டு வருடங்களாகின்றன!

இவ்விடயம் தொடர்பாக
தமிழ் மக்கள் அனைவரும்
அதிர்ச்சி கொண்டுள்ளனர்.
மனித உரிமை அமைப்புக்கள்
ஆழ்ந்த கவலை தெரிவித்தன!

ஆனால், இன்று வரை
அரசாங்கமோ, அதன்
அதி சக்திவாய்ந்த ஜனாதிபதியோ
உத்தியோகபூர்வமாக
எவ்விதமான கருத்தையும்
தெரிவிக்கவேயில்லை!

ஒருவர், இருவரல்ல-
அறுநூறுபேர்
காணாமல் போய்விட்டனர்!

அத்தனை பேரும்
கொல்லப்பட்டு விட்டனர்
என்ற உண்மையும்
அம்பலமாகிவிட்டது!

நாட்டின் அதியுயர்
அதிகாரம் கொண்டவர்,
படைகளுக்குப் பொறுப்பானவர்
என்ற ரீதியில்
ஜனாதிபதியே இவற்றுக்கு
பதில் கூறியிருக்கவேண்டும்!

மாபெரும் அநீதி
தொடர்பாக தமது
அரசின் கருத்தை
தமிழ் மக்களுக்கு
தெரியப்படுத்தியிருக்க வேண்டும்!

சமீபத்தில்
இறைவரித் திணைக்களம்
தொடர்பாக வெளியான
செய்தியை மறுக்க
அரசு காட்டிய துரிதம்
நாம் அறிந்ததே!

செய்தி வந்தது
காலையில்!
ஜனாதிபதியின் மறுப்பு
வந்தது மாலையில்!

வங்கியில் கணக்கு
கேட்டதாக
வந்த செய்திகள்
வாக்கு வங்கிகளை
பாதிக்கப்போகின்றனவே
என்று துரித மறுப்பு!

வாக்கு வங்கிகளை
பாதுகாப்பதில்
காட்டுகின்ற அக்கறையில்
பாதியைத் தானும்
இனப்பிரச்சனை விடயத்தில்
காட்டினால் என்ன?

'தமிழ் மக்கள்
இந்த நாட்டின்
பூர்வீகக் குடிகளல்ல'
என்று கூறினார் ஜனாதிபதி!

தமிழ் மக்கள்
அனைவரையும்
புண்படுத்திய பேச்சு அது!

இன்றுவரை
எக் கருத்தையும்
ஜனாதிபதி கூறவில்லை!

வன்னியில்
பட்டினிக் கொடுமை!
தொற்று நோய்கள்
எங்கும் பரவுகின்றன!

இச் செய்திகள்
செவிக்கு எட்டியும்
அரசு
நிவாரணத் தடை,
மருந்துத் தடைகளை
தளர்த்தவேயில்லை!

அதற்குப் பதிலாக
சமீபத்தில்
விமானக் குண்டுவீச்சும்
ஷெல்வீச்சுக்களும்-
குடியிருப்புக்கள் மீதும்
குடிமக்கள் மீதும்
நடத்தப்பட்டுள்ளன!

பதினைந்து பேர்வரை-
குழந்தைகள் உட்பட-
பலியாகியுள்ளனர்!

வன்னியில்
தொண்டர் நிறுவனப்
பிரதிநிதி கூறியதுபோல,
"நிவாரணத்தை நிறுத்திவிட்டு
தாக்குதல் நடத்த
விமானங்கள்
அனுப்பி வைக்கப்பட்டன!"

இக் குண்டுத் தாக்குதல்கள்,
ஷெல் வீச்சுக்களில்
ஒரு புலிதானும்
பலியானதாக
நாம் அறியவில்லை!

தமிழ் மக்கள்
என்ன நினைக்கின்றனர்,
என்பதைப்பற்றி
ஆட்சியாளருக்கு
கவலை இல்லை!

படைத் தரப்பு
என்ன நினைக்கிறது?
என்பதை அறிந்து
அதற்கேற்ப செயற்படுவதே
தமிழ் மக்கள் தொடர்பான
ஆட்சியாளரின்
கொள்கை என்று
கருத வேண்டியுள்ளது!

மாற்றாந்தாய்
மனப்போக்கு
வெட்ட வெளிச்சமாகிறது!


அன்றாட அவலங்கள்
தொடர்பாகவே
கரிசனை காட்டாதவர்கள்,
அடிப்படைப் பிரச்சனைகளை
எப்படித் தீர்க்கப் போகிறார்கள்,
என்பது மக்களின் கேள்வி!

அக் கேள்வி
நியாயமான கேள்வி
என்றே தோன்றுகிறது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்

### எல்லா விரதங்களுக்கும் பொதுவான விதிமுறைகள்



அதிகாலையில் துயிலெழுதல், நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிதல், சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மானுஷ்டானங்களை (அநுட்டானம் பார்த்தல்) முறைப்படி செய்தல், ஆலய வழிபாடு செய்தல், காலை மாலை வீட்டில் சுவாமி அறையில் விளக்கேற்றி வழிபட்டு இயன்றவரை திருமறைப் பாடல்கள் மற்றும் தோத்திரப் பாடல்கள் பாடித்துதித்தல், விபூதி, உருத்திராக்கம் முதலிய சமய சின்னங்களை அணிந்திருத்தல், காலை உணவினை நீக்கி, மதியம் ஒரு வேளை மட்டும் அன்னமும், இரவில் பால்பழம், அல்லது பலகாரம் உண்ணல் என்பன எல்லா விரதங்களுக்குமே முக்கியமாக வேண்டப்படும் கட்டுப்பாடுகளாகும்.

விரத நாளிலும் அதற்கு முதல் நாளிலும், மறு நாளிலும் மச்சம்-மாமிசம், முட்டை, மதுபானம், புகைத்தல் முதலியவற்றை முற்றாக நீக்குதல், தம்பதிகள் குடும்ப சேர்க்கையை தவிர்த்தல் என்பனவும் அவசியம். அத்துடன் ஆணவம் கொள்ளாது, பொறுமை அத்தியாவசியம் கடைப்பிடித்துக் கொள்ள வேண்டும். உபவாச விரதமெனில் முதல் நாளிலும், அடுத்த நாளிலும் ஒரு நேர உணவுண்டு விரதமிருத்தல் வேண்டும்.

ஒரு விரதத்தை ஆரம்பிக்குமுன் 'இன்ன நோக்கத்துக்காக- இன்ன முறைப்படி இவ்வளவு காலம் இந்த விரதத்தை அனுஷ்டிக்கப்போகின்றேன்.' என்று உறுதியாக தீர்மானம் செய்து (சங்கல்பம் செய்து) ஆலயம் சென்று சங்கல்ப பூர்வமாக அர்ச்சனை வழிபாடுகள் செய்து ஆரம்பிக்க வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைவரை மாற்றமின்றி அவ்விரதத்தை ஒழுங்காக கைக்கொள்ள வேண்டும்.

தொகுப்பு:-அ.அரசரெத்தினம், சேனையூர்.06- மூதூர்.

### திரு நபி கூறிய திருமணத் தேர்வு

திருமணப் பெண்ணொருத்தி திரு நபி (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! நான் விரும்பாத ஒருவரை எனது தந்தை எனக்குத் திருணம் செய்து வைத்துவிட்டார். இதனால் நான் மிக மன வேதனையடைந்துள்ளேன்!" என்றாள்.

அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "அத் திருமணத்தை விட்டும் நீ சட்டப்படி விலகிக் கொள்ளும்!" எனப் பதிலளித்தார்கள்.

எந்த ஒரு பருவப் பெண்ணையும் அவள் விருப்பத்திற்கு மாறாக திருணம் செய்து வைப்பதை இஸ்லாம் விரும்பவில்லை.

அப்படியானல் ஒரு மணப் பெண்ணிடத்தில் எப்படி திருமண அனுமதி பெறுவது என்றொரு வினா எழுகின்றதல்லவா?

இந்தக் கேள்விக்கு இறை தூதர் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "ஒரு திருமணப் பெண்ணுக்கு அதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெறும்போது அவள் அமைதியாக இருந்தால் மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி; நிலை குலைந்தால் அவள் அத்திருமணத்தை விரும்பவில்லை!" என்று அர்த்தம் என்றார்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.283



### பரிசுக்குரிய கவிதை

#### இங்கும் இல்லை

பூதவுடல் மிதந்ததென்று பூபாலன் சொன்ன பின்பு,
கோயிலிலே கண்ட கோபாலும் அதைச் சொன்னான்!
பூபாலும்-கோபாலும் சொன்ன கதை நான் கேட்டு-
ஆவலாய் ஓடிவந்தேன் அன்பு மகன் இங்கும் இல்லை!

செல்வி.பிர்தௌஸியா நூர்தீன்- 'கல்வித்திணைக்களம்', திருகோணமலை.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

#### ஓடிப்போ தாயே!

'நீட்டா'வைப் போல
நீங்களும்
சாகப்போகிறீர்களா?
கடலும் வேண்டாம்!
காற்றும் வேண்டாம்!
'ஒட்டோ'வைப் பிடித்து
ஓடிப்போய்விடு தாயே!

கு.திருமால்-அமிர்தகழி,
மட்டக்களப்பு.

#### கண்மணியைத் தேடி...

காணாமற் போன என் கண்மணியைத் தேடி
போகாத இடம் இந்தப் பெருங்கடல்தான்....
காணேன் இனியுன்னை காணாமல் நான் தரியேன்-நீ
போன இடம் தேடிப் புறப்பட்டேன் நான் மகனே!

குழந்தை சுவாமி- மட்டக்களப்பு

#### கப்பல் சேவை?

ஆறு மாதமாக
காத்து நிற்கிறேன்-
பயணிகள்
கப்பலுக்காக!

த.நகுலேஸ்வரன்-
கல்லடி-வேலூர்,
மட்டக்களப்பு.

#### புரியாத வாழ்க்கை?

நொந்து வெந்து தினம்
நோகடிக்கும் செயல்களினால்
சிந்தை தெளிவின்றி
சீவிக்கும் நிலை ஆச்சு!
எங்க சென்றிடுவோம்
இதமெங்கே பெற்றிடுவோம்
என்னும் கேள்வியொன்றே
இப்போது உருவாச்சு

திருமதி மல்லிகா பத்மநாதன்-
டெமேரியா குறூப், பசறை.

#### எழுந்து வரமாட்டார்....

நட்டாற்றில் நின்று கொண்டு
கொட்டாவி விட்டாலும்
செம்மணியில் மாண்டவர்கள்
மீண்டுவரப் போவதில்லை!

விஜி பத்மநாதன்-
நீர்கொழும்பு.

#### என்நிலை

போரும்
நீரும்
போகும்
பயணத்தை
தடுக்குது
ஐயா!

டன்சினேன்
தியாகராஜன்.

#### ஒற்றுமை

தண்ணீரில் கால் பதிக்கும்
தங்கையிவள் தோற்றமது
செம்மணியில் உயிர்துறந்த
கிருஷாந்தி போன்றதம்மா!

பி.கே.தாஹா-மீராகேணி வீதி,
மிச் நகர், ஏறாவூர்.

#### எது(வுமே) இல்லை

போகுமிடம் தூரமில்லை-ஆனால்
போக ஒரு பாதையில்லை- இங்கு
நீதி கேட்க யாருமில்லை- எதிர்
நீச்சலிட இன்னும் துணியவில்லை.

கோவை அரசி- யாழ் பல்கலைக்கழகம்.

#### தேடுதல்?

அரசு
தேட மறுத்ததை
இந்தத் தாய்
தேடத்
தொடங்கி
விட்டாரோ?


என்.சிவயோகேஸ்வரி-
புளிச்சாக்குளம்.

#### நிற்கும் நிலம்

காரிகைகளைக் காவு கொண்ட
காக்கைத் தீவு சேற்று நிலமோ...?
காரிகையிவள் காலூன்றி நிற்குமிடம்?

ஞானராஜா மனோவா- மனோரகம், வாழைச்சேனை.

## கவிதைப் போட்டி இல.286



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 12.12.1998

**முகவரி:** கவிதைப் போட்டி இல.286
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## வாசக(ர்)சாலை

முரசே!

நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களையும் எவ்வாறு புகழ்வதென்றே புரியவில்லை. குறிப்பாக 'டிசம்பர் பௌர்ணமி','உதட்டில் ஒரு மச்சம்' போன்ற தொடர்கதைகள் ஆரம்பத்திலும் அசத்தி, தொடர்ந்தும் அசத்தலோ அசத்தல்.

வறக்காமுறையூரான், மு.ஹஜீம்
(மட்டாவை)

இனிய முரசே!

உன்னில் இடம்பெறும் அனைத்து அம்சங்களும் தித்திப்பவையே! 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' தரும் நாரதருக்கு பாராட்டுகள்.

பவானி சதாசிவம், ரொசால்ல.

கவியரசு என்னும் செடி மறைந்த போதும் அதில் பூத்த சிந்தனை விதைகள் இன்னும் பாதுகாக்கப்பட்டுக் கிடக்கிறது. அவைகளை எமக்காய் முரசில் முளைக்கச் செய்வதற்கு கோடி நன்றிகள்.

கலைஞர் கே.நாகேந்திரன், புத்தளம்.



### நூறு முட்டாள்களை விடமேல்!

குமார் பொன்னம்பலம் தனிமனிதராம். சில 'டமில்' கட்சிகள் கூறுகின்றன. அப்படிக் கூறும் டமில் கட்சிகளில் நூறு, இருநூறுபேர் தேறுவார்களா? அதிலும் மக்களை வதைப்போர் எத்தனைபேர்? சமூக விரோதிகள் எத்தனைபேர்? இத்தனை பேர் இருந்து மக்களுக்கு தொல்லை கொடுக்கின்றனர். இதைவிட தனியாளாய் குமார் இருந்தால்கூட பயன் பல உண்டு. சொந்தமே இல்லை இந்த நாட்டில் என்றபோது குரல் கொடுக்க இந்தக் குழுக்களால் முடிந்ததா? குமார்தானே வாய் திறந்தார்! நூறு முட்டாள்களைவிட ஒரு புத்திசாலி மேல்.


ஏ.சிவப்பிரகாசம், மட்டக்களப்பு.

### முதுகு சொறிந்தனர்

அன்பு முரசே!

சுவர்ணவாகினி என்னும் தொலைக்காட்சி குமாரின் பேட்டியை ஒளிபரப்பியது. தமிழர்கள் கொழும்பில் இருப்பதே சிங்கள மக்களின் கருணையால்தான் என்பது போன்ற தொனியில் கேள்விகள் கேட்கப்பட்டன. அரசு பற்றியோ, இனப்பிரச்சனை பற்றியோ எக் கேள்வியும் கேட்கப்படவில்லை. ஆகவே குமார் காட்டமாகவும் துணிச்சலாகவும் கொடுத்த பதில்கள் அவசியமே. அப்படியிருக்க சில தமிழ்க் கட்சிகளும், சில ஆளும்தரப்பு வக்காலத்துக்காரர்களும் குமார் பேட்டி தொடர்பாக கிண்டலடித்தனர். பேரினவாதிகளுக்கு முதுகு சொறிந்தனர். இந்த சொறியர்கள் எல்லாம் அம்மையாரின் பேட்டி பற்றி மட்டும் ஏன் பேசா மடந்தைகளாக இருந்தனர்?

பி.நந்தகுமார், கொழும்பு-11.



வன்னியில் பட்டினியால் வாடும் தமிழ்ச் சிறுவன்.
(படம்: வீரகேசரி மாணிக்கவாசகம்)

### சகலகலா வல்லவன்

'இராஜதந்திரியாரின்' அலசலில் தமிழ் பேசும் மக்களின். உள்ளுணர்வுகளின் வெளிப்பாடுகளை அப்படியே படம் பிடித்துக் காட்டிவிட்டீரே! தானாட முன் தன் தசையாடும் என்பதற்கு விதிவிலக்கு தமிழ் கட்சிகள் மட்டும் தான். குமார் பொன்னம்பலம் ஜனாதிபதியையே அசத்திவிட்டார். உண்மைகளென்றும் உறங்குவதில்லை என்பதை இனியாவது எம் ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ளட்டும்.

பொன்.நளினி,
பொத்துவில்.

### ஆனால் இன்று?

முன்னாள் ஜனாதிபதி விஜயதுங்கா கூட 'சிங்களவர்கள் மரம்- தமிழர்கள் கொடி' எனக் கூறினாரேயன்றி- தமிழ் மக்கள் இந்த நாட்டுக்கு உரியவர்களல்ல என்று கூறவில்லை. ஆனால்... இன்று...?

மு.சிகாமணி, திருமலை.

இனிய முரசே

பல இலட்சக் கணக்கான வாசகர்களில் என்னையும் ஒருவனாக்கிய உனக்கு எனது நன்றி. முரசே நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் கலப்படமில்லாத உண்மை.

ஒவ்வொரு வாரமும் அற்புதன் எம் இதயங்களைத் தொடுகின்றார். ராஜேஸ் குமார்- 'முள் நிலவு' மூலம் எம்மை கவலையில் ஆழ்த்திவிட்டார். ராஜேஸ்குமாரின் புதிய தொடரான 'டிசம்பர் பௌர்ணமி' முரசில் வருவதை நினைத்து சந்தோஷமடைந்தேன். 'காதிலை பூ கந்தசாமியார்' எம்மை சிரிக்கவும் அதே சமயம் சிந்திக்கவும் வைக்கிறார்.

ப.ம.சீலன், சுவிஸ்.

### அரசுக்கே பாதகம்

முரசே!

சந்திக்குவராத சங்கதிகளும், இராஜதந்திரியாரின் அலசலும் வெகு நேர்த்தி. தென்னாபிரிக்கா தொடர்பான இலங்கை அரசின் காய் நகர்த்தல், இலங்கை அரசுக்கே பாதகமாக முடியும் என்பதை சுட்டிக்காட்டியது மெத்தச்சரியே!

இ.ராசரத்தினம், கொழும்பு-06.

### எங்கே அறிக்கை?

ஏதோ ஜனாதிபதியிடம் விளக்கம் கேட்டதாகவும், விளக்க அறிக்கை விடப்படும் என்றும் ஈ.பி.டி.பி. கட்சியிடம் கூறப்பட்டதாக செய்திகள் கண்டோம். அச் செய்தி வந்தே ஒரு மாதமாகப் போகிறது. எங்கே விளக்க அறிக்கை? தமிழ்க் கட்சிகள் ஏமாற்றப்படுவதற்கு இதுவும் எடுத்துக்காட்டு!

க.குலேந்திரன், கொழும்பு-12.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல்:- 074-513266

# வான் புலிகள் படையணி உதயம்!

## வன்னியில் மாவீரர் தினத்தில் அணிவகுப்பு

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளிடம் ஹெலிகொப்டரும், சிறியரக விமானமும் இருப்பதை முரசு முன்னரே உறுதி செய்திருந்தது.

எனினும் இலங்கை அரசு அதனை மறுத்துவந்தது. புலிகளும் தம்மிடம் வானூர்திகள் இருப்பது பற்றி எதுவும் குறிப்பிடாமல் இருந்தனர்.

புலிகளிடம் விமானம் இருந்தால் நிரூபிக்கட்டும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை அண்மையில் கூறியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தின் இறுதி நாளான 27.11.98 அன்று பெரும் திரளான மக்கள் முன்பாக புலிகளின் வானூர்திகள் வானில் தோன்றின.

இலங்கையின் பழைய நேரப்படி மாலை 5.43 முதல் 6.05 வரை வேலுப்பிள்ளை பிரபாகரன் உரையாற்றினார். 6.06க்கு அவ்விளக்கம் நடந்தது. 6.07 அளவில் சுடரேற்றுதல் இடம்பெற்றது.

வானில் தோன்றிய வானூர்திகள் மாவீரர் துயிலும் இல்லம்மீது மலர்களை தூவின. வட்டமிட்டும், தாழப்பறந்தும் மரியாதை செலுத்துவது போல அணிவகுத்துக் காட்டின என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

### புலிகள் பிரகடனம்

வானூர்திகளுக்கு பாதுகாப்பாகவும், மாவீரர் துயிலும் இல்லத்தில் வேலுப்பிள்ளை பிரபாகரன் சுடரேற்றுவதற்கு பாதுகாப்பளிக்கவும் வன்னியின் முக்கிய முனைகளிலும், மாவீரர் துயிலும் இல்லங்கள் அருகேயும் புலிகளின் விமான எதிர்ப்பு படையணி நிறுத்தப்பட்டிருந்தது.

மாவீரர் தின நிகழ்வுகள் முடிந்ததும், புலிகளின் குரல் வானொலி முதன் முதலாக தமது வானூர்திகள் தொடர்பாக செய்தி வெளியிட்டது.

மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு புலிகளது வானூர்திகள் மலர் தூவி அஞ்சலி செய்ததை புலிகளின் குரல் உத்தியோகபூர்வமாக தெரிவித்தது.

இதுவரை கடற்புலிகள் அணியும், கடற்கரும்புலிகள் அணியும் புலிகளிடம் இருந்தன.

இப்போது வான் புலிகள் படையணியும் ஒன்பதாவது மாவீரர்தினத்தில் உதயமாகியுள்ளது.

மாவீரர் தினமன்று புலிகளின் முகாமில் வான் புலிகளின் அணிவகுப்பை வேலுப்பிள்ளை பிரபாகரன் பார்வையிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உருமறைப்பு செய்யப்பட்ட விமான ஓடுபாதைகள் வன்னியில் உள்ளன. இவற்றை அரச விமானப் படையினர் கண்டறிவது கடினமாகும்.

புலிகளது வானூர்த்திகள் நிறுத்திவைக்கப்படும் பகுதி விமான எதிர்ப்பு படையணியின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறப்படுகிறது.

மேலும் சில சிறிய ரக விமானங்கள் தயாராகிவருவதாகவும், இவற்றுக்கான உதிரிப்பாகங்கள் புலிகளது கப்பல் மூலமாக வெளிநாட்டில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

# போர்க் கவசமாகப் பொதுமக்கள்!

## நடவடிக்கை எடுக்க வேண்டுகோள்

மட்டக்களப்பிலிருந்து விடுமுறையில் வீடு செல்லும் பாதுகாப்புப் படையினரையும், பொலிஸாரையும் ஏற்றிக் கொண்டு ஏராளமான இராணுவ வாகனத் தொடரணிகள் அவ்வப்போது செல்வதுண்டு.

இவ்வாகனத் தொடரணிகள் வீதியில் புறப்பட்டவுடன் பொதுப் போக்குவரத்திற்காக வீதி தடை செய்யப்பட்டு விடுகிறது. வீதித் தடை சிலவேளை ஒரு மணித்தியாலம் கூட நீடிக்கும். அவ்வேளையில் பொது மக்கள் தகிக்கும் வெய்யிலிலும் காடுகளுக்குள்ளும் காத்துக் கிடக்க வேண்டியிருக்கும்.

இந்த நடைமுறை ஒருபுறமிருக்க; தற்சமயம் இராணுவத் தொடரணி வாகனங்களைப் புலிகளின் தாக்குதலில் இருந்து காக்கும் கவசமாக பயணிகளின் வாகனங்கள் நிற்க வைக்கப்படுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு-சந்திவெளிப் பகுதியில் வாவிக்கு மறுகரையில் இருந்து பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனத் தொடரணிமீது புலிகள் தாக்குதல் தொடுத்தனர். ஆறு படையினர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் பின்னர் வீதியில் வரும் பொது மக்களின் சகல வாகனங்களும் சீருடையினரால் வழி மறிக்கப்பட்டு புலிகளின் தாக்குதல் வந்த பக்கமாக கவசம் போன்று அணி வகுத்து நிற்க வைக்கப்படுகின்றன. உயிருக்குப் போராட்டம் நடத்திய நிலையில் பொதுமக்கள் அவ்வாறு நீண்ட நேரம் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு பொதுமக்களைப் போர்க் கவசமாகப் பாவிக்காது மனிதாபிமானப் பார்வையுடன் நோக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும், இது விடயம் குறித்து கரிசனையுடன் அவசர நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமைகள் காப்பு அமைப்புக்களுக்கும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கொஞ்சம்கூட ஈவிரக்கமின்றிப் பொது மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி வருவதினால் மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் நிலவுகிறது.

# மீன்பிடிக்கு தடை நீக்கம்

## தமிழ்க் கட்சிகள் காரணமல்ல

யாழ் குடாநாட்டில் மீன்பிடிக்கான தடை தளர்த்தப்பட்டுள்ளது. இதனையடுத்து தமிழ்க் கட்சிகளும், சுயேட்சை குழு எம்.பி ஒருவரும் மீன்பிடி தடை நீக்கத்துக்கு தாமே காரணம் என்று அறிக்கை விட்டிருந்தனர்.

இதனையடுத்து யாழ்ப்பாண படைத் தலைமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது: "மீன்பிடி தடை நீக்கத்துக்கு எந்தவொரு தமிழ்க் கட்சியும் காரணமல்ல. நாமாகவே தடையை நீக்கியுள்ளோம்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# படையுடன் உள்ள குழுக்களுக்கு

## புலிகள் விடுத்துள்ள அழைப்பு

'அரச படையினருடன் இணைந்து நிற்கும் தமிழ் இளைஞர்களுக்கு' என்ற தலைப்பில் புலிகள் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட புலிகளின் அரசியல் துறையினரால் அப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இலங்கைத் தீவில் இறமையுள்ள தமிழினம் தனது விடுதலைக்காக செய்து வரும் அர்ப்பணிப்புக்கள், ஈகங்கள், தற்கொலைத் தியாகங்கள் உலகத்தின் மனச்சாட்சியை தொட்டிருக்கிறது.

சிறீலங்கா அரசோ, அதன் படையினரோ உள்நோக்கம் இன்றி எந்த ஒரு தமிழ்க் குழுமீதும் நெகிழ்ந்துருகி எதையும் வழங்கி வைக்கப்போவதில்லை.

இந்நிலையில் படைக்கு நீங்கள் துணை நிற்கிறீர்கள். சிறிலங்கா அரசின் சீடர்களாகி விட்டீர்கள். உங்கள் பரம்பரை சுவடே அழிந்திடல் மகிழ்ச்சி என்பார்க்கு சேவகம் செய்து விலைபோய்விட்டீர்கள்.

உங்கள் இச் செயற்பாட்டிற்கு எந்தவித நியாயபூர்வமான அர்த்தமும் இல்லை. அத்தோடு தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான உங்களின் நடவடிக்கைகள் நிச்சயமாக எதையும் தீர்மானிக்கப் போவதும் இல்லை.

நீங்கள் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தமிழ் மக்களின் பலம் விடுதலைப் புலிகளே. இந்த விடுதலைச் சக்திக்கு எதிராக ஆயுதம் ஏந்தியிருப்பதாக குறிப்பிடும் நீங்கள் உண்மையில் அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிராகவே உங்கள் சுடுகுழலை நீட்டியிருக்கிறீர்கள். இன்னும் சொன்னால், நீங்கள் ஆயுதம் ஏந்தியிருப்பது விடுதலைப் புலிகளுக்கு எதிராகவல்ல. உங்களுக்கு எதிராக என்பதே பொருந்தும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதியை நாம் ஏற்கவில்லை

## சர்வதேச மத்தியஸ்தம் தேவை

"இலங்கை அரசின் தீர்வுப் பொதியை நாம் ஏற்கவில்லை. இத் தீர்வுப் பொதிக்கு ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாக முன்வைத்த யோசனைகளை குப்பைக் கூடையில் போட்டு விட்டீர்கள். அதேசமயம் தமிழ் கட்சிகள் பொதியை ஏற்றுள்ளதாக சர்வதேச சமூகத்திடம் கூறிவருகிறீர்கள். நாம் பொதியை ஏற்கவில்லை. இது அரை குறைப்பொதி என்றே கூறிவருகிறோம்" இவ்வாறு ஈ.பி.டி.பி.எம்.பி மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெளிநாட்டு அமைச்சு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவ்வாறு தெரிவித்தார்.

"ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்காவிட்டாலும், அரசியல் தீர்வைக் காண்பதற்கு தன்னிடம் திட்டம் இருப்பதாக ஜனாதிபதி கூறினார். அத் திட்டம் எங்கே? இப்போது மறுபடி ஐக்கிய தேசியக் கட்சி ஆதரித்தால்தான் தீர்வை கொண்டுவரலாம் என்று கூறுவது ஏன்?" என்று சந்திரகுமார் எம்.பி கேள்வி எழுப்பினார்.

"இனப்பிரச்சனையை இந்த நாட்டுக்குள் தீர்க்கவே முடியாது என்பது தெளிவாகி விட்டது. எனவே முன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மூலம் இதனை தீர்ப்பதற்கு அரசு முன்வரவேண்டும். கண்டியில் நில நடுக்கம் பற்றி ஆராய வெளிநாட்டு உதவி கேட்கிறீர்கள். நாடே நடுங்கும் இனப்பிரச்சனையை தீர்க்க வெளிநாட்டு மத்தியஸ்தத்தை ஏன் நாட மறுக்கிறீர்கள்?" என்றும் அவர் தெரிவித்தார்.

# புலிகளிடம் மனிதாபிமான வேண்டுகோள்!

## மின்சார தடையை நீக்குக

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான நகரப் புறங்களில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மின்சாரத்தைப் புலிகள் தடைப்படுத்தியுள்ளனர். இதனால் பல்வேறு தொழிற்துறைகளில் ஈடுபடுவோர் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். பலர் அன்றாட வேலை வாய்ப்பை இழந்து அல்லற்படுகின்றனர். குறிப்பாக பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்கள் மிகச் சிரமப்படுகின்றனர்.

வரும் ஓரிரு நாட்களில் க.பொ.த.சா/த பரீட்சை நெருங்குகிறது. குப்பி இலாம்புகளுடன் மாணவர்களின் பாடு பெரும் திண்டாட்டமாகி வருகிறது. எனவே நமது மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாது அவர்களின் நன்மை கருதியும் அதனையடுத்து வரும் முஸ்லிம்களின் நோன்பு காலத்தை முன்னிட்டும் மனிதாபிமான அடிப்படையில் மின்சார இணைப்பை மீண்டும் வழங்க அனுமதிக்குமாறு பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் புலிகளிடம் தமது பணிவான வேண்டுகோளை விடுத்துள்ளனர். மின் விநியோகத்தடை காரணமாக தமிழ் பேசும் மக்களே முற்று முழுதான பாதிப்பை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கிறார்கள்.

பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மின்சாரத் தடை காரணமாக நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளன. பதுக்கல்கள், இடைத் தரகர்களின் தில்லு முல்லுகள், என்பன பெருகியுள்ளன. காட்டுப் பகுதியிலிருந்து படையினரின் கண்காணிப்பின் கீழுள்ள பகுதிக்கு விறகு கொண்டு செல்வதையும் புலிகள் தடை செய்துள்ளதால் ஏழை மக்களே பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளார்கள். மனிதாபிமான அடிப்படையில் தடைகளை நீக்குமாறு மக்கள் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்னர்.

# வீரசிங்கத்தின் இறுதிச் சடங்கு

## இரங்கல் கூட்டத்தில் அரசியல் பேச்சு!

(நமது நிருபர்)

வவுனியாவில் தமிழ்க் கட்சி ஒன்றினால் கூட்டுறவுச்சங்க தலைவர் வீரசிங்கம் குத்திக் கொல்லப்பட்டார். அவரது இறுதிச் சடங்கு வவுனியாவில் நடைபெற்றது.

புளொட் இயக்கம் விடுத்த பிரசுரம் ஒன்றில், தமது இயக்கத்தின் ஆலோசகராக செயற்பட்டவர் வீரசிங்கம் என்றும், கழகத்தின் கொள்கையின்பால் ஈர்க்கப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இரங்கல் கூட்டத்தில் உரையாற்றிய கூட்டணியின் முக்கியஸ்தர் மாவை சேனாதிராஜா, "வீரசிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இறுக்கமான உறவு கொண்டிருந்தவர்" என்று கூறினார்.

வவுனியா நகரசபைத் தலைவரும் புளொட் முக்கியஸ்தருமான லிங்கநாதன் தனது உரையின்போது: "வீரசிங்கம் எந்தக் கட்சியையும் சேர்ந்தவரல்ல. தயவு செய்து அவரை அரசியலுக்குள் இழுக்க வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார்.

அடுத்து உரையாற்றிய கூட்டணி முக்கியஸ்தரான வி.ஆனந்தசங்கரி "வீரசிங்கம் கூட்டணியைச் சேர்ந்தவரல்ல. எமது ஆதரவாளர் என்றுகூட சொல்ல முடியாது. யாவருக்கும் பொதுவாக இயங்கியவர்" என்று தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ சார்பாக உரையாற்றியவர்களும் அமரர் வீரசிங்கம் தமக்கு வேண்டப்பட்ட நல்ல மனிதர் என்று கூறினர்.

பிற்பகல் 1 மணி முதல் 4.30 மணி வரை இரங்கல் கூட்டம் நடைபெற்றது. பலியானவரின் உடலை வைத்து அரசியல் இலாபம் தேட தமிழ்க் கட்சிகள் முயற்சிப்பதாக இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட பலர் அதிருப்தி தெரிவித்தனர்.

### அநாமதேய பிரசுரம்

இதற்கிடையே இறுதிச் சடங்கில் அநாமதேயப் பிரசுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டது.

"உன் தலைமையில் சுயநலப் பேய்களின் வயிற்றுப் பிழைப்புக்கு வழியின்றிப் போனதால் உன்னைக் கொலை செய்தனர். கொலை வெறிக் கும்பலின் ஆட்டம் விரைவில் ஓயும்" என்று அந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# மாணவன் படுகொலை

## புலி என்று சித்தரிப்பு

வவுனியாவில் கோரக் கொலைகள் அதிகரித்து வருகின்றன. 25.11.98 அன்று சத்தியநாதன் தமிழ்க்குமரன் என்னும் மாணவன் கொல்லப்பட்டுள்ளார். கோரமாக வெட்டியே கொலை செய்யப்பட்டுள்ளார்.

மொறட்டுவப் பல்கலைக் கழக பொறியில்பீட மாணவரான தமிழ்க்குமரன் கொலைக்கு எவரும் உரிமை கோவில்லை. இவர் ஒரு புலி என்று கதை கட்டிவிடப்பட்டுள்ளது. எந்த இயக்கத்துடனும் இவருக்கு தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லை. தவறான தகவலின் அடிப்படையில் புலி என்று கொலை செய்துள்ளனர்.

வன்னியில் புலிகளின் குரல் இக் கொலை பற்றி கூறும்போது: "அப்பாவி மாணவன் ஒருவரை தேசவிரோத கும்பல் கொலை செய்துள்ளது" என்று தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் குமரனுக்கு அஞ்சலி தெரிவித்து மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் இதய அஞ்சலிப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

ஜனநாயகப் படுகொலைகள் பற்றி அறிக்கைவிடும் தமிழ்க் கட்சிகள் இக்கொலைகள் பற்றி பொதுப்படையாகவும், மேலோட்டமாகவும் கண்டனம் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஆயுதங்கள் புலிகளிடம்

கடந்த ஒக்டோபர் மாத இறுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து 'லங்கா முதித்த' கப்பலில் 500 படையினரையும் அதே அளவு பொது மக்களையும் ஏற்றிக் கொண்டு திருகோணமலை நோக்கிவந்து கொண்டிருந்தது. இக்கப்பலுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக திருகோணமலையிலிருந்து கடற்படைக்குச் சொந்தமான டோராப்படகும் வேறு சில படகுகளும் அனுப்பப்பட்டன.

முல்லைத்தீவுக் கடல் பிரதேசத்தில் வைத்து கடற்புலிகளின் கடுமையான தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் டோரா படகு புலிகளால் மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, லங்கா முதித்த காங்கேசன் துறைக்கு திருப்பி அனுப்பப்பட்டது தெரிந்ததே. இந்த டோராப்படகு கொழும்பு படகு கட்டும் தொழிற்சாலை (டொக் யார்ட்)யில் புதிதாகக் கட்டப்பட்டதாம். கடற்புலிகளின் தாக்குதலினால் டோரா செயலிழந்து நகர முடியாமல் நின்று விட்டது. அத்துடன் அதிலிருந்த கடற் படையினர் பலரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்படகு மூழ்குவதற்கு முன்னதாக கடற்புலிகள் இப்படகில் ஏறி, இதில் பொருத்தப்பட்டிருந்த புத்தம் புதிய 23 எம்.எம். ரகத் துப்பாக்கியையும் வேறு பல சாதனங்களையும் கழற்றிக் கொண்டு போய்விட்டதாக 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# ஐயப்பன் மாலையை கழற்று

## குண்டாந்தடி காட்டி மிரட்டல்

கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஐயப்ப பக்தரான தமிழர் ஒருவர் அவமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்டவர் சசிகுமார். இவர் ஓட்டோ ஒன்று வைத்திருக்கிறார்.

25.11.98 அன்று பம்பலப்பிட்டியில் கடவுச்சீட்டு அலுவலகத்தில் தனது கடவுச் சீட்டை புதுப்பிக்க அவர் சென்றுள்ளார். ஐயப்பனுக்கு மாலை போட்டு, கறுத்த உடை அணிந்திருந்தார்.

அவர் மீது சந்தேகம் கொண்ட பொலிசார் அழைத்து விசாரித்தனர். கடவுச் சீட்டு, அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், ஓட்டோ காப்புறுதிப் பத்திரம் போன்ற பல ஆவணங்களை காண்பித்தார்.

அப்படியிருந்தும் சந்தேகம் என்று கூறி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு கூண்டுக்குள் தள்ளிவிட்டு மாலையை கழட்டுமாறு கூறினராம்.

ஐயப்பனுக்கு போட்ட மாலையை கழற்றக் கூடாது. நேர்த்திக் கடன் முடிய வேண்டும் என்று அவர் பணிவாக கூறியிருக்கிறார். நீயாக கழற்றுகிறாயா? அல்லது நாங்கள் கழற்றி எறிய வேண்டுமா? என்று மிரட்டியபடி குண்டாந்தடியுடன் பொலிசார் மிரட்டினார்களாம். அதனால் ஐயப்பன் மாலையை கழற்றினாராம் சசிகுமார்.

கூண்டுக்குள் வைத்திருந்துவிட்டு மறுநாள் அவரை விடுதலை செய்தனர். கறுப்பு உடையுடன் புலிகளின் அணி ஒன்று நடமாடுவதாக செய்தி கிடைத்தது. அதுதான் கைது செய்தோம் என்று கூறப்பட்டதாம்.

# ஹெலி ஏற்படுத்திய கிலி!

மட்டக்களப்பில் மாவீரர் வாரம் புலிகளின் வசமுள்ள பகுதிகளில் வெகு உத்வேகத்துடன் கொண்டாடப் பட்டு வந்த அதேவேளை படையினர் மிகுந்த எச்சரிக்கையுடன் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்தனர். எங்கு என்ன நடக்குமோ என்ற பயப்பீதி மக்களைக் கவ்வியிருந்தது.

இவ்வேளையில் மாவீரர் வார இறுதி நாளான 27.11.98 அன்றுமாலை பிரபாகரனின் மாவீரர் உரையை எதிர்பார்த்திருந்த வேளையில் ஹெலி கொப்டர் ஒன்று தாழப் பறந்து மட்டக்களப்புக்குச் சென்றது. அன்றைய தினம் வீதிப்பாதுகாப்பிற்குக்கூட படையினர் நிற்கவில்லை. படையினர் அவர் தம் முகாம்களிலேயே தீவிர எச்சரிக்கையுடன் உஷாராய் இருந்தனர்.

# தையல் கடையில் கைக்குண்டு வீச்சு!

## வர்த்தகப் போட்டியே காரணம்!

(ஏறாவூர் நிருபர்)

கடந்தவாரம் மட்டக்களப்பு ஓட்டமாவடி, ஏறாவூர்ப் பகுதிகளில் கைக்குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

ஓட்டமாவடி முஸ்லிம் பகுதியில் தையல் கடை ஒன்றுக்குள் குண்டு வீசப்பட்டது. 5 பேர் காயம் பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். 29.11.98 அன்றிரவு எட்டு மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது.

படையினருக்கான சீருடைகளும் இக்கடையில் தைக்கப்படுவதால் புலிகளே குண்டுத் தாக்குதலை நடத்தியிருக்கக்கூடும் என்று ஆரம்பத்தில் நம்பப்பட்டபோதிலும், ஓட்டமாவடியில் உள்ள தையல் கடைக்காரர்களுக்கிடையில் நீண்ட காலமாக நிலவி வரும் போட்டா போட்டியின் உட்பூசல்களே குண்டுத் தாக்குதலுக்குக் காரணமென்று அவ்வூர் முஸ்லிம் மக்கள் திட்டவட்டமாகக் கூறுகின்றனர்.

தையல் வேலையில் முன்னணியிலுள்ள இவருக்கு ஏற்கெனவே சில அச்சுறுத்தல்கள் இருந்ததாக அவரது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதேவளை ஏறாவூர் முஸ்லிம் பகுதி வீடொன்றின் வாசலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடி வெடித்ததில் எம்.எல். பாத்திமா பர்வின் என்ற எட்டு வயதுச் சிறுமியின் கால் பாதிக்கப்பட்டது. மேலும் ஒருவர் காயம் பட்டார்.

இக்குண்டு வெடிப்பு இடம்பெற்ற வீட்டிற்குச் சிறிது தூரத்தில் மற்றொரு கைக்குண்டு வீச்சுச் சம்பவம் இடம் பெற்றது. வெறும் வளவு ஒன்றில் வீசப்பட்ட இக்குண்டினால் பாதிப்பெதுவும் ஏற்படவில்லை. எம்-14 ரக குண்டுதான் இது என்று கூறப்படுகிறது. சதி நாசகாரர்களின் வேலையே இது என்று கருதப்படுகிறது 30.11.98 அன்று இச்சம்பவங்கள் இடம்பெற்றன.

# தப்பிக்கும் குற்றவாளிகளும் தண்டிக்கப்படும் தமிழர்களும்

அண்மையில் 01.11.98 அன்று கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு இரவு ரயிலில் பயணம் செய்த இலங்கைத் தமிழர் ஒருவருக்கு நடந்த சோகத்தை பலரும் அறிவர். அவர் அந்தப் புகைவண்டியின் சிற்றுண்டிச் சாலையில் கோப்பி அருந்திவிட்டு தன் இருக்கைக்குச் சென்றதும் மயங்கிவிட்டார். காலையில் அவரை மயக்க நிலையிலேயே வவுனியா வைத்திய சாலைக்கு புகையிரத நிலைய அதிபர் அனுப்பிவைத்திருக்கிறார்.

சம்பந்தப்பட்டவர் மயக்கம் தெளிந்து எழுந்தபோது தனது ரொக்கப்பணம் ஏழாயிரம் ரூபாயும், தங்க மோதிரமும் அபகரிக்கப்பட்டிருப்பதை உணர்ந்திருக்கிறார். பின் தன் முறைப்பாட்டை புகையிரத நிலைய அதிபரிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்.

இது விடயமாக கடந்த 8.11.98 ஞாயிறு அன்று இலங்கை வானொலியின் 'வாரம் ஒரு வலம்' நிகழ்ச்சியில் கருத்தாடப்பட்டது. வவுனியா புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி பாதிக்கப்பட்டவரின் வாக்கு மூலத்தை வாசித்து விட்டு இதற்குப் பரிகாரமாக போக்குவரத்து அமைச்சரிடம் கொழும்பு-வவுனியா இன்ரசிற்றி சேவை ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு கேட்டிருப்பதாகக் கூறினார்.

அதற்கு பதில் அளித்த அமைச்சர் இலாப நட்ட புள்ளி விபரங்களுடன் "இலாபம் கிடைக்குமாயின் வவுனியாவுக்கு 'இன்ரசிற்றி' விடுவேன்" என்றார். கூடவே இப்படியான வழிப்பறிகள் நடப்பதைத் தவிர்க்க முடியாது என்றும் அதைக் குறைக்க புகையிரதக் காவல் துறையை அதிகரிக்கப் போவதாகவும் கூறினார்.

**கண்டும் காணாமல்**

எத்தனையோ குற்றச் செயல்கள் வரிசையாக நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் 'பாதிக்கப்படுவது தமிழர்கள் என்பதால் கண்டும் காணாது விடப்படுகின்றன. இங்கு குற்றம் நேரடியாக-குற்றவாளியைக் கைது செய்யும் விதத்தில் நடைபெற்றிருக்கிறது.

உணவு நஞ்சூட்டல், ஆகார துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட 'கிறிமினல்' குற்றம் இடம்பெற்று இருக்கிறது. குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு விசாரிக்கப் பட வேண்டும். குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும், என்ற எந்த விதமான மனித நேய சமூக சிந்தனையும் இல்லாமல் ஓர் அரச பிரமுகர் உன்மத்தமாகப் பதிலளிப்பது எம்மை வேதனை அடையச் செய்கின்றது.

புகையிரதக் காவல் துறையின் அளவைக் கூட்டுவது என்பது இன்னமும் தமிழர்கள் மீதான வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதாகவே அமையும். காரணம் இப்போதுஉள்ள காவல் துறையினர் தமிழர்களை-பயணிகளை இம்சிப்பதில் காட்டும் அக்கறையை- கொள்ளையர்களைப் பிடிப்பதில் காட்டுவதில்லை.

எனவே அமைச்சரிடம் ஒரு மன்றாட்டம் ஐயா! கடுகதிகள், இன்ரசிற்றிகள் நட்டத்தில் ஓடுவது நாடறிந்தவிடயம். ஏழைகளுக்குத்தான் பொது வாகன வசதி தேவை. பணக்காரர்களுக்கு அல்ல, கைப்புண்ணுக்கு மருந்தைப் போடுங்கள். பதிலாக கண்ணைப் பொத்தி அடிக்காதீர்கள்!

ஜெ.கௌரிதாஸன், கொழும்பு-06.

# மூச்சு முட்டும் பயணம்

அக்கரைப்பற்றிலிருந்து பிற்பகல் வேளையில் பொத்துவிலுக்கு நடைபெறும் பஸ்சேவை பற்றி பயணிகள் பெரும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

தினமும் பிற்பகல் 2 மணிக்கு அக்கரைப் பற்றிலிருந்து பொத்துவில் ஊடாக பாணம பஸ் சேவையும், 3மணிக்கு பொத்துவில் ஊடாக கொழும்பு பஸ்சேவையும், 4.30மணிக்கு பொத்துவில் பஸ் சேவையும் நடைபெற்று வரவேண்டும்.

ஆனால் இந்த மூன்று சேவைக்கும் பதிலாக 3 மணிக்குப் போகவேண்டிய கொழும்பு பஸ்ஸை 4.30 மணிக்கு அனுப்புவதுடன் இந்த பஸ்ஸில் சகல பயணிகளையும் செல்லுமாறு வற்புறுத்துகின்றனர்.

இதனால் இரவு வேளைகளிலேயே பயணிகள் பொத்துவில் பகுதிக்குச் செல்ல வேண்டி ஏற்படுகிறது. அத்துடன், 2.30 மணிக்கு வரும் பயணிகள் நீண்ட நேரம் காத்து நிற்க வேண்டியுமுள்ளது. அத்துடன் ஒரு பஸ்ஸில் மூன்று பஸ்களுக்குரிய பயணிகள் செல்வதால் மூச்சுவிடக்கூட இடமில்லாத நிலை ஏற்படுகிறது.

இந்த பஸ்சேவையை அக்கரைப்பற்று டிப்போவே மேற்கொள்கிறது. பஸ் போதாது என்று காரணம் கூறியே இந்த சேவைக் குறைப்பு இடம் பெறுகிறது.

# தோட்டப் பகுதிகளில் சீரற்ற பஸ்சேவை!

## திருத்தம் செய்யப்படாத வீதிகள்

பண்டாரவளைப் பகுதியில் போக்குவரத்துச் சீர்கேடுகள் நீண்ட காலமாக நிலவி வருகிறது. பயணத்திற்காக பஸ்ஸுக்குக் காத்து நிற்பதிலேயே தமது பெரும்பாலான நேரங்கள் வீணே கழிந்து விடுவதாக பயணிகள் வேதனைப்பட்டுக்கொள்கின்றனர்.

தினமும் பயணம் செய்யும் அலுவலர்கள், மாணவர்கள் ஆகியோர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகிறார்கள். பிரயாணத்திற்காகவே கூடுதலான நேரம் வீணாகக் கழிவதால் வேறெந்த அலுவல்களையும் கவனிக்க நேரம் கிட்டுவதில்லை என்று கவலைப்படுகிறார்கள்.

நீண்ட காலம் பழமை வாய்ந்த ஒரு சில பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. அவையும் இடைவழியில் நின்று விடுகின்றன. தூர இடங்களுக்கான பஸ் சேவையும் இல்லை. அத்துடன் பஸ்கள் நேர அட்டவணைப்படி இயங்குவதுமில்லை. பள்ளி மாணவர்களும், அலுவலர்களும் 6 மணித்தியாலங்களுக்கு மேலாக பஸ்ஸுக்காகக் காத்திருக்க வேண்டிய நிலையுள்ளது. இரவு நேரங்கள் தோட்டப் பாதைகளில் பஸ்சேவை இல்லாததால் தனியார் பஸ்களில் பலமடங்கு கட்டணத்துடன் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

பூனாகலைக்கு இ.போ.ச.பஸ் கட்டணம் 8.50 சதம். ஆனால் அந்தப் பாதையில் செல்லும் தனியார் பஸ்களில் 20.00 ரூபா அறவிடப்படுகிறது. இ.போ.ச. பஸ்சேவை இல்லாததே இதற்குக் காரணம்.

போக்குவரத்துச் சேவையை மேம்படுத்துவதற்காக வேறு பல பகுதிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் பண்டாரவளைப் பகுதி கவனிப்பின்றியே உள்ளது.

இதனிடையே பல வருட காலமாக தோட்டப் பாதைகள் திருத்தம் செய்யப் படாததால் அவை பள்ளமும் படுகுழியும் நிறைந்துள்ளதோடு நடப்பதற்குக்கூட இலாயக்கில்லாததாகக் காணப்படுகின்றன. கிறவல் பாதைகள் மழை காலங்களில் மண் சரிவு ஏற்பட்டு சேறும் சகதியுமாகி விடுகின்றன. பாதசாரிகள் வழுக்கி விழுகின்றனர்.

அரசியல்வாதிகளின் முகங்களைத் தோட்டப் புறங்களில் தேர்தல் காலங்களில் மட்டுமே காணக்கூடியதாக இருக்கும் என்று தோட்டப்புற மக்கள் 'முரசு'க்குத் தெரிவித்தார்கள்.

இதே போன்று பதுளை, பசறை, லுணுகலை தோட்டப் பாதைகளும் நீண்ட காலமாகத் திருத்தம் செய்யப்படாது படுமோசமாகக் காட்சி தருகின்றன.

## 4வது பிறந்தநாள் வாழ்த்து-30.11.1998

**தனுஷன்**



நெடுந்தீவைச் சேர்ந்த தேவகுமாரன்-ஜெயதேவி தம்பதியினரின் செல்வப் புதல்வன் **தனுஷன்** தனது 4வது பிறந்தநாளை 30.11.98 அன்று வவுனியாவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். தனுஷுக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, மற்றும் சுவீடனில் உள்ள அத்தை, மாமா குடும்பத்தினர், மச்சான்மார், சித்தப்பா குடும்பத்தினர், பெரியப்பா குடும்பத்தினர், மற்றும் மாமன்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நெடுந்தீவு காளியம்மன் அருள் பெற்று நல்லாசியுடன் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி ஜெலின் வில்பேட் 09.12.1998

சில்லாலை மாதகலைச் சேர்ந்த வில்பேட்-வலன்ரீனா தம்பதியினரின் செல்வப்புதல்வி ஜெலின் தனது முதலாவது பிறந்த தினத்தை 09.12.1998 அன்று Canada விலுள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை Canadaவிலுள்ள அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அம்மம்மா, மாமா, சித்தி, குட்டிமாமா, பெரியப்பா குடும்பத்தினர், இளையையா குடும்பத்தினர், தொட்டப்பா, தொட்டம்மா குடும்பத்தினர், இலங்கை சில்லாலையிலுள்ள பெரியப்பா குடும்பத்தினர், கொழும்பிலுள்ள மாமி குடும்பத்தினர், அரிப்பிலுள்ள சின்னையா அன்ரி குடும்பத்தினர் முல்லைத்தீவிலுள்ள பெரியையா குடும்பத்தினர், பிலிப்பைன்சிலுள்ள பெரியமாமா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்புடன் பல்லாண்டுகாலம் குழந்தை இயேசுவின் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: ஜெல்பா


## விளம்பரப் பகுதி

**காண்டம்**


முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு–6.
T.P:- 586218

**New Victors**



பழுது பார்க்கும் இடம்
**நியூ விக்ரஸ்**
40 1/3, காலி வீதி,
(அலெக்சான்ற்றா வீதிக்கு அருகில்)
வெள்ளவத்தை.

**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள்.
இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
067-50349


## ஓராண்டு நினைவு



திதி:~ 1998.11.23

**பூபதி அம்பலவாணர்**

(அதிபர், இ/தும்பற தமிழ் வித்தியாலயம்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 1941.08.14 | 1997.12.03 |

குடும்பத்துக்கேற்ற
குலவிளக்காய்ச் சுடர்விட்டு
வளங்கள் பல வோங்கி
வாழ்வின் ஒளி பெருக்கி
துலங்க வைத்த தெய்வத்
திருவுருவே..... உனைப்பிரிந்து
ஓராண்டு உருண்டோடி
மறைந்து விட்டதம்மா-நாம்
மறந்துவிடவில்லை?உனை
மனக்கோவில் தனில் வைத்து
தினந்தோறும் பூசித்து
போற்றி வருகின்றோம்!

கணவர், பிள்ளைகள்

தகவல்:-வேலுப்பிள்ளை அம்பலவாணர்
(ஒய்வுபெற்ற பாடசாலை அதிபர்)


**STUDY IN SWITZERLAND, CYPRUS, AUSTRALIA & UNITED KINGDOM**

SPECIALLY HOTEL MANAGEMENT COURSES & OTHER COURSES OF YOUR CHOICE. PAID INTERNSHIP IS INCLUDED IN HOTEL MANAGEMENT COURSES.

APPLY NOW FOR JANUARY 1999 INTAKE.

For Details Contact.

**DALUWATTA & JAFFE ASSOCIATES**

L.G. 15, PEOPLES PARK,
COLOMBO - 11.

TEL: 320139, 075-336437, 852525,
FAX: 433597


## மூன்றாவது ஆண்டு நிறைவு –கண்ணீர் அஞ்சலி

மலர்வு 11-02-1960



உதிர்வு 05-12-1995

**திருமதி ஹரிச்சந்திரா சுந்தரலிங்கம்**

மண்ணக வாழ்வில் வளமுடன் வாழ்வதற்கு
விண்ணகத் தெய்வம் விருப்புடன் எமக்கு
வழங்கிய பரிசாம் ஹரிச்சந்திராவை,
புதுக்குடியிருப்பு வழியிலே தொலைத்தோம்.
ஐங்கரர்க்குப் பூசை செய்ய அன்னை
ஹரிச்சந்திராவுடன் சென்றாயே....
செல்வமகனே 'ரஜினிகாந்த்' நீ எங்கே?
உண்டோ? இலதோ உயிர் என்று தெரியாமல்
எண்ணி மனமிரங்கி ஏங்கித் தத்தளிக்கும்
சோக வருடம் மூன்றாச்சுதடா....'
பண்பாய்ப் பாசமாய் பழகிய எங்கள்
பசுமைத் தென்றலைப் பறித்து அழித்த
கொலைக்கரச் செயலை விதியென்பதுவா?
கொடுமைக் காரரைக் கூற்றம் என்பதுவா?
இறைவா! இன்ப வீடருள்பவனே
எங்குலக் கொழுந்தை உன் இணையடி சேர்ப்பாய்.
பொங்கும் இன்பப் பெரும் பேறருள்வாய்.
மங்கலம், மங்கலம், மங்கல விநாயகா,
உங்கள் பிரிவால் துயருறும் கணவன், பிள்ளைகள்,
தாய், தந்தை சகோதர சகோதரிகள், மைத்துனன்மார்,
(சுவிஸ், ஜேர்மன், இலண்டன்)

தகவல் : திருமதி அ. சிவப்பிரகாசம்
(ஒய்வு பெற்ற ஆசிரியை)
காரைதீவு-08.


**NISACO STEEL FURNITURE**




Special Discount on This Month Only

Open on Every Sunday 8.am to 8.pm

**நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்**

204, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவல. Tel : 074-201727 Fax : 075-515168
(Opposite Buddagosha Vidyalaya)

**FACTORY & SHOW ROOM**

Millagaha Estate, Aturugiriya Road, Hokandara North, Hokandara, Tel: 561367
(Near the telecommunication Exchange Hokandara)

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# ஜயசிக்குறுய் 20 ஆயிரம் பேர் இருந்தால் போதுமா?

'ஜயசிக்குறுய்' நகர்வின்றி நிற்கிறது. ஆனால் தினமும் ஸ்கோர் கூறப்படுகிறது.

'ஜயசிக்குறுய்' தொடருமா? இல்லையா? என்ற கேள்விக்கே இடமில்லை.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை மட்டுமே 'ஜயசிக்குறுய்' தொடர வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கிறார் என்று கூறப்படுகிறது. அது தவறான வியாக்கியானம். அவரும் பிடிவாதமாக இருக்கிறார் என்பதுதான் உண்மை.

ஜனாதிபதி முதற்கொண்டு ஆளும்கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள்வரை 'ஜயசிக்குறுய்' வெற்றியை விரும்புகின்றனர்.

'ஜயசிக்குறுய்' சக்கரங்கள் முன்னோக்கிச் சுழன்றால்தான், இன்றைய ஆளும்கட்சியின் எதிர்காலக் கனவுகள் கைப்பட முடியும்.

மிகவும் அப்பட்டமாக தெரியும் இந்த உண்மையை சில சௌகரியங்களுக்காக மறைக்க விரும்புகிறார்கள் சில விமர்சகர்கள். அவர்கள் ஜெனரல் ரத்வத்தைமீது மட்டும் போருக்கான பழியைப் போட்டுவிடுகின்றனர்.

யுத்தத்தை எப்படி முன்னெடுப்பது என்பதிலும், இந்த யுத்தம் மூலமாக சிலர் பெறும் அதிக முக்கியத்துவம் தொடர்பாகவும் ஆளும் கட்சிக்குள் முனகல்களும், முரண்பாடுகளும், பனிப்போரும் நிலவுகின்றன.

அவை எவ்வகையிலும் போரை நடத்தி அதன் வெற்றியை அரசியல் மூலதனமாக்கும் கருத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை;

போரை நடத்துவதில் ஜெனரல் ரத்வத்தைக்கு சற்றும் குறையாத ஆர்வமும், ஈடுபாடும் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் இருக்கிறது. அதனை அவர் வெளிப்படுத்தியும் வருகிறார். தமிழில் மட்டும் சில விமர்சகர்களும், கட்சிகளும் ஜனாதிபதியின் ஈடுபாட்டைக்கூறக் கூச்சப்படுகின்றனர்.

யாழ் குடாநாட்டுப் பயணிகளுக்கு கப்பல் சேவை விடுமாறு தமிழ்க் கட்சிகள் கேட்ட போது, "போர் நடக்கிறது. படையினருக்கே முன்னுரிமை தரமுடியும்" என்று திட்ட வட்டமாக கூறினாராம் ஜனாதிபதி.

'90 வீதமான யுத்தம் முடிந்து விட்டது' என்றும் தென்னிலங்கைக் கூட்டங்களில் ஜனாதிபதி கூறிவருகிறார்.

'ஜயசிக்குறுய்' வெற்றிச் செய்தியை கொண்டுவந்து ஜெனரல் ரத்வத்தை ஜனாதிபதியிடம் கொடுப்பார். அதே சூட்டோடு வாக்குச் சீட்டுகளை வாக்காளர்களிடம் கொடுத்து தேர்தலில் வெற்றிச் செய்தியை பெற்றுவிட வேண்டும் என்பதுதான் ஆளும் கட்சியில் தலை முதல் கால் வரை ஓடிக்கொண்டிருக்கும் எண்ணம்.

ஆகவே, 'ஜயசிக்குறுய்' தொடரும். அரசாக முன்வந்து நிறுத்தப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

தற்போது 'ஜயசிக்குறுய்'யின் சக்கரங்கள் சேற்றில் புதையுண்ட நிலையில் உள்ளன.

ஓயாத அலைகள்-02 மற்றும் மாங்குளத்தை கைப்பற்ற கொடுத்த இழப்புக்கள் என்பவற்றின் தாக்கத்தில் இருந்து இதுவரை மீளவில்லை.

பருவமழைக்காலத்திற்கு முன்னர் மூச்சுப் பிடித்து முயன்று ஜயசிக்குறுய் நகர்வில் ஒரு தீர்க்கமான கட்டத்தை அடையவே திட்டமிடப்பட்டது. அதற்கேற்பவே மாங்குளம் முனையிலும், கிளிநொச்சி முனையிலும் படைகள் குவிக்கப்பட்டும் அணிகள் புனரமைக்கப்பட்டும் ஆயத்தங்கள் துரித கதியில் நடந்தன.

ஓயாத அலைகள்-02 எதிர்பாராத திருப்பத்தை ஏற்படுத்தி, 'ஜயசிக்குறுய்' நகர்வை முட்டுச் சந்துக்குள் முடக்கிவிட்டது.

'ஜயசிக்குறுய்'யின் சக்கரங்களை மீட்டெடுத்து, முன்னொக்கி நகர்த்த ஆட்பலம் தேவைப்படுகிறது.

போரை பூர்த்தி செய்ய மேலும் 20 ஆயிரம் பேர் உடனடியாக தேவை என்று படைத்தரப்பு அவசரமாக அறிவித்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட படை பலத்துடன் புலிகளை முறியடித்து விடலாம் என்று புறப்பட்ட 'ஜயசிக்குறுய்', இன்று படைபலம் மேலும் இருந்தால்தான் நகரமுடியும் என்ற கட்டத்தில் இருப்பதையே அவசர ஆட்திரட்டல் மூலம் அறிய முடிகிறது.

இத்தனைக்கும் 'ஜயசிக்குறுய்' ஆரம்பமான போதே அதன் ஆட்பலமும், ஆயுத தளபாட பலமும் புலிகளைவிட மலையளவு அதிகம்.

இராமாயணக் கதையில் வாலி என்னும் பாத்திரம் ஒன்று வருகிறது. தன் எதிரில் உள்ளோரின் பலத்தில் பாதி வாலியிடம் போய்விடுமாம்.

புலிகளிடம் அப்படி எந்தச் சக்தியும் கிடையாது. அதனால் களநிலவரம் மாயமும் அல்ல, மந்திரமும் அல்ல. புலிகளின் மனோபலமும், தலைமையின் வழி நடத்தலுமே படைத்தரப்பின் கணிப்புக்களை தலை கீழாக்கி இருக்கிறது.

ஆட்பலத்தை மேலும் அதிகப்படுத்தல் மட்டும் களத்தில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது தப்பான கணிப்பு.

1968ம் ஆண்டு வட அயர்லாந்துக்கு பிரிட்டன் படைகள் சென்றபோது, ஐ.ஆர்.ஏ. இயக்கத்தின் கதை சில மாதங்களுக்குள் முடிந்து விடும் என்று சூளுரைத்தே அனுப்பப்பட்டன.

29 வருடங்களின் பின்னரும் ஐ.ஆர்.ஏ. அழியவில்லை. அதன் பலம் கூடியுள்ளது. அன்று அழிக்கப் படையனுப்பிய பிரிட்டிஷ் அரசு இன்று பேச்சு நடத்த வேண்டியதாகியது.

ஒரு ஐ.ஆர்.ஏ. போராளிக்கு நூறு பிரிட்டிஷ் துருப்புக்கள் வீதம் ஈடுபட்டும், வெற்றி எட்டாக்கனிதான்.

வியட்நாமியப் போராளிகளை அடக்க பல இலட்சக்கணக்கான அமெரிக்கத் துருப்புக்கள் படு நவீனமான ஆயுதங்களுடன் போரில் குதித்தன. இறுதியில் 10 வருட போரின் பின்னர் 56 ஆயிரம் அமெரிக்கப் படைகள் பலியாகின. வெற்றி கைக்கெட்டவில்லை.

1961ல் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்த எரித்திரிய போராளிகளை ஒடுக்க எதியோப்பியாவின் அரசு பெரும் படை அனுப்பியது. 31 ஆண்டுகள் வேட்டை நடத்தியும், இறுதியில் தோல்வியை அணைத்தபடி எதியோப்பியா துவண்டுபோனது. எரித்திரியா தனி நாடாக உதயமானது.

சீனாவில் மாபெரும் மக்கள் யுத்தத்தை நடத்தியவர் மா.ஓ.சேதுங். மாபெரும் மக்கள் இராணுவத்தை கட்டியமைத்து ஜப்பான் ஆக்கிரமிப்பாளர்களை தோற்கடித்தவர்.

ஆயுதங்கள் மட்டும் போரின் வெற்றி தோல்வியை தீர்மானித்துவிட முடியாது என்பதையே மா.ஓ.சேதுங் தன் வெற்றிகரமான அனுபவங்கள் மூலம் உலகுக்கு அறிவித்தார்.

எனவே, ஆட்பலத்தை அதிகரிப்பது மூலம் தமது இலக்குகளை எட்டலாம் என்று அரசு போடும் கணக்கு தப்புக் கணக்குத்தான்.

களநிலவரத்தையோ, மறுதரப்பின் பலம், பலவீனங்களையோ நிதானமாக எடைபோட முடியாதளவுக்கு, தேர்தல்கள் நெருங்கும் அவசரம் அரசின் கண்ணை மறைக்கிறது.

ஜனவரியில் மாகாண சபைத் தேர்தல் என்றவர்கள், மார்ச் மாதத்தில்தான் நடக்கும் என்கின்றனர். அதற்கு பல காரணங்களையும் சுற்றிவளைத்து கூறுகின்றனர்.

காரணம் என்ன கூறினாலும், தேர்தல்களை நடத்த அரசு எதிர்பார்க்கும் செய்தி என்ன? சூழல் என்ன? என்பது யாவரும் அறிந்ததே.

'ஜயசிக்குறுய்'யில் குறிப்பிடத்தக்க திருப்பம் தமக்கு சாதகமாக ஏற்பட்டால் மட்டுமே எத் தேர்தலையும் சந்திக்கக்கூடிய நிலையில், பொது ஜன முன்னணியும் சிக்கலில் மாட்டியிருக்கிறது.

புலிகளின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்க புறப்பட்ட 'ஜயசிக்குறுய்' இப்போது பொது ஜன முன்னணியின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கிவிட்டு நிற்கிறது.

இந்த சலிப்பும், எரிச்சலுமே கிளிநொச்சியில் மூர்க்கமான விமானக் குண்டு வீச்சுக்கு காரணம்.

கிளிநொச்சியில் பதுங்குகுழிகள், நிலக்கீழ் காப்பரண்கள், நிலக்கீழ் நகர்வு அரண்கள் (மூவிங்பங்கர்) போன்றவை உள்ளன. விமானச் சத்தம் கேட்டதுமே புலிகள் அவற்றுக்குள் பதுங்கி நிலை எடுத்துவிடுவர்.

விமானக்குண்டு வீச்சு, ஷெல்லடி போன்றவற்றுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வலுவான அரண்கள் அவை. அவற்றைக் கெட்டியாக கொங்கிறீட் போட்டு கட்டி அமைத்ததே படையினர்தான்.

எனவே, தமது குண்டு வீச்சால் கிளிநொச்சியில் உள்ள புலிகளின் முன்னணி அரண்களை அழிக்க முடியாது என்பது படையினருக்கு தெரியாமல் போயிருக்குமா? பின்னர் ஏன் குண்டுத் தாக்குதல்? நாம் அறிந்தவரை 15 குடிமக்கள்தான் பலியாகி உள்ளனர்.

ஒன்றரை வருடகால 'ஜயசிக்குறுய்' நீடிப்பின் சலிப்பும், சாண் ஏற முழம் சறுக்கும் எரிச்சலும் இணைந்த வெளிப்பாடுகளா இவை? என்று கேட்கத் தோன்றுகிறது.

ஆகவே, வெற்றி பெறும் இராணுவ அவசரம் இலக்கை எட்டுவதற்கு பதில், பெரும் நாசங்களையே ஏற்படுத்தும்.

இந்த நாசங்கள்கூட படையினர் எதிர்பார்ப்பதற்கு மாறாக புலிகளுக்கு ஆட்பல வளத்தையே உருவாக்கிக் கொடுக்கும்.

அதேசமயம், படையில் சேரும்படி அரசு அழைப்பு விடுத்தாலும்கூட எதிர்பார்க்குமளவுக்கு சேர்வு இருக்காது.

புதிதாக படையினரை சேர்ப்பது இருக்கட்டும், படையில் இருந்து தப்பியோடுபவர்களை மறுபடி கொண்டுவந்து சேர்ப்பதே முயற்கொம்பாக இருக்கிறது.

ஆனால், புலிகளில் புதிய உறுப்பினர்கள் சேரும் வீதம் அதிகமாக இருக்கிறது.

தற்போதைய கட்டத்தில்கூட இயக்கத்தை விட்டு ஒதுங்க விரும்புவோருக்கு புலிகள் அனுமதியளிக்கின்றனர். குறிப்பிட்ட காலம் இயக்கத்தில் இருந்தவர்கள் விலக விரும்பினால் விலக இடமுண்டு.

வற்புறுத்தியோ, கட்டாயமாகவோ இயக்கத்தில் வைத்திருந்தால் போர்க் குணம் இருக்காது என்பது புலிகளது நம்பிக்கை.

ஆனால், படைத்தரப்பு தன்னிடமிருந்து விலகி ஓடியவர்களையும் பிடித்துவந்து மீண்டும் போர் முனைக்கு அனுப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

இந்நிலையில் ஆட்பல உயர்வு மட்டும் களநிலவரத்தில் மாற்றங்களை உருவாக்கப் போவதில்லை என்பது உறுதி.

▫▫▫

# பாட்டும் ஆயுதமும்



புலிகளின் முகாம்களிலும் மகிழ்ச்சிக்கு குறைவில்லை. ஆனால் 'பைலா' ஆட முடியாது. எழுச்சிப் பாடல்களை மட்டுமே பாட முடியும். அப்போதும் ஆயுதம் கையில் இருக்கும்.

# புலிகளின் குரல் தொடுத்துள்ள பிரசார போர்

புலிகளின் குரல் வானொலியில் சிங்கள சேவை ஆரம்பமாகி விட்டது. புலிகளைப் பொறுத்தவரை இது எப்போதோ தொடங்கியிருக்க வேண்டியது.

படை உயர் தரப்புக்கும், அரசுக்கும் பலத்த அதிர்ச்சி. பிரசார ரீதியில் மட்டுமல்ல, இராணுவ தரப்பை உளவியல் ரீதியிலும் குறிவைத்தே சிங்கள சேவை தொடங்கப்பட்டுள்ளது.

இது சாதாரண விஷயமல்ல. இதன் தாக்கங்கள் எதிர்காலத்தில்தான் தெரியும்.

சமரின் போது தணிக்கை காரணமாக கள முனையில் உள்ள படையினருக்கும் செய்திகள் கிட்டுவதில்லை. இனிமேல் புலிகளின் குரல் சிங்கள சேவை விலாவாரியாக விபரங்களை தெரிவிக்கும்.

தற்போது புலிகளின் சிங்கள சேவையை தெளிவாக கேட்காமல் குழப்புகின்றனர்.

ஆனால் இதனை தொடர்ந்து செய்ய முடியாது.

படைத்தரப்பு புலிகளின் குரல் வானொலியை கேட்டால் கிலேசமடையும் என்று அரசு நினைப்பதால்தான் குழப்புகிறது.

ஆனால், முக்கிய சமர் நேரங்களில் புலிகளின் சிங்கள சேவையை குழப்பினால் அது கூட படைத்தரப்புக்குள் சந்தேகங்களை தோற்றுவித்துவிடும்.

சிங்கள சேவை ஆரம்பித்த அன்றே 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு எதிரான தமது முறியடிப்புச் சமர் தொடர்பாக புலிகள் விபரங்களை வெளியிட்டனர்.

புலிகளின் குரல் வன்னியில் மட்டுமல்ல, யாழ் குடாநாட்டிலும் பல பகுதிகளில் கேட்கிறது. எனவே அங்குள்ள படையினரும் செவிமடுக்கப் போகின்றனர்.

படையினரின் உளவியல் தரத்தை உயர்த்த அரசு சிரத்தை காட்டும் நேரத்தில், சிங்கள சேவையை புலிகள் தொடங்கியிருப்பது பலத்த அடிதான்.

புலிகள் ஏவும் ஆட்டிலெறி ஷெல்களை விட, புலிகளின் குரல் சிங்கள சேவைக்கு சக்தி அதிகம். ஏற்படுத்தப்போகும் சேதமும் அதிகமாக இருக்கப்போகிறது.

யுத்தத்தில் பிரசாரப் போருக்கு ஒரு முக்கிய பங்கு இருக்கிறது. ஆனால் நம்பகத்தன்மை முக்கியம்.

அரசின் பிரசார சாதனங்கள் நம்பகத்தன்மையை இழந்துவிட்டன. அவற்றால் சாதாரண மக்களையோ, தமது தரப்பை யோகூட நம்பவைக்க முடியவில்லை. தப்பித் தவறி உண்மையைச் சொன்னால்கூட நம்ப ஆளில்லை.

ஆகவே, அவற்றால் தமது எதிரிகளுக்கு எதிரான பிரசாரப் போரை நடத்தவோ, எதிர்த் தரப்பில் குழப்பங்கள், மன மாற்றங்கள் என்பவற்றை ஏற்படுத்தவோ இயலாது. ஆகவே பிரசாரப் போரில் மிக பலவீனமான நிலையிலேயே அரசு உள்ளது.

இந்நிலையில் புலிகளின் குரல் கூறுவதை அரசின் பிரசார சாதனங்கள் மறுத்தால்கூட எடுபடாது.

எனவே, வடக்கில் புலிகளின் பிரசாரப் போரையும் அரசு எதிர்கொள்ள வேண்டும்.

90 வீதமான போர் முடிந்து விட்டதாக ஜனாதிபதி கூறியிருந்தார். களநிலவரத்தை பார்க்கும் போது இனிமேல்தான் 90 வீதமான போருக்கு இடமிருக்கிறது என்றே தோன்றுகிறது.

சர்வதேச அளவிலும் புலிகள் பிரசாரப் போரில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

மாவீரர்தின உரை நிகழ்த்தப்பட்டு அடுத்த ஐந்து நிமிடங்களுக்குள் இன்டர்நெட்டில் வந்துவிட்டது. பிரபாகரனின் படங்களும் பல கோணங்களில் காணப்பட்டன.

மொத்தத்தில் புலிகளின் பார்வையும், செயற்பாடும் சகல முனைகளிலும் விரிவாகி வருகின்றது.

# ஆட்டமும் பாட்டமும்




வவுனியாவில் இராணுவத்தினர் மத்தியில் 'பைலா' குதூகலம். அமைச்சர்களும் பங்குகொண்டு ஆடினார்கள். பெண் சிப்பாய் ஒருவர் 'பைலா' பாட்டுக்கு ஆடுகிறார்.

இந்த நிகழ்ச்சியை சுயாதீன தொலைக்காட்சி ஒளிபரப்பியது. படையில் சேருவது சந்தோசங்களை இழக்கும் விஷயமல்ல என்று விளம்பரம் செய்வது மாதிரி இது அமைந்தது.

ஆனால் கள முனையில் உள்ள படையினர் தமது உள்ளாடைகளை மாற்றக்கூட அவகாசம் இன்றி அவதிப்படுவதாக கொழும்பு ஆங்கில பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

**நாரதர்**

# அதிரடி அப்பாத்துரை



ரெண்டு எழுத்தாரின் வானூர்தியை கடல் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு தரப்பார் துரத்தித் துரத்தி அடித்தது என்பது உண்மையான கதையல்ல. சத்தம் வந்த பக்கமாக சில துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்யப்பட்டனவாம். அவ்வளவுதான் நடந்தது. அதெல்லாம் கிடக்க வானூர்தியே அவையிடம் இல்லையென்றும் சொல்லுகினம். சுட்டது என்றும் சொல்லுகினம். ஒன்றுமே புரியவில்லை உலகத்திலே!

**நாகர், தேவர்தான்** இலங்கையின் மூத்த குடிமக்கள் என்று சக்தியானவர் கூறியிருக்கிறார். அறிக்கை விடப் போகிறார் என்றெல்லாம் தமிழ்க்கட்சிகள் கூறியதாக செய்திகள் வந்து பல வாரங்களாகிவிட்டன. அறிக்கையும் வரவில்லை; வருத்தமும் வரவில்லை. தமிழ்க்கட்சிகளுக்கு பெப்பெ. இனியாவது அடுத்தார் சார்பாக இவர்கள் பேச்சாளர்களாக மாறாதிருப்பார்களாக!

**கூட்டான கட்சியின்** சம்பந்தமானவர் அரச தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் உண்மையான முகத்தை காட்டிப் போட்டார். தொல்லை தவிர்ப்புக்குழுவால் கைதுகள் கணிசமாகக் குறைந்திருக்கிறதாம். ஹி.ஹி.ஹி. அண்ணருக்கு நாட்டு நிலையே தெரியவில்லைப் போல கிடக்கு! வர வர நிலமை மோசமாகுது என்ற உண்மையை முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பதுபோல மறைச்சுப் போட்டார். அவரது பேட்டி வெளியான தினத்தன்றும் பலர் சந்தேக கேஸில் உள்ளே கிடந்தவை. அரச சட்டத்தரணியாக மாறிவிட்டார்.

**கொழும்பு தமிழ்ப்** பத்திரிகை ஒன்று சம்பந்தமானவர் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கேட்டு வெகுஜன சபையில் உரையாற்றியதாக செய்தி வெளியிட்டது. அதை சம்பந்தமானவரும் மறுக்கவில்லை. ஆனால் அவர் அப்படிப் பேசவேவில்லை. மூன்றாம் நபர் உதவி தேவை என்றுதான் கூறியவர். அதைத்தானே அதிகாரத்தரப்பாரும் கூறுகினம். மத்தயஸ்தர் (மீடியேட்டர்) என்பவர் பேச்சு முழுக்க இருப்பவர். தகுந்த தீர்ப்புக்கு அழுத்தம் கொடுக்கக் கூடியவர். சம்பந்தமானவர் கூறும் உதவியாளர் அல்லது தொடர்பாளர் என்பவர் (கோடினேட்டர்) இரு தரப்பையும் கைகுலுக்க வைத்துப் போட்டு அவர் கழன்று விடுவார். பிறகு இவை பேசியும் கொள்ளலாம்; முறித்து மோதியும் கொள்ளலாம்.

**வவுனியாவில்** மாணவர்களை ஒவ்வொரு இயக்கமும் தங்கள் மாணவர் அமைப்பில் வைத்திருக்கினம். வகுப்பில் பிரச்சனை வந்தால் ஆளாளுக்கு இயக்கப் பெயர் கூறுகிறார்களாம். சமீபத்திய மகா வித்தியாலயம் ஒன்றில் பலத்த அடிபாடு. ஆளாளுக்கு அடையாள அட்டை காண்பித்தார்களாம். வாத்தியாரும் பயப்பட வேண்டிய சூழ்நிலை. பெற்றோர்களுக்கும் பயம்தான். அடி வாங்கிப்போட்டு துவக்குடன் வந்து நின்றால் என்ன செய்கிறது?

**சமீபத்தில் வவுனியாவில்** கூட்டுறவுசங்கத் தலைவர் கொலைக்கும் தமக்கும் தொடர்பே இல்லையென்று தமிழ்க்கட்சிகள் எல்லாம் சொல்லுகினம். ரெண்டு எழுத்தார் செய்யவில்லை என்றும் இதே கட்சிகளே சொல்லியும் இருக்கினம். மூடைத்தரப்பும் காரணம் இல்லை என்று தெரிஞ்சுபோச்சு. அப்ப யார்தான் செய்தது? இது என் நண்பரின் நண்பர் ஒருவர் முடியைப் பிய்த்தபடி கேட்ட கேள்வியாகும். வவுனியாவில் லேட்டஸ்ட் தந்திரம் என்ன தெரியுமோ? கொலையும் செய்துவிட்டு அனுதாபமும் தெரிவிப்பதுதானாம்!

**தலைநகரில்** சோதனை அரண்களில் ரெண்டு எழுத்தாரின் விமானங்களை எப்படி இனம் காண்பது என்று சுவரொட்டிகளில் விளக்கம் கொடுத்திருக்கினம். படிச்சுப் பார்க்கலாம் என்றால் பயமாகக் கிடக்கு. பெரும்பான்மை இனத்தார் மட்டும்தான் துணிந்து நின்று வாசிக்கினமாம். நாம் வாசிப்பானேன்? பின்னர் உள்ளே போய் வசிப்பானேன்?

**கிழக்கின் தனித்துவத் தலைவரை** 'தேசியத் தலைவர்' என்று கூட்டான கட்சியின் சங்கதியார் போற்றியுள்ளார். கூட்டான கட்சியில்தான் தாமும் இருந்ததாக தனித்துவத் தலைவர் கூறுவது தெரிந்ததே! அப்படிப் பார்த்தால் கூட்டான கட்சியை விட்டு கழன்றால் தான் இப்படி வளர்ச்சி காண முடிந்தது என்றல்லோ அர்த்தம்? கூட்டான கட்சிக்குள் இருந்திருந்தால் தேசியத்தலைவராக முடியாது. தேமிற தலைவராகத்தான் முடியும். பாருங்கோ சங்கதியார் எந்தளவுக்கு தேய்ந்து போனார்?

**வடக்கு கிழக்குக்கு** புதிதாக ஆளவந்தார் விடும் அறிக்கைகளைப் பார்த்து தமிழ்க் கட்சிகள் சில கலக்கத்தில் இருப்பதாகக் கேள்வி. மளமளவென்று வாக்குறுதிகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார். தங்களுக்கு அறிக்கைவிட சந்தர்ப்பமே இல்லாமல் செய்து போடுவாரோ என்றுதான் கலங்கிப் போயிருக்கினம்!

**அன்றாடப் பிரச்சனைகள்** நூறு என்றால், எப்போதாவது அதில் ஒன்று தீர்க்கப்படுகிறது. அது யார் கதைத்து தீர்க்கப்படுகிறது, என்று உரிமை கோருவதில் தமிழ்க் கட்சிகளுக்குள் பலத்த போட்டி. யாழில் மீன்பிடித் தடை சற்றுத் தளர்த்தப்பட்டதற்கு பல கட்சிகள் உரிமை கோரியுள்ளன.

**சமீபத்தில் படித்த** இந்தப் பொன்மொழிக்கு உங்களுக்கு அர்த்தம் புரிகிறதா பாருங்கள்.....!

**"தான் உண்மையாக நேசிக்கும் பெண்ணை ஒருவனால் வெற்றி கொள்ளவே முடியாது!"**

# அரசு படைகளுக்கும் தமிழ் கெரில்லாக்களுக்கும் இஸ்ரேல் பயிற்சி

**1991ம்** ஆண்டின் ஆரம்பத்தில் சர்ச்சைக்குரிய தகவல் ஒன்றை இஸ்ரேலிய உளவாளி ஒருவர் வெளியிட்டிருந்தார்.

இஸ்ரேலிய 'மொசாட்'டில் இருந்து வெளியேறிய ஒஸ்ரோஸ்கி எழுதிய புத்தகம் ஒன்றிலேயே சர்ச்சைக்குரிய அத் தகவல் வெளியானது.

'பை வே ஒ.ஃப் டிசெப்ஷன்' என்ற பெயரில் எழுதப்பட்ட அந்த நூலில் மொசாட் பற்றிய பல தகவல்கள் அம்பலமாகின.

அதில் ஒரு தகவல் இலங்கை தொடர்பானது.

இலங்கை அரச படைகளுக்கும், தமிழ் கெரில்லாக்களுக்கும் ஒரே காலகட்டத்தில் ஆனால் வெவ்வேறு இடங்களில் வைத்து இஸ்ரேலில் பயிற்சியளிக்கப்பட்டது என்று ஒஸ்ரோஸ்கி தெரிவித்திருந்தார்.

இத் தகவல் வெளியானதும் இலங்கையிலும் பல்வேறு சர்ச்சைகள் எழுந்திருந்தன.

இஸ்ரேலிடம் இலங்கை அரசு ஏமாந்து விட்டது. பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டியிருக்கிறது இஸ்ரேல் என்று சிங்கள விமர்சகர்களும் கருத்து வெளியிட்டனர்.

'இந்திய எப்ரோட்' என்னும் சஞ்சிகை ஒஸ்ரோஸ்கியை பேட்டி கண்டது.

கனடாவில் தலைமறைவாக தங்கியிருந்த ஒஸ்ரோஸ்கி அப் அப்பத்திரிகைக்கு பின்வருமாறு கூறினார்:

"தமிழ் கெரில்லாக்களுக்கு இஸ்ரேலிய உளவுப் படையினர் பயிற்சியளித்தனர். ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தகவல்களை பெறுமளவுக்கு இஸ்ரேலிய உளவு அமைப்புடன் தமிழ் கெரில்லாக்கள் தொடர்பு வைத்திருந்தனர்.

கெரில்லாக்களிடம் போதிய நிதி இருந்ததால் தாம் நினைத்த எதனையும் அவர்கள் வாங்கக்கூடிய நிலையில் இருந்தனர். பணத்திற்கு பின் பண்டம் என்ற அளவிலேயே கெரில்லாக்களுடன் இஸ்ரேலிய உளவு நிறுவன செயற்பாடுகள் இருந்தன.

இலங்கை அரசின் படைகளுக்கு பயங்கர சேதம் விளைவிக்கும் கண்ணிவெடிகள் இஸ்ரேலியர்களின் உபயமேயாகும்.

நான் அறிந்தவரை கெரில்லாக்கள் ஏவுகணைகள் எதனையும் வாங்கவில்லை. இருதரப்பினரும் பல்வேறு வகையான ஆயுதங்களை வாங்கினார்கள்.

இலங்கை அரச படைகளைப் போல கடன் வசதி கெரில்லாக்களுக்கு இல்லையென்பதால் எல்லாவற்றையும் பணம் கொடுத்தே வாங்க வேண்டி இருந்தது என்று அவர் கூறியிருந்தார்.

தற்போதும் தமிழ்க் கெரில்லாக்கள் பயிற்சி பெறுகிறார்களா? என்று கேட்கப்பட்ட போது, "எனக்குத் தெரியாது, ஆனால் சாத்தியம் இல்லை என்று கூறமாட்டேன்" என்றார்.

இலங்கைப் படைகளுக்கும், தமிழ் குழுக்களுக்கும் பயிற்சியளிப்பதை அறிந்த இஸ்ரேலியர்கள் சிலர் "ஏன் இவர்களை சண்டையிட இலங்கைக்கு அனுப்ப வேண்டும்? இங்குள்ள மைதானம் ஒன்றில் இவர்களை மோதவிட்டால் என்ன?' என்று நகைச்சுவையாக பேசிக்கொள்வார்களாம்.

## தலைப்பபுச் செய்தி

இலங்கை அரசின் 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைதான் முதன் முதலில் தலைப்புச் செய்தியாக மொசாட் உளவாளியின் புத்தகம் பற்றிய செய்தியை வெளியிட்டது.

விடுதலைப் புலிகளுக்கு மொசாட் பயிற்சி என்ற தலைப்பில் செய்தி வெளியானது.

ஆனால், மொசாட் உளவாளியின் புத்தகத்தில் எந்தவொரு இடத்திலும் 'விடுதலைப் புலிகள்' என்ற பெயர் இடம் பெற்றிருக்கவில்லை.

'தமிழ்க் குழுக்கள்', தமிழ்க் கெரில்லாக்கள் என்றே ஒஸ்ரோஸ்கி குறிப்பிட்டு சொல்லுகிறார்.

அந்த நூலில் இலங்கையர்களுக்கு பயிற்சி தொடர்பாக எழுதப்பட்ட பகுதியை இங்கு தருகிறோம்.

84 ஜூலை நடுப்பகுதியில் இந்திய அணு ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் தூதுக் குழு ஒன்று இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்திருந்தது. அணுகுண்டுப் பயமுறுத்தல் குறித்து இந்தியா கவலை கொண்டிருந்தது. இஸ்ரேலிய அணுவிஞ்ஞானிகளைச் சந்தித்து தகவல் பரிமாற்றம் செய்ய வந்திருந்தது. ஆனால் இஸ்ரேலியர்கள் தகவல்களை அறிவதில் காட்டிய ஆர்வத்தை தகவல்களை வழங்குவதில் காட்ட வில்லை.

அவர்கள் புறப்பட்ட மறுநாள் ஐம்பது இலங்கையர்கள் வந்து சேர்ந்தார்கள். இலங்கையில் இருந்து பயிற்சிக்கு வருவதாக அமி கூறினார். அவர்களின் வருகைக்காக அமி விமான நிலையத்தில் காத்திருக்கும்போது நான் அவரைச் சந்தித்தேன். அமி எனக்குச் சொன்னார் "அவர்கள் வரும்போது நீ முகம் சுழிக்க வேண்டாம். அவர்கள் குரங்குகள் மாதிரி. அவர்கள் வளர்ச்சியடையாத ஒரு இடத்தில் இருந்து வருகிறார்கள். அவர்கள் மரத்தில் இருந்து இறங்கி அதிக காலம் இல்லை"

வந்த ஒன்பது இலங்கையரையும் (சிங்களவர்கள்) நாங்கள் விமான நிலைய பின் கதவால் ஒரு குளிரூட்டப்பட்ட வாகனத்தில் ஏற்றினோம். பின்பு இந்த எண்ணிக்கை ஐம்பதாகியது. இவர்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டார்கள்.

<u>1. பயங்கரவாத தடுப்புக் குழு:</u> கடத்தப்பட்ட பஸ், விமானங்களை எப்படி மீட்பது, கட்டடங்களில் உள்ள கடத்தல்காரரை சமாளிப்பது, ஹெலிகொப்டரில் இருந்து கயிற்றில் இறங்குவது போன்ற பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களும் யூஸி இயந்திர துப்பாக்கிகள் உட்பட இஸ்ரேலிய தயாரிப்பான ஆயுதங்கள், குண்டு துளைக்காத கவசங்கள், விசேட கிரனேட்டுக்கள் போன்றவற்றை வாங்குவார்கள்.

<u>2. ஆயுத கொள்வனவு குழு:</u> இவர்கள் பெருமளவில் ஆயுதங்கள் வாங்க வந்தார்கள். அவர்கள் ஏழெட்டு பி.ரி.ரக டெவோரா பீரங்கிப்படகுகள் வாங்கினார்கள்.

<u>3. உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு:</u> ராடர் மற்றும் கடற்படை உபகரணங்கள் வாங்க வந்தவர்கள்.

நான் ஜே. ஆரின் மருமகளுக்கு உல்லாசப் பயண இடங்களை இரண்டு நாட்களுக்குக் காட்ட வேண்டியிருந்தது. இதன் பின் தலைமையகத்தில் இருந்து வேறு ஒருவர் அவரைக் கவனிப்பதற்கு நியமிக்கப்பட்டார். பெனி ஒரு இனிமையான பெண், கோறி அக்குவினோ போல். அவர் புத்த மதத்தை சேர்ந்தவர். (அவரது கணவரும் புத்த மதத்தை சேர்ந்தவர்) இருந்தாலும் ஒரு கிறிஸ்தவ பெண் போலவே இருந்தார். இதனால் அவர் கிறிஸ்தவ புனித தலங்களை பார்க்க விரும்பினார்.

அடுத்து ரேடார் உபகரணங்கள் வாங்க வந்த உயர் அதிகாரிகளை கவனிக்க நியமிக்கப்பட்டேன். அஷோத் என்னும் இடத்தில் உள்ள ரேடர் எனுமிடத்தில் உள்ள ரேடார் உற்பத்தியாளர் நிறுவனமான அல்ற்றா கூட்டிச் செல்லும்படி கூறப்பட்டேன். அவர்கள் என்ன வாங்கப் போகிறார்கள் என்ற விபரங்களை அறிந்து நிறுவன பிரதிநிதியிடம் கூறிய போது அவர் சொன்னார் "இவர்கள் ரேடாரை வாங்க மாட்டார்கள்.", "ஏன்?" நான் கேட்டேன். "இந்த விபரங்கள் இந்த குரங்குகளால் எழுதப்படவில்லை. இவை பிரிட்டிஷ் ரேடார் உற்பத்தி நிறுவனமான டெக்காவினால் எழுதப்பட்டது. எனவே தாங்கள் என்ன வாங்க வந்திருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். (இந்த குரங்குகளுக்கு) வாழைப்பழத்தைக் கொடுத்து விட்டு திருப்பி அனுப்பி விடு. உன் நேரத்தை வீணாக்காதே"

"சரி அவர்களைத் சந்தோசப்படுத்த இந்த ரேடாரின் விபரங்கள் அடங்கிய கைநூல் ஏதாவது இருக்கிறதா?" எங்கள் உரையாடல் எபிரேய மொழியில் நடந்தது. வந்தவர்கள் சிற்றூண்டி அருந்திக் கொண்டும் தேனீர், கோப்பி குடித்துக் கொண்டும் இருந்தார்கள்.

தாங்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று இலங்கையர்கள் நினைக்க கூடாது என்பதற்காக அவர்களுக்கு ஒரு விரிவுரை நடத்துவதில் ஆட்சேபனை இல்லை என்றார்.


"நாங்கள் அப்படிச் செய்தால் கொஞ்ச நேரம் சந்தோசமாய் இருப்போம்"

அடுத்த அறை ஒன்றுக்கு சென்று துறைமுகங்களில் சிந்தப்பட்ட எண்ணெயை உறுஞ்சும் இயந்திரங்களின் தொழில் நுட்ப மாதிரிப் படங்களை கொண்டு வந்தார். கண்ணைக் கவரும் வண்ணத்தில் அந்த படங்கள் இருந்தன. எல்லாமே அதில் எபிரேய மொழியில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அவர் அந்த அதிசக்தி வாய்ந்த ரேடார் பற்றி ஆங்கிலத்தில் விரிவுரை நிகழ்த்தினார். என்னால் சிரிக்காமல் இருக்க கஷ்டமாய் இருந்தது. அந்த ரேடார் நீந்திக் கொண்டிருக்கும் ஒருவரின் சப்பாத்தின் அளவு, அவரது பெயர், விலாசம், இரத்த வகை என்பவற்றைக் கண்டு பிடிக்கும் என்று கூறினார்.

அவரது விரிவுரை முடிந்ததும் இலங்கையர்கள் அவருக்கு நன்றி கூறினார்கள். தாங்கள் இந்த தொழில்நுட்ப வளர்ச்சி பற்றி ஆச்சரியப்படுவதாகவும் ஆனால் அவை தங்கள் கப்பல்களில் பொருத்த முடியாது என்றும் சொன்னார்கள். அவர்கள் தங்கள் யுத்தக் கப்பல்களைப் பற்றி எங்களுக்கு சொல்கிறார்கள். அவற்றை நாங்கள் தானே கட்டினோம்.

என்னை ஹோட்டலில் விட்டபோது அவர்கள் ரேடாரை வாங்க மாட்டார்கள் என்று அமிக்கு சொன்னேன். "ஆம், எங்களுக்குத் தெரியும்" அமி பதிலளித்தார்.

இலங்கையில் விசேட அதிரடிப் படை பயிற்சி பெறும் இடத்துக்கு சென்று அவர்களுக்குத் தேவையானவற்றை எடுக்கும்படியும், அவர்களை அன்று மாலை டெல் அவிவுக்கு கொண்டு வருமாறும் அமி கூறினார். அத்துடன் அங்கு இடமாற்றம் செய்யப்பட்ட யோஸியுடன் சகல விடயங்களும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்றும் எச்சரிக்கை செய்தார்.



வெளிநாட்டு பயிற்சி முகாம் ஒன்றில் புலிகள் இயக்க உறுப்பினர். பின்னணியைப் பார்க்கும்போது இஸ்ரேலில் எடுக்கப்பட்ட படம் போன்றே காணப்படுகிறது. எனினும் இது பற்றி உறுதி செய்ய இயலவில்லை.

## தமிழர்களுக்கும்

யோசி இஸ்ரேலியரால் பயிற்சியளிக்கப்படும் ஒரு குழுவைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவரால் பயிற்றுவிக்கப்படுவோர் எனது குழுவைச் சந்திக்க கூடாது. அவர்கள் எனது சிங்களக் குழுவின் பரம எதிரிகள், தமிழர்கள்.

தமிழர்களுக்கு கொமாண்டோ கடற்படைத் தளத்தில் ஊடுருவுதல், கண்ணி வெடி வைத்தல், தொலை தொடர்புகள், டோரா வகை கப்பல்களை தகர்த்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இவர்களில் கிட்டத்தட்ட 28 பேர் ஒவ்வொரு குழுவிலும் இருந்தார்கள். இதனால் யோஸி தமிழர்களை ஹைபாவுக்கு கூட்டிச் செல்வதாகவும் நான் சிங்களவர்களை டெல் அவிவுக்கு கூட்டிச் செல்வதாயும் ஒழுங்காயிற்று. இதனால் ஒருவரை ஒருவர் சந்திக்க மாட்டார்கள்.

சிங்களவர்களும் தமிழர்களும் ஒரே நேரத்தில் கியான் சிர்க்கின் என்ற இடத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது தான் உண்மையான பிரச்சனை தொடங்கியது. அது பெரிய தளமாகும். இருந்தாலும் ஒரு தடவை இரு குழுக்களும் ஒரு உடற்பயிற்சி நேரத்தின் போது சில யார் வித்தியாசத்திலேயே ஒன்றையொன்று கடந்து சென்றன.

தங்கள் அடிப்படை பயிற்சி முடிந்ததும் சிங்களவர்களும் கடற்படை தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். (இஸ்ரேலியர் தமிழர்களுக்கு பழக்கிய போர் முறைகளை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றி)

அவர்கள் டெல் அவிவில் ஒருவரை ஒருவர் சந்திக்காதபடி நாங்கள் அவர்களுக்கு தண்டனைகளையும் இரவு நேரப் பயிற்சிகளையும் உருவாக்க வேண்டியிருந்தது.

அமி என்ற ஒரு மனிதரின் இந்த செயல் வெளியே தெரிந்தால் இஸ்ரேலில் அரசியல் நிலை சிக்கலுக்குள் மாட்டியிருக்கும்.

முன்னாள் பிரதமர் பெரஸ் இது குறித்து தெரிந்திருந்தால் நித்திரையே கொண்டிருக்க மாட்டார்.

மூன்று கிழமை முடிந்ததும் சிங்களவர்கள் அற்லிட் இல் உள்ள மிக இரகசிய கமாண்டோப் படைத்தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். அமி தான் இவர்களுடன் செல்ல மாட்டேன் என்று கூறினார். இலங்கையர்களுக்கு சாய்ரேட் மட்கல் பயிற்சி அளிக்கும். இந்த அமைப்பு தான் எண்டபே தாக்குதலை நடத்தியது.

# நூல் கிளப்பிய சர்ச்சை!

"பார் எங்களுக்கு ஒரு பிரச்சனை. இந்தியாவிலிருந்து 27 பேர் கொண்ட விசேட குழு ஒன்று வரவிருக்கிறது" அமி கூறினார்.

"கடவுளே, என்ன இது, எங்களிடம் சிங்களவர்கள் வந்தார்கள். தமிழர்கள்.. இப்போது இந்தியர்கள். அடுத்தது யார்?" நான் வினா எழுப்பினேன்" என்று தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## புலிகள் மறுப்பு

மேற்படி புத்தகம் தொடர்பாக இலங்கை அரசின் பத்திரிகை வெளியிட்ட செய்தி தொடர்பாக புலிகள் மறுப்பொன்றை விடுத்திருந்தனர்.

குறிப்பிட்ட நாலிலோ, அல்லது ஒஸ்ரோஸ்கியின் பேட்டியிலோ புலிகள் என்ற பதம் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

அவ்வாறு இருந்தும் அரச பத்திரிகை புலிகள் என்று குறிப்பிட்டுள்ளது.

தமிழ்ப் போராளிகள் இஸ்ரேலிடம் பயிற்சி பெற்றார்களா? இல்லையா? என்பதல்ல. சம்பந்தப்பட்ட புத்தகத்தில் புலிகளுக்கு மொசாட் பயிற்சி அளித்ததாக எந்த ஆதாரக் குறிப்பும் இல்லை என்பதும், அப்படி இருந்தது என்று அரச ஆதரவு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன என்பதுமே கவனிக்க வேண்டியதாகும் என்று புலிகள் கூறியிருந்தனர்.

இம் மறுப்பை புலிகளின் 'உலகத் தமிழர்' பத்திரிகையே வெளியிட்டிருந்தது. விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக மறுப்பு எதனையும் வெளியிடவில்லை.

## பேச்சு வதந்திகள்

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்தைகள் ஆரம்பமாகப் போகின்றன என்று பத்திரிகைகள் சில ஊகங்கள் வெளியிட்டன.

இவ்வாறு ஆதாரமோ, போதிய விபரமோ இன்றி ஊகங்கள் வெளியிடப்படுவது தொடர்கதை.

1991ல் அருளர் யாழ்ப்பாணம் சென்று புலிகளை சந்தித்துவிட்டு வந்தார்.

ஈழப்புரட்சி அமைப்பில் (ஈரோஸ்) ஒரு காலத்தில் அங்கம் வகித்தவர் அருளர். 'லங்காராணி' என்ற நாவலையும் எழுதியவர்.

'லங்காராணி' சிறந்த நாவல் என்பதில் ஐயமில்லை. ஈழப்போராட்ட வரலாற்றில் முதலாவது நாவல் என்ற பெருமையும் அதனைச் சேரும்.

ஈழம் உருவானால் மட்டும் போதாது, உருவாகும் ஈழம் சோசலிச ஈழமாகவும் இருக்க வேண்டும் என்பதை கதையோட்டத்தில் மிக எளிமையாக விளக்கி இருந்தார் அருளர்.

சகல இயக்கங்களுடனும் தொடர்புடைய ஒருவராக இருந்த அருளர் இந்தியாவில் இருந்து கொழும்பு வந்தார்.

இயக்கங்களுக்குள் ஒற்றுமை முயற்சியில் ஈடுபடப்போவதாக தெரிவித்தார்.



பின்னர் யாழ்ப்பாணம் சென்றார். அங்கு புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்க முயன்றார்.

அருளருக்கு பல இயக்கங்களுடன் தொடர்பு இருந்தாலும், ஆபத்தான ஒருவரல்ல என்பதால் புலிகள் அவரை சுதந்திரமாக நடமாட அனுமதித்தனர்.

அருளர் ஆபத்தில்லாத ஒருவரே தவிர, எடுத்த காரியத்தை முடிக்கக் கூடிய ஒருவரல்ல. சுயவிளம்பர ஆசை என்பது அவரது பலவீனம்.

பிரபாகரன் அருளரைச் சந்திக்கவில்லை. தன்னைச் சந்திப்பதை வைத்தே பெரியதொரு பிரசார இலாபம் தேடிக் கொண்டுவிடுவார் அருளர் என்பது தெரிந்தே பிரபாகரன் அவரைச் சந்திப்பதை தவிர்த்தார்.

யாழ்ப்பாணத்தில் சிலகாலம் தங்கியிருந்துவிட்டு மறுபடி கொழும்பு வந்தார் அருளர்.

"யாழ்ப்பாணத்தில் புலிகளை சந்தித்து பச்சைக் கொடியுடன் வந்திருக்கிறேன். பேச்சுவார்த்தைக்கு புலிகள் தயார். அரசுடன் பேசி அதற்கான ஒழுங்குகளைச் செய்யத்தான் வந்திருக்கிறேன்" என்று பந்தாவாக கூறத்தொடங்கினார்.

பத்திரிகைகள் சிலவும் அருளர்தான் சமாதானத்தூதர் என்று நினைத்துவிட்டன.

அருளர் யார்? அவருக்கும் புலிகளுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை அறியாத பத்திரிகைகள் அருளரை புலி என்று கூறாத ஒன்றுதான் பாக்கி.

பிரேமதாசாவுடன் அருளர் பேச்சு நடத்தியதாகவும் புரளிகள் கிளம்பின.

பிரேமதாசாவும் அருளரை சந்திக்கவே இல்லை. ஆனால் எப்படியோ புரளிகள் எங்கும் பரவிவிட்டன.

## எதிர்க்கட்சி பாய்ச்சல்

அரசும், புலிகளும் பேச்சு நடத்தப்போகின்றனர் என்று செய்திகள் வெளியானதும் எதிர்க்கட்சிக்கு தாங்க முடியவில்லை.

அன்றைய பிரதான எதிர்க்கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சி.

அரசாங்க கட்சி பேச்சு நடத்தினால் போர் நடத்துமாறு கூறுவதும், போர் நடத்தினால் பேச்சு நடத்துமாறு கூறுவதும்தான் எதிர்க்கட்சியாக எக் கட்சி இருந்தாலும் செய்துவரும் பணி.

இன்றைய அமைச்சரும் (1998) அன்றைய (1991) எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் கண்டனம் தொடுத்தார்.

"புலிகளுடனான இரகசியப் பேச்சுக்களை நாம் எதிர்க்கிறோம். சகல பேச்சுக்களின் விபரமும் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்" என்று லக்ஷ்மன் ஜெயக்கொடி கூறினார்.

பின்னர் இப் புரளிக்கு புலிகளே முற்றுப் புள்ளியிட்டனர். "அருளரை நாம் பேச்சுக்கு அனுப்பவும் இல்லை. அவரை எமது தலைவர் சந்திக்கவும் இல்லை" என்று புலிகள் தெரிவித்தனர்.

(தொடர்ந்து வரும்)

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அலசுவது- இராஜதந்திரி

# மாவீரர் தின உரை எதிர்பார்ப்பும் — காத்திருப்பும்

**மா**வீரர்தின தாக்குதல் எங்கு நடக்கப்போகிறதோ? என்ற பதற்றத்தில் அரச படைகள் இருந்துகொண்டிருக்க, உள்நாட்டு வெளிநாட்டு செய்தியாளர்களும், இராஜதந்திர வட்டாரங்களும் பிரபாகரனின் உரைக்காக காத்திருந்தன.

வெளிநாட்டு தூதரகங்கள் பலவும் பிரபாகரன் என்ன கூறியிருக்கிறார் என்பதை அறிவதற்கு மிகுந்த ஆவலாக இருந்தன.

பிரபாகரனின் உரையை அறிவதற்கும், அதனை முந்தி வெளியிடுவதற்கும் செய்தி நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டிருந்தன.

தலைநகர பத்திரிகைகள் தமது நிருபர்களை வவுனியாவுக்கு அனுப்பிவிட்டு, அவர்கள் தரும் செய்திகளுக்காக தமது முன்பக்கத்தை ஒதுக்கி வைத்திருந்தன.

ராய்ட்டர் செய்தி நிறுவனம் நவம்பர் 26ல் விடுத்த செய்திக் குறிப்பில் நவம்பர் 27 அன்றுதான் பிரபாகரன் உரையாற்றுகிறார் என்று தெரிவித்திருந்தது.

அச் செய்தி திரிபுபட்டு பிரபாகரன் உரையாற்றிவிட்டதாக ஏனைய செய்தி நிறுவனங்கள் சிலவற்றை எட்டியது. தாம் தவறவிடப்போகிறோமோ என்று அச் செய்தி நிறுவனங்கள் ஆலாய்ப் பறந்தன. பின்னர் உண்மை தெரியவந்தது.

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பிரபாகரனின் உரை ஒடியோ கசட்டுக்களாக நவம்பர் 27ம் திகதியன்று பத்திரிகையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

நவம்பர் 27ம் திகதி இரவே இலண்டன் பி.பி.சி. மற்றும் சர்வதேச செய்தி ஊடகங்களில் பிரபாகரனின் உரை இடம்பெற்றது.

இலங்கை வானொலி அலைவரிசை ஊடாக வேலுப்பிள்ளை பிரபாகரனின் உரை சுடச்சுட நாடெங்கும் மிகத் தெளிவாக எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

இலங்கை அரசால் பயங்கரவாத இயக்கம் என்று வர்ணிக்கப்படும் அமைப்பின் தலைவரது உரையை அறிவதற்கே மேற்கண்ட பரபரப்புக்கள் அனைத்தும்.

இலங்கை அரசின் பிரசார சாதனங்கள்கூட பிரபாகரனின் உரை பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

அரசின் ஏரிக்கரை பத்திரிகை பிரபாகரனின் உரை தொடர்பான கருத்துக்களை ஏனைய கட்சியினரிடம் கேட்டு வாங்கி உடனடியாக பிரசுரித்திருந்தது.

இலங்கையின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச நாடுகளுக்கு ஓடோடிச் சென்று புலிகள் பயங்கரவாத அமைப்பு என்று கூறிவருகிறார்.

சர்வதேச செய்தி நிறுவனங்களும், இலங்கை அரசின் செய்தி சாதனங்களும் இங்கு பிரபாகரனின் உரைக்காக காத்திருக்கின்றன. பிரபாகரன் கூறியகருத்தை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கருத்தாக ஏற்று ஏனைய கட்சிகளிடமும் அபிப்பிராயம் கேட்டு வெளியிடுகின்றன.

உண்மையான நிலவரம் என்பது இலங்கை அரசின் சொந்த விருப்பங்களுக்கு முற்றிலும் மாறானதாகவே அமைந்திருக்கிறது என்பதையே இந்நிகழ்வுகள் துல்லியமாக சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கைத்தீவின் தலைவிதியை தீர்மானிக்கும் ஒருவராகவே பிரபாகரன் நோக்கப்படுகிறார். அவர் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் மதிப்பிருக்கிறது என்பதையே அவதானிக்க முடிகிறது.

இலங்கை ஜனாதிபதியின் சுதந்திரதின உரைக்கும் இல்லாதளவு எதிர்பார்ப்பும் ஆர்வமும் பிரபாகரனின் மாவீரர் தின உரைக்கு இருந்துள்ளது.

இம்முறை மாவீரர்தின உரையில் வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறியுள்ள கருத்துக்கள் புலிகளுக்கு மாறுபாடானவர்களும் மறுதலிக்க முடியாதவையாகவே விளங்குகின்றன.

"எமது மக்களை அரவணைத்து இணைத்து வாழவும் விரும்பாமல், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடாமல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக் கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன" என்று பிரபாகரன் கூறியிருக்கிறார்.

இக் கூற்று சகல தமிழ்பேசும் மக்களும் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை ஒத்ததாகவே அமைந்துள்ளது.

இன்றைய ஆட்சியாளர்கள் இராணுவ நலனுக்கு முன்னெப்போதும் இருந்ததைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வழங்கி வருகின்றனர்.

வடக்கு-கிழக்கின் ஆளுநராக இராணுவ உயரதிகாரியை நியமிக்கும் அளவுக்கு இராணுவத் தீர்வு ஆர்வம் வெளிப்பட்டு வருகிறது.

நாடெங்கும் கைதுகள், கெடுபிடிகள் என்பவை தலைவிரித்தாடுகின்றன. தமிழ் மக்கள் மீதான பாதுகாப்பு விதிகளை எந்தப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் தன்னிஷ்டப்படி தீர்மானிக்கும் அளவுக்கு ஆட்சியாளர்கள் சுதந்திரம் வழங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று கூறிக்கொண்டு, சகல தமிழ் பேசும் மக்களையும் அடக்கி ஒடுக்கி வைத்திருப்பதற்கான கெடுபிடிகளே இன்று கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை குறிவைத்து இராணுவத்தீர்வும், அதற்கு தோதான பாதுகாப்பு விதிகளும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளையும் ஒழித்துக் கட்டுதல், தமிழ் பேசும் தரப்பு இனிமேல் தலைநிமிர்ந்து நீதி கேட்கும் மனோதைரியத்தையும் இல்லாதொழித்தல் என்னும் இரண்டு நோக்கங்களை ஈடேற்றவே முனைகின்றனர்.

சமீபத்தில் குமார் பொன்னம்பலம் சொர்ணவாகினி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி சிங்கள பேரினவாதிகளிடம் சர்ச்சையை கிளப்பியிருந்தது.

கொழும்பு சிங்கள மக்களிற்கு சொந்தமான பகுதி. இங்கு இருந்து கொண்டு ஒரு தமிழன் துணிச்சலாக பேட்டியளிப்பதா? என்ற மனப்போக்குத்தான் அந்த சர்ச்சைகளின் அடிப்படையாக விளங்கியிருந்தது.

'இலங்கைத் தமிழர்கள் பூர்வீகக் குடிகளல்ல' என்று ஜனாதிபதி கூறியதையிட்டு சிங்களப் பேரினவாதிகளிடம் சர்ச்சைகள் எழவில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

குமார் பொன்னம்பலத்திடம் கேள்வி எழுப்பியவர்களும் 'நீர் கொழும்பில் இருந்து கொண்டு எப்படி பேசுகிறீர், பார்த்தீரா நாம் இதற்கெல்லாம் அனுமதிக்கிறோம்' என்ற அடிப்படையிலேயே கேள்விகளைத் தொடுத்தனர்.

தமிழ் பேசும் மக்கள் வடக்கு-கிழக்கு தமது பராம்பரிய தாயகம் என்று கூறுவதை இனவாதம் என்று சிங்களப் பேரினவாதிகள் கூறிவருகின்றனர். அவ்வாறு ஒரு தாயகப் பிரதேசம் குறிப்பிட்ட ஓர் இனத்திற்கு இருக்க முடியாது என்றும் தர்க்கம் செய்து வருகின்றனர்.

அதே பேரினவாத சக்திகள் இலங்கைத்தீவை பௌத்த சிங்கள நாடாக உரிமை பாராட்ட தவறுவதில்லை. அதேபோல கொழும்பில் இருந்து தமிழ் பேசும் ஒருவர் இன உரிமை பற்றி பேசினால், எங்கள் பகுதியில் இருந்துகொண்டே இப்படிப் பேச என்ன துணிச்சல்? என்று பொங்கி எழுவதற்கும் தயங்குவதில்லை.

குமார் பொன்னம்பலம் புலிகளுக்கு ஆதரவாளர் என்று தன்னைப் பற்றிக் கூறியதால்தான் கண்டனங்கள் எழுந்தன என்று யாராவது கருதினால் அது சிறுபிள்ளைத்தனமான ஒன்றேயாகும். அல்லது சில தமிழ்க் கட்சிகள்போல தூங்குவது போன்ற பாசாங்கேயாகும்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் முதற்கொண்டு அக் கட்சியைச் சேர்ந்த பலர் கூறிவரும் கருத்துக்கள் புலிகளுக்கு சார்பாகவே இருக்கின்றன. அவை தொடர்பாக சொர்ணவாகினி எத்தகைய தூண்டிவிடுதலையும் செய்யவில்லை. அதுபோல சிங்களப் பேரினவாதிகளும் கிளர்ந்தெழவில்லை.

குமார் பொன்னம்பலம் ஒரு தமிழர் என்ற அடிப்படையில்தான் அவரது பேட்டிக்கான பிரதிபலிப்புகள் எழுந்திருந்தன.

எனவே, தமிழ் பேசும் தரப்பையும் குட்டி அடக்கி வைத்திருந்து, காலப்போக்கில் பேரினத்துக்குள் ஒன்று கலக்கச் செய்து பூரணமான இன ஒழிப்பை நிறைவேற்றுவதே பேரினவாதிகளின் இறுதி இலக்காகும்.

ஆகவே, அரவணைத்துச் செல்லுதல் என்பதைவிட, அச்சமூட்டி அடக்கி வைத்திருப்பதையே பேரினவாதிகள் பெரிதும் விரும்பி நிற்கின்றனர்.

தமிழ் பேசும் மக்கள் பிரிந்து செல்லக்கூடாது என்று பேரினவாதிகள் கூறுவது, தமிழ் பேசும் மக்கள்மீது கொண்ட காதலினால் அல்ல. இந்த நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சொந்தமானது என்பதால், இதனை பிரித்து துண்டாட அனுமதியோம் என்ற மனநிலை இருந்திருக்குமானால் அது நிச்சயம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றேயாகும்.

ஆனால், இது சிங்கள பௌத்த நாடு எனவே, இதன் ஒரு பகுதியை தமிழ் பேசும் மக்களுக்கு தாரைவார்க்க முடியாது என்ற நிலைப்பாட்டில் இருந்தே, பிரிவினைக்கு எதிரான குரல்கள் பேரினவாதிகள் மத்தியில் இருந்து எழுகின்றன.

தென்னாபிரிக்க தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியிலும், இலங்கைத் தமிழர்கள் இந்த நாட்டின் பூர்விகக் குடிகளல்ல. எனவே அவர்கள் தனிநாடு கோரமுடியாது என்று நிரூபிக்க முனைந்திருந்தார்.

இவ்வாறான சிந்தனைகள் அடிப்படையாக இருக்கும்போது, அணுகுமுறைகளிலும் அவை பிரதிபலிக்கின்றன.

சகல இன மக்களுக்கும் இந்த நாடு உரியது என்ற வாசகங்களும், கோஷங்களும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை அபகரிப்பதற்கும், தமிழ் பேசும் மக்கள் தாம் ஒரு தேசிய இனம் என்று ஒன்றுபடுவதை தடுப்பதற்குமாக பயன்பட்டு வந்தன.

தமிழ்பேசும் மக்கள் மட்டும் இந்த நாடு சகல இனங்களுக்கும் உரியது என்று நம்பி தமது தனித்துவங்களை இழக்க வேண்டும். ஆனால், சிங்கள பௌத்த மக்களின் தனித்துவங்களை அரசு கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வரும் என்கின்ற இந்த முன்னுக்குப் பின் முரணான அணுகுமுறையே தமிழ் பேசும் மக்களை உளவியல் ரீதியாக இன்று தனியாகப் பிரித்திருக்கிறது.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது உரையில் குறிப்பிட்டுள்ள கருத்தும் கவனிக்கத்தக்கதேயாகும்.

"சிங்கள தலைமைகளிடம் மன மாற்றம் ஏற்படும் என்று நாம் கருதவில்லை. எதிர்காலத்திலும் அந்த மனமாற்றம் ஏற்படாமல் போனால், தமிழீழத் தனியரசை உருவாக்கித்தந்த வரலாற்றுப் பெருமை அவர்களுக்கே சேரும்!" என்று கூறியிருக்கிறார்.

எவ்விதமான வாய்வீச்சுக்களோ, தேவையற்ற சுற்றி வளைப்புக்களோ இன்றி மிகவும் கட்டுக் கோப்பாக பிரபாகரனின் உரை அமைந்திருந்தது.

பழைய நேரப்படி மாலை 5.43 மணி முதல் 6.05 மணிவரையே பிரபாகரன் உரையாற்றியிருந்தார்.

'பிரபாகரன் வார்த்தைளை அளந்து பேசுபவர். செயலுக்கே முன்னுரிமை கொடுப்பவர். செய்யக் கூடியதை மட்டுமே சொல்ல விரும்புபவர்' என்று பலராலும் புகழப்பட்டு வருகிறார். அந்த புகழாரத்திற்கு ஏற்பவே உரை அமைந்திருந்தது.



44 வயதில் கிட்டத்தட்ட 25 வருட அனுபவம் பெற்ற தலைவருக்குரிய அனுபவ முதிர்ச்சியையும் வெளிக்காட்டும் விதமாகவே பிரபாவின் உரை அமைந்திருக்க காணப்படுகிறது.

புலிகள் அமைப்பில் வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறும் கருத்துக்களே இறுதியானவையாகவும், உறுதியானவையாகவும் கருதப்படும். அக் கருத்துக்களில் ஈடாட்டமோ, அல்லது அதற்கு மாறான நிலைப்பாடுகளோ நழுவல், வழுவல் போக்குகளோ இருப்பதில்லை என்பதும் விடுதலைப் புலிகளின் இதுவரை காலவரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எழுந்தமானமாக, மனம் போன போக்கில் கருத்துக்களைக் கூறுவதும், பின்னர் அவற்றுக்கு மாறாக நடந்து கொள்வதுமே ஏனைய கட்சிகளின் தலைமைகளது போக்காக உள்ளன.

பிரபாகரனும் அவ்வாறு தனக்கு விளம்பரம் தேட விரும்பினால், தினமும் அவரது கருத்தை அறிந்து வெளியிட உள்ளூர் சர்வதேச செய்தி நிறுவனங்கள் தயாராகவே உள்ளன.

ஆனால் பிரபாகரன் அவ்வாறான அரசியல் விளம்பர விளையாட்டுக்களில் இதுகால வரை ஈடுபட்டதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதனையே சமீபத்தில் பி.பி.சி நிருபரும் சுட்டிக்காட்டியிருந்தார். பிரபாகரன் தனது பெயர் பிரபலமாவதைக் காட்டிலும், தனது இலட்சியத்தில் பிடிவாதமாக உள்ளவர் என்று ஒருமுறை கூறியிருந்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழ்க் கட்சிகள் ஆயிரம் அறிக்கை விட்டாலும் அரசு கூட செவிசாய்ப்பதில்லை. வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒரே ஒரு உரை அகிலத்தையே திரும்பிப் பார்க்க வைத்துவிடுகிறது.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

# வை.கோவின் அக்கறை

**கு**மார் பொன்னம்பலம் புலிகளுக்கு ஆதரவாக பேசிவிட்டாராம். அவரது பேட்டியை வெளியிட்ட சொர்ணவாகினிக்கு பொறுக்கவில்லை. அப்பேட்டி தொடர்பாகவும் ஒரு விவாத மேடை நடத்தியது. 'திவயின' போன்ற பத்திரிகைகள் தமிழ்க் கட்சிகளிடம் கருத்துக் கேட்டு வெளியிட்டன.

"ஜனாதிபதி சந்திரிக்கா தமிழர்கள் பூர்வீகக் குடிகளல்ல என்று கூறியதை நூற்றுக்கு நூறு சரியானது. தமிழர்களுக்கு இங்கு எது வித உரித்தும் இல்லை." என்று ரி.என்.எல். தொலைக்காட்சியில் ஒரு பேரினவாதி விஷம் துப்பியிருந்தார்.

அதைப்பற்றி எந்தவொரு சர்ச்சையும் ஏன் எழவில்லை, சிங்களக் கட்சிகளிடம் கருத்து கேட்டு வெளியிட சிங்களப் பத்திரிகைகளோ, சிங்கள தொலைக்காட்சிகளோ ஏன் முன்வரவில்லை?

இவையெல்லாம் தெரியாததுபோல சில தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிங்களப் பத்திரிகைகளில் குமாரை கண்டித்திருந்தனர். தங்கள் பெயர் பத்திரிகைகளில் வரவேண்டும் என்பதுதான் முக்கியம். அதனால் எதனைப் பற்றி கருத்துக் கேட்டாலும் முன்னே பின்னே யோசிக்காமல் வாய் திறந்துவிடுகிறார்கள். விளம்பர ஆசை.

***

**கூ**ட்டணி ஆனந்தசங்கரி 'முரசை' இலங்கை அரச வானொலி நிகழ்ச்சியில் மறைமுகமாக சாடியிருந்தார்.

முரசின் விமர்சனங்களுக்கு பதில் சொல்ல முடியாதவர்கள் திட்டித்தீர்த்து திருப்தி கொள்ளுகிறார்கள்.

முரசின் வளர்ச்சியை சகிக்க முடியாத சிலருக்கு வசைபாடுவதில் மகிழ்ச்சி. பொறாமையில் புளகாங்கிதம்.

ஆனந்தசங்கரியையோ, கூட்டணியின் ஏனைய பிரமுகர்களையோ 'முரசு' தனிப்பட்ட ரீதியில் விமர்சிக்கவில்லை. அவர்களது அரசியல் நிலைப்பாடுகளையே விமர்சித்து வருகிறது.

யாழில் இருந்து உலகத் தலைவர்களுக்கு ஒரு மகஜர் அனுப்ப முயற்சி நடந்தது. புலிகளை கண்டிக்குமாறு கோரும் அந்த மகஜரில் தாம் கையொப்பம் போடவில்லை என்று ஆனந்தசங்கரி கூறியிருந்தார்.

அவர் சொன்னது பொய். கூட்டணி உறுப்பினர்கள் கையொப்பம் போட்டிருந்தனர் என்று முரசு கூறியது. கையொப்பம் போடப்பட்ட ஆவணம் முரசிடம் உள்ளது. எனவே சங்கரி முரசு அம்பலப்படுத்திய விஷயத்திற்கு பதில் கூறாமல் முரசை திட்டித்தீர்த்திருக்கிறார்.

முரசு' எந்த அணியையும் தூக்கி நிறுத்தவில்லை. தேவையற்று தூற்றுவதும் இல்லை.

'முரசின் கருத்துக்களை கருத்துக்களால் சந்தித்தால் 'முரசு' பதில் தரத் தயாராக உள்ளது. அதைவிடுத்து எரிச்சல், பொறாமை, இயலாமை காரணமாக வசைபாடும் நபர்கள் தாராளமாக பாடிக்கொள்ளலாம்.

❑❑

**ஐ**.நா.சபை வரை சென்று இலங்கைத் தமிழர் பிரச்சனை, மனித உரிமை மீறல்கள் பற்றி அறிக்கை சமர்ப்பித்தார் வை.கோ.

தமிழகத்தில் அவரது கட்சி சந்திக்க வேண்டிய சவால்கள் ஏராளம். மத்திய ஆட்சியிலும் பல சிக்கல்கள். இத்தனைக்கும் மத்தியில் இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றி ஐ.நா. சபைவரை சென்று பேசியதும், முக்கிய பிரதிநிதிகளை சந்தித்து விளக்கியதும் நெகிழ்வூட்டும் செயல். அச்சந்திப்பு தொடர்பான புகைப்படங்களை நண்பர் ஒருவர் அனுப்பி வைத்துள்ளார். அதில் ஒன்று இங்கே.



ஐ.நா. சபை அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தின் ஆசியப் பிரதிநிதி திரு. ராஜீவ் கபூர், ஆசியப் பொறுப்பதிகாரி திரு. கசுப்ரொசி நாகசாகா ஆகியோரை திரு. வை.கோ சந்தித்து உரையாடியபோது.

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 38

**கடந்தவாரம்**

**ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைவராகிறான் அமீன். வெள்ளைக்காரர்கள் சிலர் அவனை மாநாட்டுக்கு தோளில் சுமந்து வருகின்றனர். தனது அமைச்சர்களுக்கு கட்டாய விடுமுறை கொடுத்து அனுப்புகிறான். அமைச்சுப் பொறுப்புக்களை அமைச்சுக்களது செயலாளர்கள் கவனிக்கிறார்கள்.**

**இனி....**

# இடி அமீன்

நள்ளிரவில் தொலைபேசி அழைத்தபோது அமீன் சொகுசுக் கட்டிலில் தூங்கிக்கொண்டிருந்தான். அவனது நீண்ட கால்களை அருகில் கிடந்த அழகியின்மேல் தூக்கிப்போட்டிருந்தான்.

அமீனின் இடதுபுறமும், வலது புறமுமாக இரண்டு அழகிகள் தூங்கிக்கொண்டிருந்தனர்.

தொலைபேசி மணியடித்ததும் தெரியாமல் அடித்துப் போட்டது மாதிரியாக இருவரும் கிடந்தனர்.

தொலைபேசியை எடுப்பதற்கு இடது புறம் படுத்திருப்பவளை கடந்தாக வேண்டும். அவள்மேல் ஏறிப் புரண்டு மறுபக்கம் செல்ல, அவளுக்கு மூச்சுத்திணறி கூச்சல் போட்டபடி தூக்கம் கலைய, அமீன் அவள் வாயைப் பொத்தினான்.

"நீங்களா?" என்றாள். **"ஏனடி, இப்போதுதான் பாரம் தெரிகிறதாக்கும்?"** என்றுவிட்டு ⁚போனை எடுத்தான்.

மறுமுனையில் புலனாய்வுத் துறையிடம் இருந்து இடியான செய்தி.

**"15 அமைச்சர்களும், ஆறு வெளிநாட்டுத் தூதுவர்கள், 8 நிரந்தரச் செயலாளர்கள் ஆகியோர் நாட்டை விட்டு தப்பியோடி விட்டனர்!"** என்றார் புலனாய்வுப் பொறுப்பதிகாரி.

மிக மோசமான கெட்ட வார்த்தையொன்றை பிரயோகித்தான் அமீன். மறுமுனையில் பொறுப்பதிகாரி மன்னிப்புக் கேட்டார்.

**"ஓடிவிட்டார்கள் என்று சொல்வதற்கு புலனாய்வுப் பிரிவு எதற்கு? ஓடப் போகிறார்கள் என்று முன்கூட்டியே மோப்பம் பிடித்துச் சொல்லத்தான் உனக்கு சம்பளம் தருகிறேன். முட்டாள்களே! தொடர்ந்து இப்படிக் கோட்டை விட்டால் உங்கள் உயிரையும் கோட்டைவிட வேண்டியதுதான்!"** என்றுவிட்டு கோபமாக ⁚போனை வைத்தான் அமீன்.

கட்டிலில் ஒருத்தி மட்டும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து அமர்ந்திருந்தாள். இன்னொருத்தி சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

**"அவளையும் எழுப்பு"** என்றான் அமீன். எழுப்பப்பட்டாள். எழுந்தவள் மலங்க மலங்க விழித்தாள்.



யசீர் அரபாத்துடன்

**"என்ன பார்க்கிறாய், நள்ளிரவுச் சேவை எனக்குத் தேவை?"** என்றபடி கட்டிலில் சாய்ந்து கொண்டான். விடியும்வரை அவர்கள் இருவரையும் அமீன் தூங்கவிடவில்லை.

மறுநாள் மதியம்வரை அமீன் நிம்மதியாகத் தூங்கினான். அவனுக்கு தரப்பட வேண்டிய தகவல்களோடு அதிகாரிகள் காத்திருந்தனர். நிதானமாக வந்து சேர்ந்தான் அமீன்.

"மருத்துவமனைகள் இயங்க முடியவில்லை!" என்றார் மருத்துவ அமைச்சின் செயலாளர்.

"மக்ரரே பல்கலைக் கழகம் மூடப்பட்டு விட்டது. இயங்கவைக்க முடியாத சூழ்நிலை" என்றார் இன்னொரு செயலாளர்.

"சந்தையில் பாவனைப் பொருட்களது விலைகள் மளமளவென்று ஏறிக்கொண்டே இருக்கின்றன. கட்டுப்படுத்த முடியவில்லை. பாணுக்கு தட்டுப்பாடு!" என்றார் மற்றொரு செயலாளர்.

அமீன் தன் உள்ளங்கைகளை பரபரவென்று தேய்த்து சூடாக்கியபடி, **"மதியம் வரைதான் தூங்கினேன், அதற்குள் நாடு தலைகீழாகிவிட்டது!"** என்று நகைத்தான். அழைப்பு மணியை அழுத்தி; **"எல்லோருக்கும் சூடாக ஆவி பறக்க, தவளை சூப் கொண்டுவா!"** என்றான்.

அமைச்சுக்களின் செயலாளர்களில் ஒருவர் இருவர் தவிர ஏனையோருக்கு தவளை சூப் அருந்தி பழக்கமில்லை. குடிக்காவிட்டாலும் பிரச்சனை. தாம் கதைக்க வந்த விடயங்களையே அவர்கள் மறந்து போனார்கள். தவளை சூப்பை எப்படி குடித்து முடிப்பது என்பதுதான் தலையாய பிரச்சனையாகிவிட்டது.

**"சரி, இப்போது கூறுங்கள், மருத்துவமனை ஏன் இயங்கவில்லை?"** என்றான்.

"டாக்டர்களும், தாதிமாரும் நாட்டை விட்டு ஓடிவிட்டனர்!" என்றார் செயலாளர்.

**"மக்ரரே பல்கலைக் கழகம் ஏன் இயங்கவில்லை?"** என்றான் அமீன்.

"பல்கலைக்கழக உபவேந்தர்கள் இருவரும், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோரும் நாட்டைவிட்டு ஓடிவிட்டனர்!" என்று பதில் வந்தது.

சுடச்சுட சூப் வந்தது. **"தவளைச் சூப், உடம்புக்கு நல்லது குடியுங்கள்!"** என்று உபசரித்தான் அமீன். தானும் சுவைத்துப் பருகினான்.

சிலருக்கு வயிற்றைக் குமட்டியது. நினைப்புக்காரணமாக வாந்தி வரும்போல இருந்தது. அனைத்து எண்ணங்களையும் பயம்



வென்றதால் அடக்கிக்கொள்ள முடிந்தது.

**"சிலநாட்களில் நல்ல முடிவு வரும். நீங்கள் போகலாம். தவளை சூப் எப்படி இருந்தது?"** என்று கேட்டான்.

ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு "மிக நன்றாக இருந்தது?" என்றனர். கலப்படமில்லாத பொய்யை நம்பிய அமீன்; **"இன்னொரு 'கப்' தரச் சொல்லட்டுமா?"** என்றான்.

**"இல்லையில்லை, இதுவே போதும். மிக்க நன்றி!"** என்றனர். மேலும் தாமதித்தால் தவளை சூப் வந்துவிடுமோ என்று விரைவாக வெளியே போய்விட்டனர்.

அமீனின் மனைவியரில் ஒருத்தி தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "பாணுமில்லை, சீஸ்கூட கடைகளில் இல்லை. இரண்டும் இல்லையானால் உங்கள் பிள்ளை சாப்பிடவே மாட்டான்," என்றாள்.

**"பணம்தான் தாராளமாக இருக்கிறதே, எங்காவது ஆளை அனுப்பி வாங்கிக் கொள்ளலாமே?"** என்றான்.

அவள் சிரித்தாள். **"ஏன் சிரிக்கிறாய்? விளையாட இதுவா நேரம்?"** என்று சினந்தான்.

"விளையாட நீங்கள்தான் நேரம் காலம் பார்ப்பதில்லையாமே! இப்போதுகூட யாரையாவது மடியில் வைத்துக் கொண்டுதான் பேசுகிறீர்களோ யார் கண்டது?" என்றாள்.

எரிச்சலில் ⁚போனை அறைந்து வைத்தான் அமீன். மீண்டும் ஒலித்தது. அவளேதான்.

"⁚போனை வைத்துவிடாதீர்கள். பணம் எங்களிடம் இருக்கிறது, கடைகளில் பொருட்கள் இல்லையே. நோட்டை வைத்து காதுதான் குடையவேண்டும்!" என்று கூறிவிட்டு இம்முறை அவளே ⁚போனை வைத்துவிட்டாள்.

வெளிநாட்டு அமைச்சுக்கும், வர்த்தக அமைச்சுக்கும் உத்தரவுகள் பறந்தன.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை உடனடியாக இறக்குமதி செய்யுமாறு உத்தரவுகள் கூறின.

மூன்று நாட்களுக்குள் உணவுப்பொருட்கள் உட்பட முக்கியமான பாவனைப் பொருட்கள் இறக்குமதியாகின.

அத்தனை பொருட்களும் அமீன் குடும்பத்தினருக்கும், முக்கிய இராணுவ அதிகாரிகளது வீடுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

**"மக்களின் பட்டினியைப் போக்குவதற்கு பாடுபட நான் உயிரோடு இருக்க வேண்டாமா? அதற்காகத்தான் இந்த இறக்குமதி!"** என்று தன் செயலாளர் சியம்பாவிடம் ஜோக்கடித்தான் அமீன்.

விடுமுறை கொடுத்து அனுப்பப்பட்ட அமைச்சர்கள் தவிர தன் நம்பகமான சிலரை அமைச்சர் பணிகளில் வைத்திருந்தான் அமீன். சியம்பாவும் அவர்களில் ஒருவர்.

ஒருநாள் காலையில் சியம்பா உட்பட அமைச்சர்களது வீடுகளுக்கு தையற்காரர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்.

**"உங்களுக்கு இராணுவ சீருடை தைக்க அளவெடுக்க வேண்டும். இது ஜனாதிபதியின் உத்தரவு!"** என்று கூறப்பட்டது.

தம்மையெல்லாம் இராணுவத்துடன் இணைத்து எல்லைப்பகுதிக்கு அனுப்பப்போகிறான் அமீன் என்று தாமாக ஊகித்து, பயந்து போனார்கள்.

தமது பதவி பறிபோகவில்லை என்று முன்பு சந்தோசப்பட்டவர்கள், பறிபோய் இருக்கக்கூடாதா என்று கவலைப்படத் தொடங்கிவிட்டனர்.

**"இஸ்ரேல்–அரபு யுத்தம் மீண்டும் ஆரம்பமானால், உகண்டாவில் இருந்து தொண்டர்படை ஒன்று அரபு நாடுகளுக்கு உதவியாக விரையும். அதற்கு நானோ என் அமைச்சர்களில் ஒருவரோ தலைமை தாங்குவோம். அதற்கு முன்னோடியாக எமது அமைச்சர்கள் சிலருக்கு இராணுவப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன!"** என்று அறிவித்தான் அமீன்.

இராணுவ சீருடைகளோடு புகைப்படங்களுக்கு போஸ் கொடுத்தனர் அமைச்சர்கள்.

புகைப்படங்களை செய்தி நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்குமாறு கூறிவிட்டு, அமைச்சர்கள் பக்கம் பார்வையைத் திருப்பினான்.

**"சீருடை மிகப் பொருத்தமாக இருக்கிறது. என்ன போருக்கு தயார்தானா?"** என்றான்.

ஒவ்வொருத்தர் முகமும் பேயறைந்தது போலிருந்தது. அவர்களைப் பார்க்க அமீனுக்கு உள்ளூர நகைப்பாக இருந்தது.

**"பயப்படாதீர்கள். உங்களை எந்தப் போர் முனைக்கும் அனுப்பமாட்டேன். இதெல்லாம் ஒரு பிரசார நாடகம்தான். இனி உங்கள் சீருடைகளை பத்திரமாக மடித்து பெட்டியில் வைக்கலாம்!"** என்றான்.

அமீன் முன்னால் நிற்பதையும் மறந்து நிம்மதிப் பெருமூச்சு புறப்பட்டு வந்தது அமைச்சர்களிடமிருந்து.

அமீனின் இஸ்ரேலிய எதிர்ப்பு பிரசாரம் அரபு நாடுகளிடம் வரவேற்புப்பெற்றது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் உகண்டாவுக்கு விஜயம் செய்தார்.

அவரை வரவேற்க அமோகமான ஏற்பாடுகள் செய்தான் அமீன்.

விமான நிலையத்தில் வைத்து கட்டித் தழுவி வரவேற்றான். அக் காட்சிகள் புகைப்படங்களாகி உலகெங்கும் வெளியாகின.

## தருவது ரசிகன்

பிரிட்டிஷ், அமெரிக்கா போன்ற நாடுகள் தன்னைப் பற்றிச் செய்துவரும் பிரசாரங்களை முறியடிக்க அரபு உலக ஆதரவு நிலைப்பாட்டில் உறுதியாக நின்றான்.

**"என்னை இரக்கமற்ற ஒருவனாக- நிறவெறி பிடித்த செய்தி ஸ்தாபனங்கள் தூற்றி வருகின்றன. நான் நியாயத்தின் பக்கம் நிற்பவன். பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு நான் ஆதரவானவன். இஸ்ரேலியர்களுக்கு எதிரி. நான் நல்லவனுக்கு நல்லவன். சுருக்கமாகச் சொன்னால் நல்ல பாம்பு. மிதித்தால்தான் தீண்டுவேன்!"** என்று கூறினான் அமீன்.

அரபாத்தை நன்கு உபசரித்து அனுப்பினான் அமீன்.

அடுத்து ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்திற்கு அமீன் செல்ல வேண்டியிருந்தது.

தன்னை 'இரக்கமற்ற அரக்கன்' என்று கூறுவதை மறுக்க தன் பிள்ளைகளுடன் பொது இடங்களில் தோன்றியவன் அமீன்.

ஐ.நா.சபை கூட்டத்தில் கலந்து கொண்டு தன்னை கண்ணியமான மனிதனாக வெளிச்சம் போட்டுக் காட்ட எண்ணினான்.

**"மனைவியுடன் செல்லப் போகிறேன். எந்த மனைவியுடன் என்பதை பூவா தலையா போட்டு பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்"** என்று சிரித்தான். சியம்பா மிகவும் சிரமப்பட்டு புன்னகைக்க வேண்டியிருந்தது.

ஐ.நா.சபைக்கு செல்ல முன்பாக வேட்டை ஒன்றை நடத்தினான்.

வேட்டைக்கு இலக்கானவர் ஒரு மருத்துவத்தாதி.

(இடி தொடரும்)

## சாள்ஸுடன் அழகி



பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸின் 50வது பிறந்தநாள் விழாவில் கமீலாவும் கலந்து கொண்டார்.

சாள்ஸ் இப்போது கமீலாவுடன் அடிக்கடி உல்லாசப் பயணம் செல்கிறார். பிறந்தநாள் விழாவில் சாள்ஸின் பிரித்துக்குரிய 'ஸ்பைஸ் கேர்ள்' இசைக்குழுவைச் சேர்ந்த அழகி கெரி ஹெலிவெல் கலந்து கொண்டார். கவர்ச்சி உடையில் வந்த கெரி பிறந்தநாள் பாட்டுப் பாடினார்.

கெரிக்கும் சாள்ஸுக்கும் இடையே மறைமுக நட்பு இருப்பதாக கிசுகிசுக்கள் வெளியாகியுள்ளன.

## முறிந்த காதல்



மோனிகா விவகாரத்தில் கிளின்டன் நாறிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மற்றொரு சோகச் செய்தி.

கிளின்ரனின் மகள் செல்ஷியா காதலில் தோல்வி கண்டுவிட்டார் என்று நியுயோர்க் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஸ்டான் போர்ட் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுவரும் செல்ஷியா, அதே பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர் மாத்யூ பியர்ஸ் என்பவரை காதலித்தார்.

இந்த காதல் விவகாரம் கிளின்ரனுக்கும் தெரியும். கிளின்ரன் அளித்த தேநீர் விருந்து ஒன்றிலும் மாத்யூ கலந்த கொண்டார்.

ஆனால்,தற்போது அவர்களது காதல் முறிந்துவிட்டது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

## ஜப்பானில் அவர்கள்



ஜப்பான் நாட்டில் டோக்கியோ நகரில் உள்ள விபச்சார விடுதி வித்தியாச ரகம்.

இங்கு பெண்கள் கிடையாது. கட்டுமஸ்தான ஆண்கள்தான் இங்கு பணிபுரிகின்றார்கள்.

'கிளப்' என்ற பெயர்களில் இயங்கும் இவ் விடுதிகளுக்கு பெண்கள் மட்டும் வருகிறார்கள். தங்களுக்கு தேவையான ஆளை தெரிவு செய்து சந்தோசமாக இருந்துவிட்டுப் போகிறார்கள். பணமும் தாராளமாக கொடுக்கிறார்கள்.

இத்தகைய கிளப்புக்கள் இந்தியாவிலும் தோன்றி வருகின்றன. நம் நாட்டின் தலைநகரான கொழும்பிலும் இருப்பதாகத் தகவல்.

## டாக்டர் போட்ட ஊசி



அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ரிச்சர்ட் ஸ்மித்துக்கு அதே மருத்துவமனையில் பணிபுரியும் நர்ஸ் மீது ஆசை. டாக்டர் ஏற்கனவே திருமணமானவர்.

முதல் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு தன்னை மணந்து கொள்ளுமாறு நர்ஸ் ஜேனிஸ் ஆலன் நச்சரித்தாள்.

நச்சரிப்பு தாங்காத டாக்டர் ஒருநாள் இரவு நர்ஸைத் தேடிவந்தார். நைசாகப் பேசி படுக்குக்கு அழைத்துச் சென்று கட்டிலில் சரித்தார்.

திடீரென்று டாக்டரின் கையில் ஒரு ஊசி. 'உனக்கு விற்றமின் ஊசி போடப் போகிறேன்' என்று சொல்லி, நர்ஸ் மறுக்க மறுக்க ஒரே போடாக போட்டுவிட்டார்.

சந்தேகப்பட்ட நர்ஸ தன்னை பரிசோதித்த போது அதிர்ச்சி காத்திருந்தது.

டாக்டர் போட்டது எய்ட்ஸ் ஊசி. எய்ட்ஸ் கிருமிகளை ஊசி மூலம் இரத்தத்தில் செலுத்திவிட்டார்.

நர்ஸ் உடனடியாக டாக்டர்மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

"எனக்கும் இதற்கும் தொடர்பு கிடையாது. நர்ஸுக்கு பலபேருடன் உறவு இருந்தது. அதுதான் எய்ட்ஸ் வந்துவிட்டது." என்று டாக்டர் கூறியிருக்கிறார். வழக்கு தொடர்ந்து நடக்கிறது. உயிர்களைக் காப்பாற்றவேண்டியவர்களே இப்படி விளையாடலாமா?

## டைட்டானிக் நாயகி



டைட்டானிக் படக் கதாநாயகி கேட் வின்ஸ்லெட்டை நினைத்து ஏராளமான ரசிகர்கள் ஜொள்ளு விட்டனர். ஆனால் அவர் ஜொள்ளுவிட்டது ஜிம் த்ரெப்லெடின் என்னும் உதவி இயக்குநரை நினைத்துத்தான்.

23 வயதான டைட்டானிக் நாயகிக்கு 24 வயதான ஜிம்மீது மகா காதல். 'ஹைடியங் கின்சி' என்ற படத்தின் படப்பிடிப்பில்தான் கண்ணும் கண்ணும் சந்தித்தன. ஜனவரியில் கல்யாண வைபோகமாம்.

## கடும் தண்டனை

இந்திப் பட உலகின் இன்றைய கவர்ச்சிப் புயல் ஊர்மிளா. ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு ஊர்மிளா அளித்துள்ள பேட்டியில் அவரது துணிச்சல் பளிச்சிடுகிறது.

**கே: நாகரீகம் என்ற பெயரில் பல பெண்கள் குறைந்த உடையில் பொது இடங்களில் நடமாடுவதுதான் சபலத்திற்கு தூண்டுகிறது? பாலியல் வல்லுறவு போன்ற குற்றச் செயல்களுக்கு காரணம் எனப்படுகிறதே?**

**ஊ:** இது முட்டாள்தனமான எண்ணம். பெண்கள் தங்கள் சௌகரியத்திற்கு ஏற்ப உடை அணிகிறார்கள். அவள் விரும்பி அணியும் உடையைப் பார்த்து ஆண்களுக்கு ஏன் அபத்தமான எண்ணம் தோன்ற வேண்டும்? ஒரு பெண்ணுக்கு அவள் விரும்பும் உடையை அணியக்கூட உரிமை இல்லையா?

பாலியல் வல்லுறவுக் குற்றங்களுக்கு இஸ்லாமிய நாடுகளில் செய்வது போல மரண தண்டனை வழங்கவேண்டும். மன்னிப்பே வழங்கக் கூடாது என்று கூறியிருக்கிறார் ஊர்மிளா.


தமிழ்ப்பட நடிகையான ரேவதியும்



பாலியல் வல்லுறவுக் குற்றம் தொடர்பாக கருத்துக் கூறியுள்ளார்.

"பாலியல் வல்லுறவில் ஈடுபடும் ஆணின் ஆண்மையை அகற்றிவிட வேண்டும்" என்று அதிர் இடியாய் பதில் கூறியிருக்கிறார் ரேவதி.

# அதாண்டா நான்தாண்டா



← உலகில் அதி குள்ளமான மனிதர் கூல் முகம்மது. இந்தியாவைச் சேர்ந்தவர். ஆனால் தற்போது உயிருடன் இல்லை.

அவரது இடத்தை நிரப்பப் போகிறவர் யார்? 'நான்தான்' என்கிறார் யூனிஸ் எட்வான். இவர் ஜோர்டானைச் சேர்ந்தவர்.

27 வயதாகும் யூனிஸ் 65 சென்டி மீட்டர் உயரம்வரைதான் வளர்ந்திருக்கிறார். 'கின்னஸ்' நிறுவனம் இன்னமும் இவரை அங்கீகரிக்கவில்லை. காத்திருக்கிறார்.



# குளிரக் குளிர

← குழந்தை பிறந்ததும் சுடுதண்ணீரில் குளிக்கவைப்பார்கள். சிலர் ஐந்துவயதுவரை வெந்நீரில்தான் குளிக்க வைப்பார்கள்.

ஆனால் ரசியாவில் என்ன செய்கிறார்கள் தெரியுமா? வெட வெடக்க வைக்கும் ஐஸ்நீரில் குழந்தைகளை குளிக்க வைக்கிறார்கள்.

குழந்தை பிறந்தால் ஐஸ் நீருள்ள ஏரிகளிலும், ஆறுகளிலும் குளிக்கவைப்பது ரசியாவில் ஒரு மரபாம். தாய் ஒருவர் குளிர் நீரில் குழந்தையை குளிக்கவைப்பதும், அது குளிரில் நடுங்குவதையும் பாருங்கள்.

# மெல்லியலாள்



↑ 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு' என்று கூறுவார்கள். இவரோ உடலையே சுருக்கிவிட்டார்.

இவரது பெயர், அய்ரல் டெஸ். உதைப்பந்தாட்டம் மூலம் புகழ் பெற்ற நாடான பிரேசில்தான் இவரது சொந்தநாடு.

பட்டினியால் மெலிந்து விட்டாரோ என்று பரிதாபப்பட்டால் இவருக்கு கெட்ட கோபம் வரும். பெரும் பணக்காரப் பெண்ணான இவர் செழிப்பாகத்தான் இருந்தார். உலகிலேயே ஒல்லியான பெண்ணாக வேண்டும் என்று ஆசை வந்துவிட்டது. அதனால் கடும் முயற்சியால் இப்படி கருவாடாகிவிட்டார்.

சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் முயற்சித்து 1989ல் வெற்றி பெற்றார். கடந்த எட்டு ஆண்டுகளாக உலகில் மிக ஒல்லியான பெண் என்ற உலக சாதனையை தக்கவைத்திருக்கிறார். வயது 44. மெல்லிடையில் மேலும் இரண்டு இஞ்ச் குறைக்க ஆசைப்படுகிறாராம். உடைந்து விடாதா?!

# விண்ணில் ஒரு நிலையம்


↘ அமெரிக்கா போன்ற நாடுகளின் சூழ்ச்சியால் சிதறுண்டு போனாலும் இன்னமும் விஞ்ஞான சாதனைகள் படைத்து வருகிறது ரசியா.

விண்வெளியில் நிறுவப்படும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் முதற் பகுதியை சுமந்துகொண்டு ரசிய ராக்கெட் புறப்படத் தயாரான நிலையில் எடுக்கப்பட்ட படம் இது.

20.11.98 அன்று காலை இக் கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டது. புரோட்டான் விசையால் இயங்கும் ராக்கெட்டுக்கள் இக் கலத்தை சுமந்து சென்றன.

சோவியத் யூனியனில் இருந்த 16 நாடுகள் கூட்டாக இதனை ஏவின. 41 அடி நீளம் கொண்ட இந்த விண் நிலையத்தை மூன்று அடுக்கு புரோடான் பூஸ்டர்கள் சுமந்து சென்றன. இதற்கு 'ஜார்யா' என்று பெயரிடப்பட்டுள்ளது. 'சூரியோதயம்' என்று அர்த்தம்.

இரண்டாயிரம் ஆண்டின் பின்னர் விண்வெளிக்கு செல்பவர்கள் இந்த நிலையத்தில் தங்கி ஆய்வு செய்ய முடியும். விஞ்ஞான முன்னேற்றம் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது.



# நாற்காலியும் ஏணியும்



↑ நாற்காலிப் பிரியர்களுக்கு பிடித்தமான படம் இது. இதில் அமர்ந்தால் உலகப் புகழ் பெறலாம்.

ஜெர்மனியில் உள்ள நாற்காலிக் கடைக்காரர் கடை விளம்பரத்திற்காக செய்து வைத்த நாற்காலிதான் இது.

அம்மாவும் மகளும் அமர்ந்து அழகு பார்க்கின்றனர். இந்த நாற்காலியில் ஏற வேண்டுமானால் ஏணி வைத்துத்தான் ஏற வேண்டும். ஏறிய பின்னர் எணியை எட்டி உதைத்தால் கீழே இறங்கவும் முடியாமல் போகலாம். நாற்காலியில் இருக்கும் வரை அந்த உண்மை புரியாமலும் போகலாம்.

# தகவல் பெட்டி

## அதிசயம் அதிசயம்

↘ என்ன இது, யானையைப் பிடித்து கட்டிவைத்திருக்கிறார்களோ என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. யானையைப் போல கட்டுகிறார்கள்.

தாய்லாந்து நாட்டில் பாங்ஹொக் நகரில் இந்த விசித்திரமான கட்டடம் கட்டப்பட்டுவருகிறது.

தாய்லாந்தை வெள்ளையானை நாடு என்றும் அழைப்பார்கள். அதற்கேற்ப யானை போன்ற தோற்றத்தில் இக் கட்டடம் கட்டப்படுகிறது. இதன் உயரம் 45 மீட்டர் (150 அடி)



# காதோடு சொல்லுகிறோம்

உலகமாணியான இயக்குநருக்கும், பூவின் பெயர் கொண்ட நடிகைக்கும் இடையே விரிசல் ஏற்பட்டுள்ளது. அதற்கு காரணம் முன்னணி கதாநாயகர்களில் ஒருவரான நட்சத்திரம் ஒன்றின் பெயர் கொண்ட நடிகராம். அவரிடத்தில் தன்னைக் கொடுத்து விட்டாராம் நடிகை. இயக்குநருடன் விரிசல் கிடையாது என்று நடிகை கூறினாலும் முன்பு போல் நெருக்கம் இல்லையாம்.

அமெரிக்க, சரக்கு போதைக்கு முதலில் காரணமாக இருந்த எண்ணெய் வள நாடு எது? அங்கிருந்து வந்த மூன்றெழுத்து நடிகைக்கு மார்க்கெட் டல். எத்தனையோ வழிமுறைகளைக் கையாண்டு பார்த்தும் தோல்விதான். அதனால் தற்போது தொழிலை மாற்றிக்கொண்டாராம்.

நாட்டுப்புறப் பாட்டுடன் தொடர்புடைய படத்தான் பிரமாண்டமான இயக்குநர் அவர். இவர் மறுபுகார் கூறும் நடிகைகள் பட்டியல் நீண்டுகொண்டே போகிறதாம். அண்மையில் வெளியான வீரத்தோடு தொடர்புடைய படத்திலும் இவரது விளையாட்டம் தாங்க முடியவில்லையாம். வெளியே சொல்ல முடியாமல் குமுறுகின்றனராம் நடிகைகள்.

இந்தரான அந்த இயக்குநருக்கு மூன்றெழுத்து நடிகைகள் மேல் அப்படியென்ன பிரியமோ? 'பூ' நடிகையை எல்லினார். பின்னர் 'ரம்' நடிகையுடன் ரமயா விட்டார். இப்போது 'கனாச' நடிகையுடன் சரசமாம். 'கா' நடிகரையும், சுந்தர இயக்குநரையும் சமாளித்து வருகிறார் நடிகை. 'கா' நடிகர் இன்னொரு 'பூ' நடிகையுடன் சுற்றுவதால் கனாச நடிகைக்கு இயக்குநரை கவனிக்க முடிகிறதாம்.

## ஜோடிப் பொருத்தம்?

சத்யராஜ், கவுசல்யா இணைந்து நடிக்கும் படம் 'பெண் ஒன்று கண்டேன்'.

சத்யராஜின் தோற்றத்திற்கு கவுசல்யா ஜோடியாக இருக்கமாட்டார் என்பது பலரது அபிப்பிராயம். ஆனால் சத்யராஜ் ஏனோ கவுசல்யாவுடன் நடிப்பதில் ஆர்வம் காட்டுகிறாராம்.

'பெண் ஒன்று கண்டேன்' படத்தை இயக்கும் பூபதி பாண்டியன் அடுத்து இயக்கும் படத்தின் நாயகன் அஜித்குமார்.




அம்சவிர்தன்-ரேஷ்மா
படம்: ஆனந்தம் ஆனந்தம்

## ரம்பா ரம்பா வம்பா வம்பா

ஜொள் உலகத் தலைவி, ஆயிரம் கால் மண்டபத்து அழகிய தூண் போன்ற சிவந்த செவ்வாழை கால் அழகி, செதுக்கிவைத்த தேக்குமர தொடையழகி என்றெல்லாம் ரம்பா புகழப்படுகிறார். அவரது சூடான பேட்டி.

**கே: உங்களுக்கும் சுந்தருக்கும் இடையே நெருக்கம் என்கிறார்களே?**

ர: இயக்குநருக்கும் ஒரு நடிகைக்கும் இடையே எந்தளவு நட்பு இருக்க வேண்டுமோ, அந்தளவு நட்பு எங்களுக்குள்ளும்!

**கே: உங்கள் காதலர் எப்படிப் பட்டவராக இருக்க வேண்டும்?**

ர: முதலில் ஆண் மகனாக இருக்க வேண்டும்.

சொத்துக் காவில் ... வேண்டும்.

**கே: சிம்ரான் வரவால் ...**

ர: கிடைகலே கிடை... தான் தமிழில் ... எனக்காக என்ற ...

**கே: அதிகம் கவர்ச்சி ...**

ர: இருக்கும்போது ... ரம்பா என்றால் ... எதை எதிர்பார்க்... அதனை கொடுப்ப...

**கே: உங்கள் உடலில் ... கள்?**

ர: என் கால்கள்தான் ... களுக்கு பிடித்த... எதுவோ அதுதான் ... பிடிக்கும்.

**கே: பிடித்த நடிகர்?**

ர: யார் பெயரை... வம்பில் மாட்ட...

**கே: பிடித்த நடி...**

ர: ரம்பா.



## மினி சினி

☸ 'கோலவரன்' படத்தைத் தயாரித்து வரும் கே.டி.குஞ்சுமோன் அடுத்து மம்முட்டி கதாநாயகனாக நடிக்கும் தமிழ்ப்படமொன்றை பிரமாண்டமாகத் தயாரிக்கவுள்ளார்.

☸ சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் 'திருநாள்' படத்தில் பூஜா என்ற புதுமுகம் நாயகியாக அறிமுகமாகிறார். இவருடன் 'இனியெல்லாம் சுகமே' படத்தில் நடித்த லக்ஷ்மி இதில் இரண்டாவது நாயகியாக நடிக்கிறார்.

☸ 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படம் தற்போது தெலுங்கில் தயாராகி வருகிறது. தமிழில் கார்த்திக்-ரோஜா நடித்த வேடங்களில் தெலுங்கில் வெங்கடேஷ்-சௌந்தர்யா நடிக்கிறார்கள்.

☸ 'எல்லாமே என் பொண்டாட்டி' படத்தைத் தொடர்ந்து வி.சேகர் அடுத்து இயக்கும் படத்திற்கு 'வீட்டோடு மாப்பிள்ளை' என்று பெயரிட்டுள்ளார்.

☸ 'ஜீன்ஸ்' படம் மூலம் தமிழில் அறிமுகமாகும் இந்தி நடிகை மாதுரி தீக்ஷித், அடுத்து 'ராம்' என்ற படத்தின் மூலம் முதன் முறையாக கன்னடப்பட உலகில் நுழைகிறார்.

☸ 'பூவரசன்' படத்தில் கார்த்திக் ஜோடியாக தமிழில் அறிமுகமான ரக்ஷனா, மீண்டும் கார்த்திக் ஜோடியாக புதிய படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

☸ 'மோனிஷா என் மோனாலிசா' படத்தில் பாடகராக அறிமுகமாகும் சிலம்பரசன், டி.ராஜேந்தரின் அடுத்த படத்திற்கு இசையமைக்கப்போகிறார்.

☸ 'கைவிளக்கு' என்ற படத்தில் மறைந்த நகைச்சுவை நடிகர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் பேரன் ராஜா முக்கிய வேடமொன்றில் அறிமுகமாகிறார்.

☸ 'அப்பாஸ் இந்தியில் நடிக்கும் 'ஹ பட்டோ ஹன்' படத்தை இயக்குபவர் தருண்குமார். இவர் பல படங்களுக்கு துணை இயக்குநராகப் பணியாற்றியதுடன் 'பரம்பரை' படத்தில் வில்லனாகவும் நடித்தவர்.

☸ 'என்றும் ஆனந்தம்' படத்தில் வினீத்-விக்னேஷ் கதாநாயகர்களாக நடிக்கிறார்கள். இவர்களுக்கு ஜோடிகளாக அஞ்சுவும், ரசிகாவும் நடிக்கிறார்கள்.

## ரம்யா குஷி

'ரஜினியுடன் நடிக்க ஆசை' என்று பேட்டி கொடுக்காத நடிகைகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். அப்படியானவர்களில் ரம்யா கிருஷ்ணனும் ஒருவர். அவருக்குத்தான் அடித்திருக்கிறது சான்ஸ்.

'அவருடன் நடிக்க ஆசை என்று வெளிப்படையாகக் கூறவில்லையே தவிர, சேர்ந்து நடிக்கும் வெறியே இருந்தது' என்கிறார் ரம்யா.

மோகன் பாபுவின் கடுமையான சிபாரிசு காரணமாகத்தான் ரம்யாவுக்கு வாய்ப்புக் கிடைத்ததாம். சௌந்தர்யாவுக்கு சிபாரிசு செய்தவரும் அவரே.

## குஷ்பு கலக்கல்

'வீரம் விளைஞ்ச மண்ணு' படத்தில் குஷ்புவின் நடிப்பு செம அசத்தல்.

இளம் நாயகிகளுக்கு போட்டியாக கவர்ச்சியும் காட்டுகிறார். பழம் நடிகைகளுக்கு போட்டியாக குண சித்திரம் காட்டி கண்களை கசக்கவும் வைக்கிறார்.

படம் எதிர்பார்த்தளவு இல்லையென்றாலும், விஜயகாந்த்-குஷ்பு ஜோடிப்பொருத்தமும் சரியாக இருக்கிறது.

## சிம்ரானுடன் விஜய்

விஜய்யுடன் சிம்ரான் ஜோடி சேரும் படம் 'உதயா'. இப் படத்திற்கான இசை: ஏ.ஆர்.ரகுமான், வசனம் சுஜாதா, இயக்கம் என். அழகப்பெருமாள்.

இப்படத்தில் முக்கிய வேடத்தில் இந்திய முன்னாள் தேர்தல் ஆணையாளர் டி.என்.சேஷன் நடிக்கிறார்.

அடுத்த பிரதமர் என்று முன்னர் பேசப்பட்ட சேஷன் புகழ் இப்போது மங்கிவிட்டது. மங்கிய நிலையில் திரையில் தோன்றப்போகிறார்.

"போதுமே இந்த இடம் கூடுமோ அந்த சுகம் கண்ணைப் பார்த்தால் சின்ன இடம் இருவர் கூடும் நல்ல இடம்"



ஜெயராம்-உதயா
படம்: சின்ன ராமசாமி பெரிய ராமசாமி

## இல்லை தடையப்பா

இருக்கவில்லை. அரச விஷயமாக ... புதுடில்லியில் இருந்த கலை... தொடர்பு கொண்ட ரஜினி, '...' என்று கேட்டாராம்.

"படையப்பா! உன் நடை... உன் வழியில் இல்லை தடையப்பா" ... ராம்.

அதற்கு ரஜினி 'இதே ... வைரமுத்து! ... என்றாரா... ...

திரையுலக மறுபக்கம் 80

# மூன்றெழுத்து நடிகைதான் தோன்றினார்

## காட்சிகளை பட்டியலிட்ட சஞ்சிகை



ரம்பா

நீலப்படக் கசட்டுக்கள் சென்னையில் பிடிபட்டதை அடுத்து பல நடிகைகள் கலங்கிப் போயிருக்கின்றனர்.

தாங்கள் சம்பந்தப்பட்ட படங்களும் சிக்கி இருக்குமோ என்று அறிவதற்காக படாதபாடுபட்டனர்.

இதனால் சில பொலீஸ் உயரதிகாரிகளுக்கு கொண்டாட்டம். மூன்றெழுத்து நடிகை ஒருவர் விசேஷ விருந்து கொடுத்து உபசரித்து விபரமறிந்தாராம்.

சில நடிகைகள் ஆரம்ப காலத்தில் அந்த மாதிரியான படங்களில் நடித்துள்ளனர். வேறு சில நடிகைகள் தாமையறியாமல் மாட்டிக்கொண்டும் இருக்கின்றனர்.

நீலப் படங்களில் நடிக்காத நடிகைகள்கூட, தாம் முக்கிய பிரமுகர்கள், இயக்குநர்கள் போன்றோருடன் தனிமையில் இருந்த போது தம்மை அறியாமல் அக்காட்சிகள் படமாக்கப்பட்டிருக்குமோ என்று பயந்து சாகின்றனர்.

இதனால் தற்போது தமது வீடுகளில் மட்டுமே 'டிஷ்கஷன்' வைத்துக்கொள்ள முடிவு எடுத்து விட்டனராம்.

நடிகைகளின் வீடுகளுக்கு செல்வதை முக்கிய புள்ளிகள் விரும்புவதில்லை. தம்மோடு 'டிஷ்கஷன்' செய்வதை படம் எடுத்து வைத்து நடிகைகளே மிரட்டலாம் என்று பயப்படுகின்றனர்.

அதனால் தாம் குறிப்பிடும் நட்சத்திர ஹொட்டல்களுக்கே நடிகைகளை அழைக்கின்றனர். மறுத்தால் பலவிதமான தொல்லைகள்.

ரொம்பவும் நொந்து போய் இருக்கின்றனர் நடிகைகள்.

### நான் அவள் இல்லை

இதற்கிடையே மூன்றெழுத்து நடிகை நீலப்பட கசட்டில் நடித்ததாக வெளியான செய்திகள் பரபரப்பை ஏற்படுத்தி விட்டன.

"நான் அவளல்ல, என்னைப் போன்ற டூப் வைத்து எடுத்துவிட்டனர்" என்று கூறுகிறார் நடிகை.

ஆனால் தமிழக சஞ்சிகை ஒன்று நடிகையின் மறுப்பை ஏற்காமல் சில தகவல்களை வெளியிட்டுள்ளது.

கசட்டில் தாம் கண்ட காட்சிகளையும் பட்டியலிட்டுள்ளது அச்சஞ்சிகை.

குறிப்பிட்ட நடிகைக்கு தெரிந்து எடுக்கப்பட்ட காட்சிகளா, இல்லையா என்பதில்தான் குழப்பம். மற்றப்படி அந்த நடிகைதான் அக்காட்சிகளில் தெரிகிறார் என்பதில் எவ்வித குழப்பமும் இல்லை என்றும் கூறியுள்ளது அச் சஞ்சிகை.

குறிப்பிட்ட மூன்றெழுத்து நடிகையை பல தடவைகளாக மொத்தம் 35 கசட்டுக்கள் எடுத்துள்ளனர். அதில் உள்ள சில காட்சிகள்:

1. வெள்ளை நிற உள்ளாடைகளோடு கறுப்பு நிற சரிதார் அணிகிறார்.
2. ஒரு நடுத்தர ஆண் உள்ளே இருக்க அங்கே போகிறார். அதன்பிறகு... டைமிங்.
3. ஓர் ஒல்லியான ஆசாமி தட்டுப்படுகிறார். அதன் பிறகு நான்கு கால்களின் உரசல்.
4. தலைமுடியை கொண்டையாகப் போட்டிருக்கிறார். கீழே மட்டும் ஆடை அணிந்திருக்கிறார். அப்படியே நடக்கிறார்.

இப்படி காட்சிமேல் காட்சியாக விரிகிறது. நீலப்படம் பார்க்க விரும்பாதவர்களும் பிரபல நடிகையின் படம் என்றதும் பார்க்க முயலுகிறார்கள் என்று தகவல் வெளியிட்டுள்ளது அச் சஞ்சிகை.

### வி.ஐ.பிகளிடம்

குறிப்பிட்ட கசட்டுக்களை அப்படியே அமுக்க இரகசிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

குறிப்பிட்ட நடிகைகள் சிலர் வி.ஐ.பிகளோடு தொடர்பு கொண்டு எடுத்த முயற்சிக்கு கைமேல் பலன் கிடைத்து விட்டது என்கிறார்கள்.

வி.ஐ.பிக்களுக்கு விசேஷ கவனிப்பு. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் செலவின்றியே 'கலைச்சேவை' பெற்றுக் கொள்வார்களாம் வி.ஐ.பிகள்.

பாவம் நடிகைகள், வி.ஐ.பிக்களை சரணடைந்தால்தான் காரியம் நடக்கும் என்பதால் வேறு வழியில்லாமல் தேடிப்போனார்கள்.

-*-

### சுருட்டல் மன்னர்

தனியார் நிதி நிறுவனங்களில் ஒன்று 'அனுபவ் தேக்குமர நிறுவனம்'. சுமார் 600 கோடியை பொதுமக்களிடம் இருந்து சுருட்டி விட்டது. இப்போது 'அனுபவ்' உரிமையாளர் கைது.

இந்த உரிமையாளர் மீனாவுக்கு பல கோடிகளை கொட்டிக் கொடுத்தவர் என்று முதற்கட்ட தகவல்கள் வெளியாகின. தங்க நகைகளால் மட்டுமே அவர் உடலை அலங்கரித்து பார்த்து மகிழ்ந்தவர் என்ற தகவலும் வெளியாகி இருக்கிறது.

மீனா மட்டுமன்றி வேறு பல நடிகைகளுடனும் தொடர்பு வைத்திருந்தாராம். சிறந்த அமரக் கவிஞரின் மகளான நடிகையும் அந்த தொழிலதிபரின் கட்டிலை அலங்கரித்தவர்களில் ஒருவராம். இந்திய நதி ஒன்றின் பெயர் கொண்ட நடிகையும் தொழிலதிபருக்கு நெருக்கமாக இருந்து கனமாக கறந்தாராம்.

பொதுமக்களின் வைப்புப் பணத்தில் உல்லாசம் கண்டிருக்கிறார் தொழிலதிபர். இலாபம் கண்டவர் நடிகைகள்.

தனது இக்கட்டான நேரத்தில் அரசியல் புள்ளிகளை தொடர்பு கொண்டு உதவுமாறு தொழிலதிபர் நடிகைகள் சிலருக்கு தகவல் அனுப்பினாராம். 'ஆளை விட்டால் போதும்' என்று நழுவிவிட்டனராம் அந்த நடிகைகள்.



விஜயகாந்த்-லைலா
படம்: கள்ளழகர்

### காதலில் சிக்கிய வாரிசு
### தந்தை சொன்ன யோசனை

அந்தக் கால வெள்ளி விழா பல கண்ட நாயகன் ரவிச்சந்திரன் சொந்தமாக படம் தயாரிக்கிறார்.

படத்தின் பெயர்: 'மானசீக காதல்'. கதாநாயகனாக நடிப்பது அவரது வாரிசு அம்சவிர்தன்.

அம்சவிர்தன் நடித்த படங்கள் எல்லாம் பாதியிலேயே நிற்கின்றன. ஒரு படமாவது வெளியே வந்தால்தான் அம்சவிர்தன் நடிகராக அந்தஸ்து பெறலாம்.

அதுதான் மகனுக்காக அப்பாவே படம் தயாரிக்கிறார். இப்படமாவது முழுக்க எடுத்து முடிக்கப்பட்டால் சந்தோசம்தான்.

அம்சவிர்தன் பற்றி இன்னொரு சமாச்சாரம். 'ஆனந்தம் ஆனந்தம்' படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்தவர் ரேஷ்மா.

நெருக்கமான காட்சிகளின்போது இருவரும் நெருக்கமாகிவிட்டனர். அதனால் படப்பிடிப்பு முடிந்ததும், படப்பிடிப்பில் பெற்ற அனுபவத்தின் தொடர்ச்சியைப் பெறுவதற்கு ரேஷ்மா வீட்டுக்கே போய்விடுவாராம்.

பழம்பெரும் நடிகரின் மகன் என்பதால் ரேஷ்மா வீட்டிலும் தடபுடலான வரவேற்பு.

இவ்விவகாரம் ரவிச்சந்திரனுக்கு தெரியவந்ததும் மகனை கண்டித்தாராம். தனது அனுபவங்களை எடுத்து அடுக்கினாராம். "வளர முன்னரே இந்தமாதிரி சமாச்சாரங்களில் மாட்டிக் கொள்ளாதே. முதலில் முன்னுக்கு வா. பின்னர் உன் பின்னுக்கு பலர் வருவார்கள்" என்று ஆலோசனையும் கூறினாராம்.

தந்தையின் ஆலோசனையைக் கேட்டு நடக்க முடிவு செய்துவிட்டாராம் மைந்தன்.

### இரு ஜோடிகள்

தெலுங்கு பட உலகில் கொடி கட்டிப் பறக்கும் இயக்குநர் கீதகிருஷ்ணா. அவர் முதன் முதலாக தமிழில் இயக்கும் படம், 'டைம்'.

கதாநாயகன் பிரபு தேவா. அவருடன் ஜோடி சேர இருவர். இருவரும் மும்பாய் இறக்குமதிகள். மேனகா செனாயில்; ராதிகா சவுத்ரி ஆகியோரே அந்த இறக்குமதிகள்.

இசை: இளையராஜா. பாடல்கள்: பழனிபாரதி.

'படையப்பா' பட ஆரம்ப ...விழாவின்போது கலைஞர் ...ருணாநிதி தமிழ்நாட்டில் ...வில் சென்றிருந்தாராம். ...டன் தொலைபேசியில் ... வாழ்த்துங்கள்'

...த படையப்பா, ...று வாழ்த்தினா

...கைதான் படத்திற்கு ... பாட்டும் இருக்கிறது. ...ப்படியா, நான் வைரமுத்து ...ட்டியாக 'விரும்பவில்லை' என்று ...தி கலகல வென்று சிரித்தாராம் கலைஞர்.



முகப்பில்

பிரபு-தேவயானி
படம்:-என் உயிர் நீதானே

# பொய்யாய்ப்போன பூகோள இடைவெளி!

எனக்குள் ஒரு
ஆற்றங்கரை நாகரிகத்தை
அகழ்ந்தெடுத்தவள் நீ!
அதனால்தான்
இந்த சகாராவிற்கு
நைல் நதியையே
சீதனம் கொடுத்தாய்!

இறந்த காலத்தில்
என் இதயம் முழுவதும்
ஈரான்–ஈராக்....!
நிகழ்காலத்தில்
அதுவே நமக்கு
பூமியின் சொர்க்கம்!

பருவக்காற்றின் துணையோடு
பயணமாகிறது
என் பாய்மரப் படகு!

என்
நம்பிக்கையின் முனையே...!
உன் படகுத்துறையில்தானே
இனி என்
வாழ்வின் நங்கூரம்?

என்
திசை காட்டும் கருவி என்னவோ–
எப்போதுமே
உன் திசையைத்தான்
காட்டுகிறது!

அமைதிக் கடலே!
உன்
நீல நயனங்கள் என்ன
என் கவிதைப்படகுக்கு
கலங்கரை விளக்கமா?

மனிதனின் காலடி படாத
துருவப் பனித்துளி போல்
தூய்மையானவளே!
இதோ...
வருகிறது
உன்னைத் தேடி
என் கவிதை–
ஒரு பென்குவின் பறவை போல
வழி கேட்டுக்கொண்டு
நான்
பின்னால் வருகிறேன்!

நம்மைப் பொறுத்தவரை
பொய்யாய்ப் போனது
பூகோள இடைவெளி
அதனால்தான்
தீர்க்க ரேகையையும் தாண்டி
வருகிறது
என் காதல் ரேகை.

மக்காவிலிருந்து-இனியவன்
இசார்தீன்.

## தேன்கிண்ணம்





# விடை காணாத மௌன வினாக்கள்

பிரிவின் கனதியை
மனதில்வைத்து அமிழ்த்த
முடியவில்லை.
பூஞ்சிட்டு தேன்குடித்த
மலர்வனத்தில் ஒரு
சுற்றுலாப் போனதும்
கவிதைகளை எழுதிவைத்து
அஞ்சலில் அர்ப்பணித்ததும்–
என்ன செய்ய என் அன்பே?

என் இதயத்தில் சுரக்கும்
மௌன வினாக்களுக்கு
என்ன விடை...?

ஒவ்வொரு நீண்ட வீதிகளில்
நடப்பதும்
எங்கேயாவது பார்த்துக்கொண்டு
சிந்திப்பதின் நடுவில்
உன் மோவாயை என்
தோளில் கிடத்தியதும்
நினைவில் மிதக்கிறதே!

நீ வாழத்தான் வேண்டும்!
உன் கண்ணீரைத்
துடைபபதற்காய்த்தான்

என் விழி வாசலை
அகலத் திறந்து கொண்டேன்!

நெடுந்தூரம் பயணித்து விட்டேன்!
என் உயிரினும் இனிய...
என்றாரம்பம் செய்யும்
என் முகவரிகளில் குவியும்
உன் இதய பரிபாஷைகளைக் கண்டு
எட்டு வருஷங்கள்
எப்படித்தான் கழிந்து போயின....?

எங்கே இனி அப்படியொருமுறை
மடிபடுப்பதும் கை கோர்ப்பதும்
பின்னர் பயணிப்பதும்......?

சந்தித்து இந்தப் பிரிவுகளை
எல்லாம் உன் மடியில்
கொட்டி அழுவதற்கும்
ஆறுதல் படுவதற்கும்
என்றாவது ஒருநாள்
ஒரு புத்தம் புது வருடம்
பிறக்காதா?
அது இந்த ஜென்மத்திலாவது
அல்லது அடுத்த...

ஹரீரா அனஸ், இலண்டன்.

# ஞாபகம் இருக்கிறதா?

ஞாபகம் இருக்கிறதா?
தமிழா!
ஞாபகம்
இருக்கிறதா?
–0–
எண்பத்து மூன்றில்
தீட்டிய கத்தி
ஞாபகம் இருக்கிறதா?– அது
இன்னும்
கூராய் குத்தி
முடிப்பது
ஞாபகம் இருக்கிறதா?
–0–
கண்டி யாத்திரை
ஞாபகம் இருக்கிறதா?
அதில்– எங்கள்
கனவுகள்
கலைந்தது
ஞாபகம் இருக்கிறதா?
–0–
வெலிக்கடை
வெறித்தனம்
ஞாபகம் இருக்கிறதா?
அதில்
பலிக்கடா
பட்டியல்
ஞாபகம் இருக்கிறதா?
–0–
தரப்படுத்தல்
தந்திரம்
ஞாபகம் இருக்கிறதா?
அதனால்–
நாம் உருப்படாமல்
உருக்குலைந்தது
ஞாபகம் இருக்கிறதா?
–0–
செம்மணி புதைகுழி
ஞாபகம் இருக்கிறதா?
அதில்– பல
கண்மணிகள்
அழிந்தது
ஞாபகம் இருக்கிறதா?
–0–
தீர்வுப் பொதி
என்ற ஒன்று
ஞாபகம் இருக்கிறதா?
அதுவே
தீர்ந்து போனதும்
ஞாபகம் இருக்கிறதா?
–0–
ஞாபகம் இருக்கிறதா?
தமிழா,
ஞாபகம்
இருக்கிறதா?


பாலகுமாரன்- ஸ்ரீஜெ ஊரகம்.

# மாபெரும் துரோகம்

நேசநாட்டு படைகளின் தாக்குதல்களால் இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோல்வி கண்டது. அணுக்குண்டு வீசும் அவசியமே இருக்கவில்லை. ஆனால் அமெரிக்கா இரண்டு அணுக்குண்டுகளை ஹிரோஷீமா, நாகசாக்கி ஆகிய நகர்கள்மீது போட்டது. வரலாறு காணாத பேரழிவு ஏற்பட்டது.

இரண்டாம் உலகப் போர் வெற்றிக்கு தனது பலமே பிரதான காரணம் என்று உலகை மிரட்டவே அமெரிக்கா அணுக்குண்டு போட்டது. அணுக்குண்டு வீச்சின் பின்னர் தப்பிப் பிழைத்தவர்களின் அவலங்களில் சிறு துளி மட்டுமே இவை.

ஆகஸ்ட் 9, 1945ல் பகல் 11.02 மணிக்கு நாகசாக்கிமீது அமெரிக்கா வீசிய அணுக்குண்டு வெடித்தபோது எடுக்கப்பட்ட படத்தையும் காணலாம். மனித குலத்திற்கு அமெரிக்கா செய்த மாபெரும் துரோகம் இது!



# காதல் கல்யாண மன்னன்

தனது 79வது வயதில் காதல் மணம் செய்து கொண்டவர் ஜெமினி கணேசன்.

நான்காவது கல்யாணம் என்று முதலில் செய்திகள் வந்தன. அது தவறான புள்ளிவிவரம்.

ஆறாவது கல்யாணம் என்பதே சரியான தகவல்.

இதுதவிர ஏராளமான காதலிகள் இருந்திருக்கின்றனர். அது தனிக்கணக்கு.

முதலில் கல்யாணம் செய்தது பாப்ஜியை. பின்னர் புஷ்பவல்லி, சாவித்திரி, ராஜேஸ்வரி, சித்ரா ஆகியோரையும் கல்யாணம் செய்து கொண்டார்.

சினிமாவில் நடித்து சம்பாதித்த பணத்தை நல்ல தொழில்களில் முதலீடு செய்து கொண்டார் ஜெமினி.

தற்போதும் சென்னையில் பெரும்



ஆறாவது மனைவியுடன்

வர்த்தகக் கட்டடத் தொகுதிகள் உட்பட ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. சிவாஜி கணேசனைவிட அதிக சொத்து ஜெமினியிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பணத்தை முதலீடு செய்துவிட்டதால், அதில் வரும் இலாபத்தை வைத்தே தனது காதல் களியாட்டங்களுக்கு செலவு செய்து கொள்கிறார். அதனால் பணம் கரையாமல் இருக்கிறது.

ஜெமினியின் மனைவியரில் பாப்ஜி, புஷ்பவல்லி, சாவித்திரி, ராஜேஸ்வரி ஆகியோருக்கு பிள்ளைகளும் பிறந்தனர். இப்போது அந்தப் பிள்ளைகள் வழியாக பேரன்களும், பேத்திகளும் இருக்கிறார்கள்.

அந்த பேரன், பேத்திகளும் குழந்தைகளைப் பெற்றுள்ளனர்.

இந்த நேரத்தில் 35 வயது லூசியானாவை காதலித்து கைப்பிடித்திருக்கிறார். இது ஆறாவது கல்யாணம்.

பெங்களூரைச் சேர்ந்த லூசியானாவை நான்கு வருடங்களாக காதலித்தாராம் ஜெமினி.

"செக்ஸுக்காக கல்யாணம் செய்து கொள்ளவில்லை" என்று இருவரும் கோஷ்டிகானம் போலக் கூறுகின்றனர்.

ஆனால் ஜெமினி செக்ஸிலும் அதீத நாட்டம் கொண்டவர் என்பதும், அந்த விவகாரத்தில் கில்லாடி என்பதும் பரகசியம்.

ஜெமினிக்கு முதல் கல்யாணம் 19 வயதில் நடந்தது.

ஜெமினியின் தொல்லை தாங்க முடியாமல்தான், அவர் வேறு பெண்களை நாடுவதை முதல் மனைவி பாப்ஜி தடுக்கவில்லை. தனியாளாக தன்னால் அவரை சமாளிக்க முடியாது என்று நினைத்தார் போலும்.

"ராஜேஸ்வரி தானாக வலிய வந்து என்னோடு வாழ்ந்தாள். பிரபல நடிகரின் மனைவி என்று தன்னைச் சொல்லிக்கொள்ள ஆசைப்பட்டாள்.

பாப்ஜியை விவாகரத்து செய்யுமாறு வற்புறுத்தியதால் அவளைவிட்டு விலகிவிட்டேன்!" என்று கூறியிருந்தார் ஜெமினி.

இன்னொரு மனைவி சித்ரா. "இவர் நடிகை பத்மினியின் நடனக் குழுவில் ஆடிக்கொண்டிருந்தவர். ஜெமினியின் மனதையும் ஆட்டினார். ஜெமினியும் விழுந்தார்.

சித்ரா-ஜெமினி உறவை ஜெமினி வீட்டார் விரும்பவில்லை. அதனால் கோபமடைந்த ஜெமினி தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொள்ள முயன்றார்.

இன்னொரு மனைவி நடிகை புஷ்பவல்லி. இவருக்கும் ஜெமினிக்கும் பிறந்த குழந்தைதான் மும்பாய் பட உலகைக் கலக்கிய செக்ஸ் புயல் ரேகா.

ஜெமினி போன்றே ரேகாவும் காதல் மன்னி. "மனதுக்குப் பிடித்த ஆண் நண்பர்களுடன் செக்ஸ் வைத்துக்கொள்ளத் தயங்க மாட்டேன்!" என்று கூறி பரபரப்பு ஏற்படுத்தியவர் ரேகா.

ரேகாவின் தாயாரான புஷ்பவல்லி பற்றி ஜெமினி மெய் மறந்து புகழ்ந்திருக்கிறார்.

"ஒரு சினிமா நடிகனின் ஆசாபாசங்களையும், உணர்ச்சிகளையும் புரிந்துகொண்டு அவனோடு வாழ்ந்து, அவனுக்கு ஏற்றபடி இன்பம் தந்து வாழும் திறமை,



'மிஸ்ஸியம்மா' படத்தில்

பாப்ஜியைவிட புஷ்பவல்லியிடமே இருந்தது. எனவே எனக்கேற்றவள் என்ற இலயிப்பில் பல ஆண்டுகள் வாழ்ந்தேன்.

காதல் என்றால் என்ன, பெண் என்றால் என்ன என்பதையே எனக்குப் புரிய வைத்தவள் புஷ்பவல்லி" என்று கூறியிருந்தார்.

ஜெமினியை காதல் மன்னனாக மாற்றிய பெருமை புஷ்பவல்லிக்கே சேரும்.

ஜெமினிமீது பல நடிகைகளுக்கு ஒரு ஈர்ப்பு இருந்தது.

நடிகை பிரமிளா ஒருமுறை சினிமா நிருபர் ஒருவரிடம் "ஜெமினி யுடன் 'பழகிப் பார்த்தா' ஜென்மத்துக்கும் மறக்க முடியாது," என்று தன்னை மறந்து வெளிப்படையாக கூறினாராம்.

தனது ஆறாம் திருமணம் தொடர்பாக காதல் மன்னனும், கல்யாண மன்னனுமான ஜெமினி என்ன கூறுகிறார்:

"நான் இன்னும் 35 வயசுக்காரனாகவே நினைத்துக் கொள்கிறேன். இனியும் குழந்தை பெற்றுக் கொள்ள முடியுமானால் சந்தோஷம்தான். வயதாகிவிட்டதே என்று கவலையே படக்கூடாது. நாம் வாலிபமாக இருக்கிறோம் என்று நினைத்தால் போதும். எப்பவும் இளமைதான்!"

ஜெமினியும், லூசியானாவும் தனிக் குடித்தனம் நடத்துகின்றனர். முதல் மனைவி பாப்ஜி தன் கணவரின் ஆறாவது மனைவியை ஆசிர்வதித்துவிட்டார்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## சமையலறை சமாச்சாரம்



- பல் துலக்கும் பிரஷ்ஷை நீண்ட நாட்களுக்கு அப்படியே வைத்திருக்கக் கூடாது. சிறிது காலத்தில் பிரஷ்ஷிலுள்ள நார்கள் கூர்மையிழந்து விடும். எனவே பிரஷ்ஷை குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாற்றி விடுவது நல்லது.
- வீட்டில் மூட்டைப் பூச்சித் தொல்லை இருக்கிறதா? அவற்றை ஒழிக்க இதோ ஓர் எளிய வழி. கற்பூரம், தேங்காய் எண்ணெய் இரண்டையும் நன்றாகக் கலக்கி மரத்தளபாடங்களின் மீது பூசி விட்டால் மூட்டைப்பூச்சித் தொல்லை நீங்கும்.
- திடீரென்று விருந்தாளி வந்து விட்டால் சாப்பாட்டிற்குக் பொரியல், துவையல் இல்லையே என்று கவலைப்பட வேண்டாம். கரட், வெங்காயம், கொஞ்சம் தயிர் இருந்தால் போதும். கரட்டைத் துருவி, வெங்காயத்தை மெலிதாக நறுக்கி, தயிருடன் கலந்து உப்புப் போட்டு கறிவேப்பிலை, அல்லது கொத்தமல்லித் தழை இருந்தால் சின்னதாக நறுக்கி தயிரில் கலந்தால் 'சாலட்' ரெடி. உடலுக்கும் மிகவும் நல்லது.
- சமையலறையிலுள்ள பாத்திரம் கழுவும் தொட்டியைச் (சிங்க்) சுத்தப்படுத்த, பழைய செய்தித்தாள்களைக் கொண்டு அழுத்தித் துடைத்தால், அழுக்கு நீங்கி பளிச்சென்று இருக்கும்.
- போத்தலில் இருந்து ஊறுகாயை எடுக்கும்போது எவர்சில்வர், பிளாஸ்டிக் கரண்டிகளை உபயோகிக்காமல் மரத்தாலான கரண்டிகளை உபயோகிக்கலாம். இதனால் ஊறுகாய் கெடாது. கரண்டிகளும் பாதிக்காது.
- தினந்தோறும் குளிக்கும்போது சோறு வடித்த கஞ்சியில் சிறிதளவு எடுத்து அதில் சுத்தமான அரப்புத்தூள் போட்டுக் கலந்து அதைக் கொண்டு உடலைத் தேய்த்துக் குளித்தால் மேனி மென்மையடையும்.

## அளவான தூக்கம்

தூக்கம் சுகமான விஷயம். அளவோடு தூங்கினால் வளமான உடல்நிலை. ஏராளமாகத் தூங்கினால் தூங்குமூஞ்சி என்ற பட்டம். தூக்கம் குறித்து டாக்டர் பிரெட்ரிக் கோயினிக் என்பவர் ஆராய்ச்சி செய்துள்ளார். இதுபற்றி அவர் கூறியவை:



சராசரியாக ஒரு மனிதன் எட்டு மணி நேரம்தான் தூங்க வேண்டும். இத்தகையவர்கள் திறமைசாலிகளாக- தன்னம்பிக்கையுள்ளவர்களாக இருப்பார்கள். இதற்கும் குறைவாகத் தூங்குபவர்கள் பத்துப் பேருடன் பழகும்போது, கலகல என்று பேசுவார்கள். இவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதில் முனைப்பாக இருப்பார்கள். நிறைய வேலைச்சுமை இருந்தாலும் இவர்கள் சோர்ந்து போய் உட்கார மாட்டார்கள். இவர்கள் இலக்கு உயர் பதவியாகவே இருக்கும்.

கலை உலகில் தொடர்பு உள்ளவர்கள் அதிக நேரம் உறங்குபவர்களாக இருப்பார்கள். நிறையக் கனவு காணும் இயல்பும் இவர்களுக்குண்டு. இவர்கள் எதற்கெடுத்தாலும் கவலைப்படுபவர்களாகவும், தனிமையில் இனிமை காண்பது இவர்கள் இயல்பு. நிறைய நேரம் உறங்குபவர்கள் வெட்கப்படும் இயல்பு உள்ளவர்கள். எட்டு மணிநேரத்திற்கு அதிகமாக உறங்குபவர்கள்தான் இவர்கள்.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்:-
**திருமதி அ. அன்னலெட்சுமி**
வட்டார இல 06, சேனையூர், மூதூர்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EV

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 12-12-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 64

புவனா

சட்டப்படி விவாகரத்து பெறாமல் சாள்ஸசை பிரிந்திருப்பது டயானாவுக்கு பெரும் துன்பமாக இருந்தது.

சட்டப்படியான விவாகரத்து பெறும்வரை அரச குடும்ப கட்டுப்பாடுகள், போலியான மரபுகள் போன்றவற்றிலிருந்து விடுதலை பெற முடியாது.

'வேல்ஸ் இளவரசி' என்றே டயானா அழைக்கப்பட்டு வந்தார். அப்படி அழைக்கப்படுவதும் டயானாவுக்குச் சலிப்பாக இருந்தது.

தன் உள்ளக்கிடக்கையை சிநேகிதிகளிடம் கூறினார். "வேல்ஸ் இளவரசியாக இருப்பதைவிட, உலகின் இளவரசியாக இருக்கவே விரும்புகிறேன் !" என்றார்.

சாள்சைப் பிரிந்திருந்த மூன்று வருடங்களுக்குள் டயானாவிடம் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன என்று அவரது சிநேகிதிகள் கூறினார்கள்.

தன்னுடைய கருத்துக்களைத் தானே வெளிப்படுத்தவும், தனது காரியங்களைத் தானே தீர்மானிக்கவும், தனது வாழ்க்கையை தானே கொண்டு நடத்தவும் துணிந்துவிட்டார்.

பிரிட்டிஷ் அரச குடும்பம் சட்டப்படி விவாகரத்து வழங்காமல் இழுத்தடிக்கவே விரும்பியது.

அவர்களது எண்ணத்தை புரிந்துகொண்ட டயானா, தனது வழக்கறிஞர்களுடன் ஆராய்ந்தார். அவர்கள் கூறிய ஆலோசனை, 'நீங்களாக விவாகரத்துக் கோரியதாக இருக்கக்கூடாது. அவர்களாகத் தருவதாக இருப்பது நன்று!'



காமிலா பார்க்கருடன் அந்தரங்கமான உறவு இருப்பதை தொலைக்காட்சிப்பேட்டி ஒன்றில் சாள்ஸ் ஒப்புக்கொண்டிருந்தார். டயானா விவாகரத்து கோருவதாக இருந்தால், அப் பேட்டியில் சாள்ஸ் கூறியதை ஆதாரமாக வைத்து விவாகரத்துப் பெறலாம்.

ஆனால் தானாகக் கேட்காமல் அரச குடும்பம் தாமாக முன்வந்து வழங்க வேண்டும் என்ற முடிவோடு இருந்தார் டயானா.

அப்போதுதான் டயானாவுக்கு இன்னொரு தகவல் எட்டியது.

டயானாவுக்கும், அரச குடும்பத்தினருக்கும் நெருக்கமான ஒருவரே அத்தகவலைத் தெரிவித்தார்.

"டயானா விரும்பினால் தானாக வந்து விவாகரத்துக் கேட்டுக் கொள்ளட்டும். நானாக ஒருபோதும் கொடுக்கப்போவதில்லை!" என்று சாள்ஸ் அவரிடம் கூறினாராம்.

அதனை அறிந்த டயானா கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார். 'சாள்ஸ் என்னைப் பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்? அவருக்கு நான் யார் என்பதை விரைவில் புரிய வைக்கத்தான் போகிறேன் !" என்று கூறினார் டயானா.

'சாள்ஸ் பேட்டியளித்தபோது கமீலா பார்க்கருடன் உள்ள உறவை ஒப்புக் கொண்டுவிட்டார். அவர் ஒப்புக்கொள்ள முடியுமானால் நான் ஏன் ஒப்புக் கொள்ள முடியாது? நானும் மனம் திறந்து பேசவேண்டியதுதான்!' என்று முடிவு செய்தார் டயானா.

அரச குடும்பத்தையும், சாள்ஸ்சையும் தர்மசங்கடத்தில் சிக்கவைத்து அவர்களாகவே விவாகரத்தை தருவதற்கான கட்டாயத்தை ஏற்படுத்தும் விதமாகப் பேட்டியை பயன்படுத்தவும் திட்டமிட்டார் டயானா.

பேட்டிக்கான கேள்விகள் முன்கூட்டியே தயார் செய்யப்பட்டன. ஜேம்ஸ் ஹெவிட் தொடர்பான கேள்வியும் இடம் பெற்றிருந்தது.

இப் பேட்டி தொடர்பாக டயானா வெளியே மூச்சுவிடவில்லை. நிகழ்ச்சி தயாரிப்பாளர் மாட்டின் பஷீரும் மூச்சுக்காட்டவில்லை.

பிரிட்டிஷ் அரச குடும்பம் தொடர்பான பல நிகழ்ச்சிகளைத் தயாரித்தவர் பஷீர்.

டயானாவின் பேட்டியை ஒளிபரப்ப ஏற்பாடு நடக்கிறது என்று தெரிந்தால் தடுக்கப்பட்டுவிடும் என்பது அவருக்குத் தெரியும்.

ஒரு தொலைபேசி அழைப்பு மூலமே நிகழ்ச்சியைத் தடை செய்ய அரச குடும்பத்தால் முடியும்.

பி.பி.சி.யில் தனக்கு நம்பகமான சில அதிகாரிகளுக்கு மட்டுமே பஷீர் பேட்டி தொடர்பாக கூறியிருந்தார்.

பி.பி.சி. இயக்குநர் சபை அதிகாரிகளுக்குக்கூட முதலில் தெரிவிக்கவில்லை. அவர்கள் அறிந்தால் முக்கிய பகுதிகள் தணிக்கை செய்யப்பட்டுவிடும்.

### பேட்டி

1995 நவம்பர் மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை-எவ்வித பரபரப்பும் இன்றி மிக அந்தரங்கமாக காரியங்கள் நடந்து கொண்டிருந்தன.

கென்சிங்டன் மாளிகையில் இருந்த தனது பணியாளர்களுக்கு சனிக்கிழமையன்றே விடுமுறை கொடுத்து அனுப்பிவிட்டார் டயானா.

திடீரென்று ஏன் விடுமுறை தருகிறார் என்ற ஆச்சரியத்தோடு பணியாளர்கள் போய்விட்டனர்.

கிளுகிளுப்பான காரணங்களையும் சிலர் ஊகித்துக் கொண்டனர். தங்களை அனுப்பி வைத்துவிட்டு, முக்கிய நபர் எவரையாவது சந்தித்து மாளிகையிலேயே உல்லாசமாக இருக்கப் போகிறார் என்று கற்பனை பண்ணிக் கொண்டனர்.

## இரகசிய ஏற்பாடுகள்

### தேடி வந்த வாய்ப்பு

இக்கட்டத்தில் டயானாவே எதிர்பாராத வாய்ப்பு ஒன்று அவரைத் தேடி வந்தது.

இலண்டன் பி.பி.சி. தொலைக்காட்சியில் பிரபலமான நிகழ்ச்சிகளில் ஒன்று 'பனோரமா'.

அந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்குபவர் மாட்டின் பஷீர்.

அவர் டயானாவுடன் தொடர்பு கொண்டார். தனது நிகழ்ச்சியில் டயானாவின் பேட்டியை ஒளிபரப்ப விரும்புவதாகக் கூறினார்.

டயானா உடனடியாக பதில் கூறவில்லை. யோசித்தார்.



பேட்டியின்போது

பிரத்தியேகமான மிகச் சிறிய வீடியோ காமராவுடன் பி.பி.சி. நிகழ்ச்சித் தயாரிப்பாளர் பஷீரும் நம்பகமான சிலரும் டயானாவின் மாளிகைக்கு வந்து சேர்ந்தனர்.

பெரிய கமராவைக் கொண்டுவந்தால், அதனை யாராவது தற்செயலாகக் கண்டு விட்டால், பேட்டி ஏதோ எடுக்கப்படுகிறது என்பதை ஊகித்து விடுவார்கள். என்ன பேட்டி என்று அறிய முயற்சிப்பார்கள்.

அதனால்தான் மிகச் சிறிய கமராவுடன் வந்தனர். சகல ஏற்பாடுகளுமே மிக நுணுக்கமாகச் செய்யப்பட்டதால்தான் இரகசியம் கடைசிவரை பாதுகாக்கப்பட்டது.

உலகையே கலக்கப்போகும் பேட்டி அல்லவா? அதற்கு எந்தளவுக்கு முயன்றாலும் தகும்.

மிக இரகசியமாக பேட்டி பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்து முடிந்ததும் டயானாவுக்கு போட்டுக் காண்பித் தார்கள். அவருக்கு திருப்தி.



நவம்பர் மாதமே அப்பேட்டி பி.பி.சி. யில் பரபரப்பாக ஒளிபரப்பானது.

குறுகிய அறிவிப்புடன் பேட்டி ஒளிபரப்பானபோதும் உலகெங்கும் கோடிக்கணக்கான மக்கள் அப்பேட்டியை கண்ணுற்றனர்.

சகல செய்தி நிறுவனங்களும் பரபரப்பாக அதனை வெளியிட்டன.

அலைபாயும் கண்களுடன், சோகத்தின் நிழல் கவிந்த முகத்துடன் டயானா பேட்டியளித்தார்.

"ஜேம்ஸ் ஹெவிற் எனது பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டார். அவர் ஒரு நம்பிக்கைத்துரோகி!" என்று கூறிய டயானா தனக்கும் அவருக்கும் இடையே உடல் உறவு ஏற்பட்டது என்பதையும் ஒப்புக் கொண்டார்.

டயானா இப்படிக் கூறியதைக் கேட்டவர்கள் அதிர்ச்சியுற்றனர். இத்தனை வெளிப்படையாக டயானா ஒப்புக் கொள்ளுவார் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

பிரிட்டிஷ் அரச குடும்பம் கலங்கிப் போனது. மகாராணி உடனடியாக சாள்ஸ்சை அழைத்தார்.

"விவாகரத்துக்கு ஏற்பாடு செய்யப் போகிறேன். தயாராக இரு!" என்றார்.

**(அடுத்த வாரமும் வரும்)**

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## அப்புத்தளை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்


**திருமதி ரி.சரோஜா,**
**தம்பேத்தன்னை, அப்புத்தளை.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.






> சொந்த அரசும்புவிச்
> சுகங்களும் மாண்புகளும்
> அந்தகர்க் குண்டாகு மோ! – கிளியே!
> அலிகளுக் கின்ப முண்டோ?
>
> –சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# பாலனின் பேராசை



பாலன் என்பவனிடம் நூற்றுக் கணக்கான ஆடுகள் இருந்தன. அந்த ஆடுகளின் மூலம் நல்ல வருமானமும் கிடைத்து வந்தது.

ஒருநாள் பாலன், பேரீச்சம்பழ வியாபாரி ஒருவரைத் தற்செயலாகச் சந்தித்தான். அவரிடம் அவன்,

"நீங்கள் பேரீச்சம்பழத்தை எங்கிருந்து வாங்கி வந்து விற்பனை செய்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அதற்கு அந்த வியாபாரி, "நான் அராபிய நாடுகளில் இருந்து பேரீச்சம் பழங்களை வாங்கி, ஒரு கப்பலை வாடகைக்குப் பிடித்து, அதன் மூலம் பேரீச்சம் பழங்களை இங்கே விற்கிறேன்!" என்று சொன்னார்.

"பேரீச்சம்பழத்தினால் உங்களுக்கு நல்ல இலாபம் கிடைக்கிறதா?" என்று கேட்டான் பாலன்.

"நல்ல இலாபம் கிடைக்கிறது!" என்றார் அந்த வியாபாரி.

அன்று வீட்டிற்குத் திரும்பிய பாலனுக்கு ஒரே யோசனை.

'இத்தனை- ஆடுகளை வைத்துக் கொண்டு பெரிதாக இலாபம் சம்பாதிக்க முடியாது. இவைகளை விற்றுவிட்டு, அந்தப் பணத்தில் பேரீச்சம்பழ வியாபாரம் செய்தால் அதிக இலாபம் கிடைக்கும்' என நினைத்தான்.

மறுநாளே தன் ஆடுகள் அனைத்தையும் விற்றுப் பணம் சேகரித்தான். பிறகு அந்தப் பணத்துடன் வெளிநாடு சென்றான்.

வெளிநாட்டில் பேரீச்சம்பழங்களை வாங்கி, ஒரு சரக்குக் கப்பலில் பேரீச்சம்பழங்களை ஏற்றிக்கொண்டு நாடு திரும்பிக் கொண்டிருந்தான் பாலன்.

கப்பல் நடுக்கடலில் வந்து கொண்டிருந்த வேளையில் பெரும்புயல் வீசத் தொடங்கியது. கப்பல் தத்தளித்தது. உடனே கப்பல் மாலுமி, கப்பலில் உள்ள பாரத்தைக் குறைப்பதற்காக, கப்பலில் இருக்கும் பொருட்களைக் கடலில் வீசும்படி உத்தரவிட்டார்.

கப்பலில் உள்ள பொருட்களை எல்லாம் கப்பல் சிப்பந்திகள் கடலில் வீசினார்கள். இவற்றில், பாலன் வாங்கி வந்த பேரீச்சம் பழங்களும் கடலில் வீசப்பட்டன. சிறிது நேரத்தில் புயல், அடங்க, கப்பல் எதுவித பிரச்சனையுமின்றி கரைக்கு வந்தது.

மிகவும் துயரத்தோடு கப்பலில் இருந்து இறங்கினான் பாலன்.

'நூற்றுக்கணக்கான ஆடுகளின் மூலம் போதிய வருமானம் கிடைத்தும், பேராசையால் அவ்ற்றை விற்று அதிக இலாபம் பெற முயன்றேன். இப்போது ஒன்றுமில்லாமல் உள்ளேன். போதுமென்ற மனம் இருந்திருந்தால் இப்படி வந்திருக்குமா?' என்று கவலையோடு கப்பலைப் பார்த்துக்கொண்டு நின்றான் பாலன்.

# அதிசயம் – ஆனால் உண்மை!



↙ இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஜெர்மனியில் நாணயத்திற்குப் பதிலாக சிகரெட் பணமாகப் பயன்படுத்தப்பட்டது.

→ ஆபிரிக்காவில் உள்ள தாரா ஜிஞ்சே என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெண்கள் மரக் கட்டை மற்றும் மண்ணால் செய்யப்பட்ட சிறு தட்டுப்போன்ற பாத்திரங்களை வாய்க்குள் வைத்து, தங்களது உதடுகளைப் பெரிதாக்கிக் கொள்கிறார்கள். இது தங்களுக்கு அழகு தருகிறது என்பது அவர்களது நம்பிக்கை.





↑ இங்காசோ, ஒபுசம் போன்ற அணில் இனத்தைச் சேர்ந்த பிராணிகள், மரக்கிளையில் வாலைச் சுற்றிக் கொண்டு, தலை கீழாகத் தொங்கியபடி இரை தேடுகின்றன.



← அமெரிக்காவிலும், ஜப்பானிலும் வளர்ப்பு நாய்கள் சாப்பிடுவதற்கென்றே சில ஹோட்டல்கள் இயங்குகின்றன.

# வாரம் ஒரு நாடு

## அமெரிக்கா

தலைநகர் - வாஷிங்டன்
பரப்பு - 93,72,614 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 26.33 கோடி
மொழி - ஆங்கிலம்
எழுத்தறிவு - 99%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - டொலர்
தனி நபர் வருமானம் - 23,120 டொலர்.



**அமைவிடம்:**

பசிபிக் பெருங்கடலை மேற்கிலும் அத்லாந்திக் பெருங்கடலைக் கிழக்கிலும் அணைத்தபடி- வடக்கே கனடாவையும் தெற்கே மெக்ஸிக்கோவையும் எல்லைகளாகக் கொண்ட பரந்த நாடு அமெரிக்கா.

**வரலாறு:**

50 மாநிலங்களின் கூட்டாட்சி கொண்ட குடியரசு- பிரிட்டிஷிடமிருந்து 1776ல் சுதந்திரமடைந்தது. 4 வருடங்களுக்கு ஒருமுறை தேர்வு செய்யப்படும் ஜனாதிபதியே நாட்டின் தலைவர். ஒருவர் 2 முறைக்கு மேல் ஜனாதிபதி தேர்தலில் நிற்க உரிமையில்லை.

பிரதிநிதிகள்சபை, செனட் சபை என்னும் இரு அவைகள் உள்ளன. 50 மாநிலங்களும் தனித்தனி ஆட்சியாளர்களால் ஆளப்படுகிறது. முதலாம் உலகப் போரை அடுத்து உலக சக்தியாக தன்னை வெளிப்படுத்திய அமெரிக்கா, இரண்டாம் உலகப் போரின்பின் தன்னை உலகின் மகா சக்தியாக நிலைப்படுத்திக் கொண்டுள்ளது.

**பொருளாதாரம்:**

பல்வேறு தொழிற்சாலைகள் உள்ளன. பலவகை தானியங்களை உற்பத்தி செய்யப்படுகின்றது. பல கனிமப்பொருட்களும் அகழ்ந்தெடுக்கப்படுகின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.12.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 274**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 272

**பரிசுக்குரியவர்:**
**கே. வினுக்குமார்,**
**காளி கோயில் வீதி, கிரான்.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். ருமேஸ்,<br>தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. | கா. வஸீலா அப்பாஸ்,<br>ஸம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை. |
| எம். சல்மா,<br>அல்ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | சி. வேணுஜா,<br>கனிஷ்ட வித்தியாலயம், கோட்டைமுனை, மட்டக்களப்பு. |
| எஸ். சந்திரமோகன்,<br>புனித பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியாலயம், திருகோணமலை. | ஃபாத்திமா சகேகா றிஸ்வி,<br>சென் ஜேம்ஸ் ம.வி., முகத்துவாரம், கொழும்பு-15. |
| அஸாம் கலீல்,<br>எகோல் தேசிய கல்லூரி, கண்டி. | ஆர். சுரேஸ் குமார்,<br>புனித சில்வெஸ்டர் கல்லூரி, கண்டி. |
| கே. ஸ்ரீகரன்,<br>அசோகா வித்தியாலயம், கண்டி. | முகமட் ஸஃப்ரி,<br>ஆல் மின்ஹாஜ் தேசிய பாடசாலை, ஹபுகஸ்தலாவை. |

# இதயத்துடிப்பு

மனிதர்களின் இதயத்துடிப்பு நிமிடத்திற்கு 72 தடவைகள் என்பது உங்களுக்குத் தெரியும். வேறு சில உயிரினங்களின் இதயத் துடிப்பு நிமிடத்திற்கு எத்தனை தடவைகள் என்பது வருமாறு:

1. சாம்பல் நிறத் திமிங்கிலம் நிமிடத்திற்கு 9 தடவைகள்.
2. ஹார்பர் சீல் நிமிடத்திற்கு 10 தடவைகள்.
3. யானை நிமிடத்திற்கு 25 தடவைகள்.
4. சிட்டுக்குருவி நிமிடத்திற்கு 500 தடவைகள்.
5. ஹம்மிங் பேர்ட் நிமிடத்திற்கு 1200 தடவைகள்.

***

# பொழுது போக்கு

உலகில் பொழுதுபோக்குகளில் முதலிடம் பெறுவது தோட்டக்கலை. (GARDENING) பறவைகளைக் கவனித்தல் (BIRD WATCHING) இரண்டாமிடத்தைப் பெறுகிறது.

தற்போது உலகில் பறவைகளைக் கவனிப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருப்பவர்கள் ஒரு கோடியே 30 இலட்சம் பேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

***

# மூஸ் (MOOSE)

மூஸ் என்பது மான் இனங்களில் ஒன்று. இதை எல்க் (ELK) என்று ஆசிய-ஐரோப்பிய மக்கள் அழைக்கிறார்கள். மிகப் பெரிய, கனமான உடலைக் கொண்ட மான் இந்த மூஸ்.



இந்த மூஸ் பல நிமிடங்கள் நீருக்குள் மூழ்கி இருக்கும் வல்லமை பெற்றது. நன்கு வளர்ந்த ஆண் மூஸ் 1400 இறாத்தல் நிறை கொண்டது.

அலாஸ்காவில் வாழும் மூஸ்களுக்கு மிகப்பெரிய கொம்புகள் உண்டு. சில மூஸ்களின் கொம்புகள் 70 அங்குல அகலம் இருக்கும்.

# இலக்கியத் தகவல்கள்



• முதல் தமிழ்ப் புராண காவியம்- சிலப்பதிகாரம்.

• சங்க காலத்தில் வாழ்ந்த மொத்தப் புலவர்கள்- 473 பேர். இவர்களில் பெண்கள் 30 பேர்.

• பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் தமிழ் இலக்கியப்படைப்பு- திருக்குறள். இது 10 இந்திய மொழிகளிலும், 5 ஆசிய மொழிகளிலும், 16 ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது.

• தமிழ் இலக்கியம் முதன் முறையாக உரை நடை வடிவம் பெற்றது- 17ம் நூற்றாண்டில்.

• அச்சில் ஏறிய முதல் தமிழ்ப்படைப்பு- ஆடெம் டீ ப்ரோயென்கா எழுதிய தமிழ்-போர்த்துக்கீஸ் அகராதி.

• தமிழில் முதலில் எழுதப்பட்ட நாவல்- 'பிரதாப முதலியார் சரித்திரம்.' இதை மயூரம் வேதநாயகம்பிள்ளை என்பவர் 1876ல் எழுதினார்.

• ஞானபீட விருதுபெற்ற முதல் தமிழ் எழுத்தாளர்- பி.வி. அகிலாண்டம் என்ற அகிலன்.

# பெயர் வந்த காரணம்



யுத்தங்களின்போது பயன்படுத்தப்படும் டாங்கிகள் (TANKS) பிரிட்டிஷ்காரர்களால் முதலில் உருவாக்கப்பட்டன. இது ஒரு போர்த்தளவாடம் என்று எதிரிகள் தெரிந்து கொள்ளக்கூடாது என்று அவர்கள் நினைத்தார்கள்.

யாராவது இது என்ன என்று கேட்டால் பாலைவனங்களில் பணியில் ஈடுபடும் பிரிட்டிஷ் படைவீரர்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்காகத் தயாரிக்கப்பட்ட வண்டி என்று கூற எல்லாருக்கும் கட்டளையிடப்பட்டது.

அதன்படி இது டாங்க் (TANK) (தண்ணீர்த் தாங்கி) என்று அழைக்கப்பட, நாளடைவில் இந்தப் பெயரே நிலைத்து விட்டது.

# எரிகற்கள்

**★ எரிகற்கள் என்றால் என்ன?**


ஒரு வால் நட்சத்திரம் சூரியனைச் சுற்றி விண்ணில் வலம் வரும்போது, நீண்ட நெடிய வால் ஒன்றினை விட்டுச் செல்கிறது. இதில் சிறு சிறு துகள்கள் காணப்படும். பூமியானது தனது சுற்றுப் பாதையில், இவ் வால் பகுதியினூடாகச் செல்லும்பொழுது, இத்துகள்கள், பூமியின் வளி மண்டலத்தினூடாக நுழைந்து மிகுந்த உராய்வின் காரணமாக ஒளியுடன் எரிந்து கீழே விழுகின்றன. இதனையே எரிகற்கள் என்று அழைப்பர்.

**★ இது எப்போது நிகழும்?**

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் தோன்றும். இதை லியோனிட் எரிகற் பொழிவு என்று வானியலாளர்கள் கூறுவார்கள்.

**★ இத்தகைய எரிகற்கள் விழுவது எப்படியிருக்கும்?**

வானவெளியில் நட்சத்திரம் ஒன்று வெடித்துச் சிதறுவது போன்று காணப்படும். இந்த எரிகற்களின் பொழிவின் வேகம் மணித்தியாலத்திற்கு 73 கிலோமீட்டர் என்ற கணக்கில் இருக்கும்.



**★ எரிகற்களின் பொழிவினால் பாதிப்பு ஏற்படுமா?**

எரிகற்களின் பொழிவினால் பெரிய பாதிப்புக்கள் எதுவுமில்லை. அனேகமாக அனைத்து எரிகற்களும் பூமிக்கு மேலே சுமார் 90 கிலோமீட்டர் தூரத்திலேயே முழுவதும் எரிந்து சாம்பலாகிவிடும்.

**இதுவரை**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான்.

**இனி......**

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

# டிசம்பர் பௌர்ணமி

**06**

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

**சா**ந்தா திக்கென்று அதிர்ந்துபோய், நித்தியனைப் பார்த்தாள். அவளுடைய மை தீட்டிய பெரிய கண்களில் மெல்லிய பயப்படலம்.

"எ.... எ... என்ன சொ.... சொ.... சொன்னீங்க நித்தியன்?"

"நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?"

"என்ன விளையாடறீங்களா?"

"கல்யாணத்துக்கப்புறம்தான் விளையாட்டு. இப்ப நான் சொல்லிக்கிட்டிருக்கிறது நிஜம். வர்ற இருபத்தி மூணாம் தேதி பௌர்ணமி அன்னிக்கு நாம கல்யாணம் பண்ணிக்கப் போறோம்!"

"உங்கப்பாவைக் கொஞ்சம் நினைச்சுப் பார்த்துட்டு சொல்லுங்க."

"நினைச்சுப் பார்த்துட்டேன் சாந்தா. நம்ம காதல் விஷயம் அவருக்குத் தெரியறதுக்கு முந்தியே நம்ம கல்யாணம் நடக்கணும். மாலையும் கழுத்துமா போய் அவர் கால்ல விழுந்துட்டா எல்லாமே சரியாப் போயிடும்."

"விசாலி வீட்டு சைடையும் கொஞ்சம் நினைச்சுப் பார்த்தீங்களா?"

"விசாலிக்கும் அவளுடைய பேரண்ட்ஸுக்கும் பெரிய அதிர்ச்சியாத்தான் இருக்கும். அதுக்கு நாம் என்ன பண்ண முடியும்?"

"எனக்கென்னவோ நெஞ்சுக்குள்ளே 'திக் திக்' குன்னு இருக்கு."

"காது வெச்சு கேட்டுப் பார்க்கட்டுமா?"

"இந்தக் கல்யாணத்தை நீங்க சீரியஸாவே எடுத்துக்க மாட்டீங்களா?"

"சீரியஸா எடுத்துக்கிட்டா உன்னை மாதிரி நானும் பயந்துட்டே இருக்க வேண்டியதுதான். காதல் செய்யிறவங்களுக்கு வேண்டிய முக்கியமான ஒண்ணு என்ன தெரியுமா? துணிச்சல்! அந்த துணிச்சல் இல்லாதவங்க காதலிக்கவே கூடாது..."

"எதுக்கும் நாம கொஞ்சம் யோசனை பண்ணி...."

"யோசனை பண்ணி முடிக்கிறதுக்குள்ளே எங்கப்பா எனக்கும் விசாலிக்கும் கல்யாணத்தையே முடிச்சு ஹனிமூனுக்கும் அனுப்பி வெச்சிடுவார். இப்படி ஒரு அதிரடி முடிவு எடுத்து நாம கல்யாணம் பண்ணிக்கிட்டாத்தான் உண்டு. இல்லேன்னா இல்லை."

சாந்தா மெல்ல தலையாட்டினாள்.

"சரிங்க...."

"என்ன சரி?"

"நீங்க சொல்றதுதான் சரி!"

"அதைக் கொஞ்சம் சந்தோஷமா சொன்னா என்ன? இன்னிக்கு தேதி பதினேழு. இன்னும் சரியா ஆறுநாள்தான் இருக்கு. இருபத்திமூணாம் தேதி காலை ஆறு மணியிலிருந்து ஏழு மணிக்குள்ளே கல்யாணத்தை முடிச்சுக்கறோம். ஏதாவது ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்குப் போய் டிபன் சாப்பிடறோம். பத்து மணிக்கு மேல ரிஜிஸ்டர் ஆபீஸுக்குப் போய் முறைப்படி கல்யாணத்தைப் பதிவு பண்ணிக்கிட்டு எங்க வீட்டுக்குப் போறோம். எங்கப்பா கால்ல விழறோம். அந்த நேரத்துல அவர் என்ன சொல்லப் போறார்னு இப்பவே என்னால கெஸ்பண்ண முடியலை. 'உள்ளே போங்க'ன்னும் சொல்லலாம். 'வெளியே போங்க'ன்னும் கையைக் காட்டலாம். எதையுமே ஃபேஸ் பண்ண நாம தயாராயிருக்கணும்."

நித்தியன் சொல்லச் சொல்ல சாந்தாவின் அடிவயிற்றில் இனம் புரியாத ஒரு அவஸ்தை பிசைந்தது.

'இந்தக் கல்யாணம் சந்தோஷத்தில் போய் முடிகிற சாத்தியமே இல்லை போலிருக்கிறது.' என்று நினைத்தாள்.

"என்ன சாந்தா! மறுபடியும் மௌனமாயிட்டே?"

"ஒண்ணுமில்லீங்க!"

"எனக்குத் தெரியும். உனக்குப் பயம். இருபத்தி மூணாம் தேதி வரைக்கும்தான் பயம். கழுத்தில தாலி ஏறிட்டா இந்தப் பயம் போயிடும். அதுக்கப்புறம் நீ எனக்கு தைரியம் சொல்லுவே......!"

"சரி.... இப்ப நாம கிளம்பலாமா? கோயிலுக்கு வர்ற கூட்டம் ஜாஸ்தியாயிடுச்சு."

எழுந்தார்கள்.



கபாலீஸ்வரர் சன்னதியில் டூரிஸ்ட் கூட்டம் அலை மோதியது. விநாயகர் சன்னதியில் தேங்காய்கள் உடைபட்டுக் கொண்டிருந்தன. தூரத்தில் இரண்டு மாமிகள் வம்பளந்து கொண்டே நவகிரஹ பிரகாரத்தைச் சுற்றுவது தெரிந்தது.

நித்தியனும் சாந்தாவும் கோயிலுக்கு வெளியே வந்தார்கள். சாந்தா ஆட்டோவைத் தேட நித்தியன் அவளுடைய தோளைத் தொட்டான்.

"வா! கார்லயே போயிடலாம்."

"அய்யோ! வேண்டாங்க!"

"என்ன வேண்டாம்?"

"கல்யாணம் முடிகிற வரைக்கும் கொஞ்சம் விலகியே இருப்போம். எல்லாம் ஒரு காரணத்துக்காகத்தான்!"

"சரி.... நாளைக்குக் காலையில பத்து மணிக்கு உன்னை ஃப்ரீ பண்ணிக்கிட்டு பனகல் பார்க்குக்கு வந்துடு."

"பனகல் பார்க்குக்கா?"

"ம்..."

"எதுக்கு?"

"கல்யாணப் பொண்ணுக்கு நல்ல சில்க் பட்டுப்புடவை எடுக்கத்தான்."

சாந்தா திகைக்க, நித்தியன் சிரித்தான்.

"பட்டுப்புடவை உனக்குத்தான். புடவை மட்டுமல்ல. அப்படியே உம்மிடியார் கடைக்குப் போய் கொஞ்சம் ஜுவல்ஸும் வாங்கிக்கலாம்."

"அய்யய்யோ..... அதெல்லாம் வேண்டாங்க."

"என்ன நீ? எதுக்கெடுத்தாலும் அய்ய்யோன்னு சொல்லிக்கிட்டு....? கல்யாணம் நடக்கிறவரை எல்லாம் என்னோட இஷ்டம்தான். அதுக்கப்புறம் தான் உன்னோட இஷ்டம். நாளைக்குக் காலையில சரியா பத்து மணிக்கெல்லாம் நீ பனகல் பார்க் பஸ் ஸ்டாப்புல நின்னுக்கிட்டிருக்கணும்."

"ம்........"

"என்ன........ 'ம்'.......?

"சரிங்க..." சாந்தா தலையாட்டிக் கொண்டே காலியாய்ப் போன ஆட்டோ ஒன்றை நிறுத்தினாள்.

**போ**ர்டிக்கோ வராந்தாவிலேயே கூடை நாற்காலியில சாய்ந்திருந்தார் ருத்ரமூர்த்தி. நித்தியன் ஒன்றும் பேசாமல் அவரைக் கடந்து போக அவர் தொண்டையைச் செருமினார்.

"உனக்காகத்தான் காத்திட்டிருக்கேன்!"

நித்தியன் நின்றான்.

"சொல்லுங்கப்பா."

"நீ மொதல்ல உட்கார்!" எதிரில் இருந்த பாலிவிடல் நாற்காலியைக் காட்டினார்.

நித்தியன் வேண்டா வெறுப்பாய் நாற்காலிக்கு உடம்பைக் கொடுத்தான். ருத்ரமூர்த்தி சிறிது நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு மெல்லிய குரலில் சொன்னார்.

"உனக்கும் விசாலிக்கும் நடக்கப் போற கல்யாணத்துக்கான தேதியை ஃபிக்ஸ் பண்ணிட்டேன்."

"எ... எப்போ?"

"ஜனவரி இருபதாம் தேதி. தையில அதான் முதல் முகூர்த்தம்."

"....."

"என்ன பேச்சையே காணோம்?"

"சரி..."

"என்ன சரி?"

"அதான் தேதியை ஃபிக்ஸ் பண்ணிட்டிங்களே... சந்தோஷம்?"

"நீ சந்தோஷம்னு வாயளவிலே சொன்னாலும் உன்னோட முகத்துல கொஞ்சம்கூட சந்தோஷமே இல்லையே?"

"சந்தோஷம்தாப்பா......"

"அப்படித் தெரியலையே? கல்யாணப் பேச்சை எடுத்தாலே உன்னோட முகம் மாறிப் போயிடுது. ஏன் விசாலியை உனக்குப் பிடிக்கலையா?"

"பிடிச்சிருக்கு."

"பின்னே... என்ன?"

"கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும்னு சொன்னேன். நீங்க கேட்கலை. எனக்கு அந்த வருத்தம் தான்!"

"எதுக்காக ரெண்டு வருஷம் போகட்டும்னு சொல்றே?"

"நம்ம பிஸினஸை கொஞ்சம் நல்லபடியா டெவலப் பண்ணிக்கத்தான்."

ருத்ரமூர்த்தி கசப்பாய் ஒரு புன்னகை பூத்தார்.

"நித்தியன்! நீ விஷயம் தெரியாம பேசிக்கிட்டிருக்கே..."

"என்னப்பா சொல்றீங்க?"

"கல்யாணத்தை முடிச்சுக்கிட்டு இந்த விஷயத்தை உன்கிட்டே சொல்லலாம்னு இருந்தேன். இப்பவே நீ சொல்லும்படியா வெச்சுட்டே."

"அப்பா..."

"வா... எம் பின்னாடி."

எழுந்து நடக்க ஆரம்பித்துவிட்ட ருத்ரமூர்த்தியை குழப்பமான முகத்தோடு பின் தொடர்ந்தான் நித்தியன். மாடிப்படிகளை ஒட்டியிருந்த அவருடைய பர்சனல் அறை வந்தது. பீரோவைத் திறந்து நான்கைந்து ஃபைல்களை எடுத்துப் போட்டார்.

"நித்தியன்! இது எல்லாமே நம்ம கம்பனியோட கடந்த ரெண்டு வருஷ பாலன்ஸ் ஷீட்ஸ். நீ பம்பாய் ஜெயிலில் இருந்த ஒரு வருஷத்துல கம்பெனிக்கு பெரிய அடி விழுந்தது. எக்ஸ்போர்ட் ஆர்டர்ஸ் எல்லாமே கவர்மெண்ட் கொண்டு வந்த ஒரு திடீர் சட்டத்தால கான்ஸலாகி ப்ரொடக்ஷன் சைடில் ஏகப்பட்ட பிரச்சனைகள். கம்பெனியோட நிலைமை மேலே பார்க்கிறதுக்கு ஆரோக்கியமா இருக்கிற மாதிரி தெரிந்தாலும் உள்ளுக்குள்ளே புற்று நோய் மாதிரி ஃபைனான்சியல் ப்ராப்ளம். பேங்க்ல நாம் ஓடியா வாங்கியிருந்த ரெண்டு கோடி ரூபாயை ரெண்டு மாசத்துக்குள் கட்டச் சொல்லி பாங்க் மானேஜர் தினமும் ஃபோன் பண்ணிக்கிட்டிருக்கார். நமக்கு வெளியே இருந்துவர வேண்டிய தொகை கொஞ்சம் தான். ஆனா கடன் அதைவிட நாலு மடங்கு அதிகம்."

நித்தியன் முகத்தில் இப்போது கலவரம் தெரிந்தது.

"அப்பா! நீங்க என்ன சொல்றீங்க?"

"நான் சொல்லல்ல. இந்த ஃபைல்களைப் புரட்டிப் பாரு. ஆடிட்டர்ஸ் ரிப்போர்ட்டைப் படிச்சுப் பாரு. உனக்கே எல்லாம் புரியும்......"

நித்தியன் அங்கிருந்த ஒரு நாற்காலியில் தளர்ந்து போய் உட்கார்ந்து ஃபைல்களை புரட்டிப் பார்க்க ஆரம்பித்தான்.

நெற்றியில் வியர்வை. அரும்பு கட்டி மினுமினுத்தது. பதினைந்து நிமிட ஃபைல் புரட்டலுக்குப் பின் கலக்கமாய் நிமிர்ந்தான் நித்தியன்.

"அப்பா... நம்ம கம்பெனிக்கா இப்படியொரு சரிவு?"

"நீ ஜெயில்ல இருந்த அந்த வருஷம் என்னால பிஸினஸ்லே கான்சன்ட்ரேட் பண்ண முடியலை. எடுத்த முடிவுகள் எல்லாமே தப்பா போயிருச்சு."

"நம்ம கம்பெனி இப்படியொரு நிலைமையில் இருக்கிற விஷயமே விசாலியோட அப்பாவுக்குத் தெரியுமா?"

"தெரியும்! அவர் கொடுத்த தைரியத்துலதான் நான் இன்னமும் உயிரோடு இருக்கேன். 'நித்தியன்-விசாலி' கல்யாணம் முடியட்டும். உங்க கம்பெனியை பழைய நிலைமைக்குக் கொண்டு வரலாம்னு என் கிட்ட டவுரி கொடுத்திருக்கார். தேவையான பண உதவியையும் செய்யறேன்னு சொல்லியிருக்கார்."

நித்தியன் பிரமை பிடித்துப் போய் நின்றிருக்க ருத்ரமூர்த்தி அவனுடைய கையைப் பற்றினார்.

"இப்ப சொல்லு நித்தியா...! கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும்னு நீ சொன்னப்ப நான் மறுத்தது சரி தானே?"

"அ... அப்பா..."

"உனக்கு இன்னொரு விஷயத்தையும் இப்பவே சொல்லிடறேன். ஒருவேளை நீ விசாலியை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதமா சொல்லியிருந்தா நான் என்னோட வாழ்க்கையை முடிச்சுக்கிறதுக்காக அதைக்கூட தயாரா லோட் பண்ணி வெச்சிருந்தேன்."

பீரோவுக்குள் கையை நுழைத்து அந்த பிஸ்டலை எடுத்துக் காட்டினார் ருத்ரமூர்த்தி.

(பௌர்ணமி தொடரும்)

**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

# சதாம் உசேன்

**18**

**பி**ன்னர் நயீஃபை அழைத்துக் கொண்டு பக்கத்து அறைக்குச் சென்றார் பக்கர். அந்த அறையில் அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை. இருவரும் அருகருகே உட்கார்ந்தார்கள்.

அரசாங்கம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்-என்னென்ன செய்ய வேண்டும்- என்பது பற்றி சீரியசாக சொல்லிக் கொண்டிருந்தார் நயீஃப்!

இடையில் பக்கர், "எக்ஸ்கியூஸ் மீ.. இதோ... போனதும் வந்துர்ரேன்..." என்ற நயீஃபிடம் சொல்லிவிட்டு அறையிலிருந்து வெளியேறிச் சென்றார்.

அத்தனை பெரிய அறையில் நயீஃப் மட்டும் ஒத்தையில் உட்கார்ந்திருந்தார். வெளியே போன பக்கர் திரும்பி வருவார் என்று கதவையே பார்த்தபடி அமர்ந்திருந்தார்...

கதவு திறந்தது...

பக்கர் வரவில்லை...! அவருக்குப் பதிலாக சதாமும் இன்னொரு ஆளும் கைத்துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்தனர்.

மிரண்டு போனார் நயீஃப். சதாம் நெருங்கி வர... வர... அச்சத்தில் சத்தம் போடக்கூட நாக்கு எழாமல் முகம் விகாரமாகக் கோணியது அவருக்கு.

"ஹலோ...மிஸ்டர் பி.எம்! விருந்து



**ராஜையா**

எப்படியிருந்துச்சு? கடைசி விருந்து...!" சதாம் நக்கலாகக்கேட்டார்.

நயீஃபுக்கு இரத்தம் உறைந்தது.

"விருந்து எதுக்கு தெரியுமா, பி.எம்.? நீங்க ஆட்சியைக் கவிழ்க்கப் போறீங்களே... அதுக்குத்தான்...! ஆனா ஒரு விஷயம்! உங்க முயற்சி பலிக்கணும்னா அதுக்கு நீங்க உயிரோடு இருக்கணும்! அதோட, சதாம் செத்துருக்கணும்! அவன் உயிரோட இருக்கிற வரை உங்களை ஜெயிக்க விடமாட் டான்..." கிண்டலாகச் சிரித்தார்.

நயீஃப் மரணத்தின் வாசலில் நிற்பதாக உணர்ந்தார். உயிர் பிரியப்போகும் பயம். அவருக்கு அழுகை வந்தது. "சதாம்.. என்னை எதுவும் பண்ணிடாதே! விட்ரு!" என்று கதற ஆரம்பித்துவிட்டார் நயீஃப்.

"பக்கரும் இப்படித்தான் சொன்னார். 'நயீஃபை எதுவும் பண்ணிடாதே சதாம். விட்டு'டுன்னு! அதனாலதான் உன்னை உயிரோடு விடுறேன். ஆனா, இனி நீ ஈராக்கில் இருக்கக்கூடாது. கிளம்பு!" என்றார் சதாம். துப்பாக்கியை பாக்கெட்டில் வைத்துக் கொண்டே!

'எப்படியோ, உயிர் பிழைத்தோம்' என்று பெருமூச்சு விட்ட நயீஃப் சதாமுடன் நடந்தார். இருவரும் காரில் ஏறிக்கொள்ள சதாமின் சகா காரைக் கிளப்பினார்.

விமான நிலையத்துக்குள் நுழைந்து கார் நின்றது. சதாம் இறங்கியதைப் பார்த்து நயீஃபும் இறங்கினார்.

மொராக்கா செல்லும் விமானம் கிளம்பத் தயாராக இருந்தது. அதில் நயீஃபை ஏற்றி அனுப்பினார் சதாம்.

நயீஃப் நாடு கடத்தப்பட்ட செய்தியை வெளிநாட்டில் கேள்விப்பட்ட பாதுகாப்பு மந்திரி தாவூத், அதன் பிறகு ஈராக் பக்கம் திரும்பி வரவே இல்லை...!

இதற்குப் பிறகு 1969ல் சதாம் துணை ஜனாதிபதி ஆனார். ஆட்சியிலும், கட்சியிலும் 'நம்பர் 2' ஆக செயல்பட்ட சதாம்அடுத்தடுத்து எடுத்த துணிச்சலான நடவடிக்கைகளைப் பார்த்து-

அமெரிக்கா அதிர்ந்தது...!

**வா**ஷிங்டன் அமெரிக்க ஜனாதிபதி கொலுவிருக்கும் வெள்ளை மாளிகை.

ஜனாதிபதியின் அந்தரங்க ஆலோசகர்கள் அவசரமாய்க் கூடி முக்கிய விவாதம் நடத்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் விவாதத்தில் ஈராக் இருந்தது. அவர்கள் பேச்சில் சதாம் உசேன் அடிபட்டார்...

"சதாம் உசேன் முட்டாள். அறிவில்லாமல் நம்மை எதிர்க்கிறார். சீண்டிவிடுற மாதிரி நம் மீதே கை வைக்கிறார். அவருக்கு பாடம் புகட்டியே ஆகணும்!" என்றார் ஒருவர் ஆவேசமாக.

இன்னொரு ஆலோசகர் இடைமறித்தார்..

"சதாமுக்கு பாடம் புகட்டணும்ங்கறதை ஒத்துக்கிறேன். பாடம் புகட்டத்தான் போறோம். ஆனா, அவர் முட்டாள்னு சொன்னீங்களே... அதுதான் இல்ல. விவரமான ஆள். நம்மை தெளிவா புரிஞ்சுக்கிட்டுத்தான் நம்மோடு மோதுகிறார். அவர் செய்யிற காரியங்களை வரிசைப்படுத்திப் பார்த்தாலே இது புரியும்...!" என்றார்.

ஈராக்கில் மறுமலர்ச்சிக்கட்சி ஆட்சிக்கு வந்ததிலிருந்து அதை தன் கைப்பாவை ஆக்கிக்கொள்ள அமெரிக்கா முயற்சி செய்து வந்தது. சின்னப் பையனை வசப்படுத்த சாக்லெட் எடுத்து நீட்டுவது போல், ஜனாதிபதி பக்கரையும், துணை ஜனாதிபதி சதாமையும் தன் கைக்குள்போட அது விதவிதமாய் ஆசை வார்த்தைக் காட்டியது. ஆனால் அவர்கள் மசியவில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையில் உறுதியாக இருந்தார்கள். அவர்கள் சோவியத் யூனியனுடன் நட்பு வைத்துக்கொள்ளவே ஆர்வம் காட்டினார்கள்.

(தொடர்ந்து வரும்)

# உதட்டில் ஒரு மச்சம்

## 07

**இதுவரை**

அரவிந்த் ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த், அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன் பைலட்டாக ஓடக்கரை கிராமத்திற்கு செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட அமைச்சர் திட்டமிட அதை எதிர்க்கிறார்கள் கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு காயமடைகிறான்.
அவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறான்.
கிராம இளைஞர்கள் கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது என்று ஆயுதம் ஏந்த முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில் அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.

**இனி....**

நர்மதாதான் முதலில் சைக்கிளிலிருந்து இறங்கினாள். இறங்கியவுடன் சட்டென்று ஒதுங்கி நின்றாள். ஷிவா இறங்கினான்.

எதிரே நின்ற மூன்று பேரும் ஆயுதங்களைத் தழைத்தனர்.

"என்னடா கலாட்டா?" என்றான் ஷிவா.

மூன்று பேரையும் அவனுக்குத் தெரியும், ஓடக்கரை இளைஞர்கள்தான்.

பரமேஷ்வரன், கைலாஷ், அர்த்தநாரி. ஸ்கூல் முடித்து டிகிரிப் படிப்பை வெற்றி கொள்ள டவுன் காலேஜிற்கு தினமும் சைக்கிள் மிதிப்பவர்கள்.

மீசை, வெட்டாத கிராப், கழுத்தில் நாலணா அலுமீனியச் சங்கிலி. உடற்பயிற்சியின் முடிவுகள் தெரியும் தசைகள், தைரிய மார்புகள் மூவருக்கும் பொது.

"இன்று காலையில் நம் ஸ்கூலை இடித்து விட்டார்கள்"- வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் கைலாஷ்.

"அதற்காக?" ஷிவா.

"புல்டோஸர் ஓட்டும் பன்றியை ஒரே சீவு."

"இந்தப் பட்டாக்கத்தியை எங்கே வாங்கினாய், கைலாஷ்?"

"கிடைத்தது. தாத்தாவின் இரும்புப் பெட்டியில் இருந்தது. எண்ணெய் போட்டு சுத்தம் செய்தேன். பேச்சை மாற்றாதே."

"இந்தியாவிலேயே புல்டோஸர் ஓட்டத் தெரிந்தவன் ஒருத்தன் தானா கைலாஷ்? இவனைச் சீவி விட்டால், எல்லாம் நின்று விடுமானால், நானே சீவியிருக்க மாட்டேனா? இவன் வெறும் கூலிக்காரன்."

"நாம் நான்கு பேரும் போய் வெட்டினால், அந்தக் கூட்டம் கலைந்து விடாதா ஷிவா?" பரமேஷ்வரன்.

"துப்பாக்கியோடு நிற்கும் போலிஸ்காரர்கள் அதை முதுகு சொறிவதற்காக எடுத்து வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறாயா, பரமு?"

"பேசாமல் கைகட்டிக் கொண்டிருக்கலாம் என்கிறாயா?"

"கைவீசிப் போனால் நீயும் என் அண்ணனைப் போல ஆஸ்பத்திரியில் கிடக்கலாம்," என்றான் ஷிவா. அவன் குரல் நடுங்கியது.

மூவரும் சட்டென்று நீர் தெளித்த பால்போல் அடங்கிப் போனார்கள்.

நர்மதா வேடிக்கை பார்த்து மனதிற்குள் ஆச்சரியப்பட்டாள். படபடக்கும் ஷிவா, மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும்போது எப்படிச் சாதுவாகி விட்டான்? தன் கொதிக்கும் உணர்ச்சிகளைப் பொட்டலம் கட்டி வைத்து விட்டு, புத்தன் போலப் பேசுகிறான்.

"தொபேர்!"

திரும்பிப் பார்த்தார்கள்.

பஞ்சாயத்துக் கட்டடம் பொடிப் பொடியாகிக் கொண்டிருந்தது. புல்டோஸர் ஆணவமாக முன்னேறியது.

எத்தனை சினிமாக்களில் வில்லனின் புல்டோஸருக்கு முன்பு மார்பு காட்டி, மறித்து முழம் முழமாக வீரவசனம் பேசியிருக்கிறார்கள், கதாநாயகர்கள். 'இது வீடு இல்லை. வெறும் செங்கல் கட்டடமில்லை. மூடா, இது ஏழைகளின் இதயம். இதை நீ காலடியில் போட்டு நசுக்குவதற்கு நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன். முதலில் புல்டோஸர் என்மீது ஏறட்டும். என் இரத்தத்தை இறைக்கட்டும். அப்புறம் உடைக்கலாம் எங்கள் வீடுகளை!'

அந்த தைரியம் எனக்கு ஏன் வரவில்லை?

ஓடக்கரையில் ஏழைகளின் இதயங்களில் இன்னும் ஒன்றிரண்டுதான் பாக்கியிருந்தன. இடிக்கப்படுவதற்கு. உதிர்க்கப்பட்ட எலும்புகளை லோடு ஏற்றிச் செல்ல லாரிகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

"தேவேந்திரன் சொன்னதை மறந்து விட்டாயா, கைலாஷ்?"

"மறக்கவில்லை. ஆனால், பேசிப் பேசிக் கலைகிறோமே தவிர, வேறென்ன செய்ய முடிந்தது நம்மால்? இன்னும் இரண்டு நாட்களில் ஊர் மொத்தமாக தரைமட்டமாகி விடும். சிமெண்ட் மூட்டைகளும் கான்க்ரீட் ஸ்லாபுகளும் வந்து கோவில் பிரகாரத்தில் அடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். நம் கண்ணெதிரே நம் ஊர் கைநழுவிப் போய்க் கொண்டிருக்கிறது."

"தேவேந்திரன் டில்லி போயிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"டில்லிக்கா?"

"ஆமாம். உணர்ச்சிவசப்பட்டு எதுவும் செய்ய முடியாது. துல்லியமான திட்டம் தீட்ட வேண்டும் என்று தேவ் சொன்னது மறந்துவிட்டதா? தேவை நம்புவோம். காத்திருப்போம்." என்றான் ஷிவா. "அதற்குள் அவசரப்பட்டு எதையாவது செய்து காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள்."

பயன்படுத்தாத ஆயுதங்களை ஏக்கமாகப் பார்த்து விட்டு, அந்த மூவரும் கலைந்தனர்.

நர்மதா ஷிவாவை நெருங்கிக் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"நீங்கள் தெளிவாய் இருப்பது எனக்கு சந்தோஷமாய் இருக்கிறது ஷிவா."

சைக்கிள் அவர்களைச் சுமந்து நகரத் துவங்கியது.

★ ★ ★

முற்றத்தின் அருகில் அம்மா தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். ஒரு ரிப்பன் போல வெயில் அவர்கள் மீது வலிக்காமல் புரண்டிருந்தது. கூடத்தின் சிமெண்ட் தரையில் மல்லிகைகள் மொட்டும் மலருமாய் சிதறி இருக்க, அவள் கை நீண்டு தன்னிச்சையாக இரண்டிரண்டாகப் பொறுக்கி, நாரில் வைத்து முடிச்சிட்டுக் கொண்டிருந்தது.

"அம்மா..." ஷிவாவின் குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தாள். அவன் பக்கத்தில் உரசிய படியே நர்மதாவைப் பார்த்தாள். புன்னகை ஒன்றை அன்புடன் விரித்தாள்.

"வா... நர்மதா!"

நர்மதா, ஷிவாவை முந்திக் கொண்டு நடந்து வந்து, அம்மாவின் அருகில் மண்டியிட்டு அமர்ந்து, "நான் தொடுக்கிறேன்மா," என்றாள்.

அம்மா தொடுத்தவரை பூச்சரத்தை முற்றத்து முனையில் தரை விளிம்பில் போய் அறுத்தாள். நர்மதாவின் தலையைத் திருப்பி, பின் கூந்தலில் வைத்தாள்.

"நீ இங்கே இருப்பாய் என்று நான் நினைக்கவேயில்லை அம்மா," என்றான் ஷிவா, அவளருகில் வந்து அமர்ந்து.

"வீடு எவ்வளவு பெரிசு என்று இப்போது தான் புரிகிறது ஷிவா. சாமானெல்லாம் அடைத்துக் கொண்டிருந்தபோது தெரியவில்லை!" அம்மாவின் கண்கள் ஈரமாயிருந்தன.

"இடித்துத் தள்ளுகிற பையனைக் கேட்டேன். நாளைக்குத்தான் இந்த வீட்டைச் சாய்க்கப் போகிறேன் என்றான். கடைசி கடைசியாய் இங்கே வந்து உட்கார வேண்டும் போல இருந்தது."

குழந்தையைத் தடவுவது போல தடவிக் கொடுத்தாள்.

"இன்றைக்கு ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும். மறந்து விட்டாயம்மா?"

"மறக்கிற விஷயமா ஷிவா?" அம்மாவின் கண்களில் காயம்பட்ட வலி. "நாலு மணிக்குத்தானே டவுன் பஸ்? நீயும் வெளியே போய் விட்டால், உயிரில்லாத அந்த ஆஸ்பெஸ்டாஸ் தகரத்திற்குக் கீழே ·எத்தனை நேரம், உட்கார்ந்திருக்க முடியும்? சொல்... சீனுவுக்குப் பிடிக்கும் என்று ரவாலாடு கூடப் பண்ணி வைத்திருக்கிறேன்."

"ரவாலாடு!ஏம்மா, அண்ணன் எந்த நிலையில் ஆஸ்பத்திரியில் இருக்கிறான் என்று உனக்குத் தெரியாதா? இன்னும் கண் திறந்து பார்க்கவில்லை. ஒரு வார்த்தை யாருடனும் பேசவில்லை. எங்கே இருக்கிறான், அவனுக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது கூட அவனுக்குத் தெரியாதம்மா!"

அம்மாவின் கண்களில் சேகரமாயிருந்த நீர் இப்போது இரண்டு இரண்டு துளிகளாகி உருப்பெற்று அவள் கன்னத்தில் உருண்டன.

"கண் திறந்து விட்டால், டாக்டரிடம் கேட்டுக் கொண்டு ஒரு சின்னத் துண்டு அவன் வாயில் நானே ஊட்ட வேண்டும், ஷிவா."



எவ்வளவு குழந்தைத் தனமான ஆசை அம்மாவுக்கு!

ஏற்கனவே சீனு அவளுக்குச் செல்லப் பிள்ளை. இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் அவ ளுடைய ரவாலாடு அனுமதிக்கப் படாது என்பதை அவளுக்கு எப்படி எடுத்துச் சொல்வது?

ஷிவாவிற்கும் கண்களில் சேர்ந்து விட்ட நீரை மறைக்கத் தெரியவில்லை. நர்மதா அம்மாவின் கையைப் பிடித்து தன் இரு கைகளுக்கும் நடுவில் வைத்து அழுத்திக் கொடுத்தாள்.

"போகலாமாம்மா?"

அம்மா தூணைப் பற்றித் தடுமாறி எழுந்தாள். கண்ணில் திரை விழுந்து விட்டது. வெயிலிலேயே தடுமாற வேண்டியிருக்கிறது. "நீயும் வருகிறாயா, நர்மதா?"

"ஆமாம்மா... சீனு அண்ணாவைப் பார்த்து ஒரு வாரம் ஆகிறது."

"இன்றைக்கு கண் திறப்பானா, நா;மதா?"

"திறப்பாரம்மா" என்றாள் நம்பிக்கையோடு.

(○–வரும்–○)

**சுபா**

---

# கவியரசுவின் சுயசரிதை

## 26

**கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

தேர்தல் நாள் நெருங்கிற்று கட்சி பல தொகுதிகளிலும் பலபேரை நிற்க வைத்தது. சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் அவன் நிற்க வேண்டுமென்று சென்னை நண்பர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால் கலப்படமான சென்னைக் குடி வாழ்க்கையில் தனக்கு வெற்றி கிடைக்குமென்று அவன் நம்பவில்லை!

அந்தத் தொகுதியில், விருப்பம் இல்லாமலேயே ஒருவர் நிறுத்தப்பட்டுச் செலவில்லாமலேயே ஜெயித்தும் விட்டார். உள்ளங்கை கனிபோல் இருந்த அந்தத் தொகுதியை உதறிவிட்டு, தான் பிறந்த ஊரும் அடங்கி இருந்த தன் தொகுதியை அவன் தேர்ந்தெடுத்துக்கொண்டான். அந்தத் தொகுதியில் உள்ள நண்பர்கள் அவனுக்கு அபாரமான நம்பிக்கையை ஊட்டி இருந்தார்கள். அங்கே அவன் ஜாதி ஒட்டுகள் மட்டும் பத்தாயிரத்துக்குமேல் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த ஜாதியின் மொத்த ஜனத்தொகையே பத்தாயிரத்துக்குமேல் இருக்காதே என்று அவன் சிந்திக்கவில்லை!

அவர்களும் அவனைச் சிந்திக்க விடவில்லை.

அவர்கள் சொன்ன கணக்கையெல்லாம் வைத்து அவன் தனது திருக்கோஷ்டியூர் தொகுதியில் நிற்பதென முடிவு கட்டினான். தேர்தல் வருவதற்கு முன்னாலேயே தான் நிச்சயமாக ஒரு எம்.எல்.ஏ. என்று எல்லோரிடமும் சொல்லிவிட்டான். கையிலே பணமில்லை. இல்லை என்பதையும் நண்பர்களிடம் சொன்னான். ஏதோ கொஞ்சம் இருந்தால் போதும் ஜெயித்துவிடலாம் என்று அவர்கள் ஆறுதல் சொன்னார்கள். அப்போது அவன் கதை எழுதிக் கொண்டிருந்த இரண்டொரு கம்பெனிகளிலிருந்து சுமார் இரண்டாயிரம் ரூபாய் வரை வாங்கிக்கொண்டு விண்ணப்பம் தாக்கல் செய்ய திருக்கோஷ்டியூருக்குப் புறப்பட்டான்.

முதல் கூட்டம் திருப்பத்தூரில் பேசினான். அவனுடைய சகோதரர் ஏ.எல்.சீனிவாசனிடமிருந்து ஓர் 'இந்துஸ்தான்' கார் வாங்கிக்கொண்டான். தன்னிடமிருந்த பழைய காரையும் எடுத்துக்கொண்டான். தொகுதி முழுவதையும் சுற்றினான். அந்தத் தொகுதியில் ஐந்துபேர் போட்டி: ஒருவர் காங்கிரஸ், ஒருவர் கம்யூனிஸ்ட், அவன் தி.மு.க., இரண்டு சுயேச்சைகள்.

அந்தத் தொகுதியில் கம்யூனிஸ்டுகளுக்கு கணிசமான செல்வாக்கு உண்டு. அன்று அவன் கம்யூனிஸ்டுகளின் பரம எதிரி- காங்கிரசை அவன் தாக்கிப் போசவில்லை. கம்யூனிஸ்டுகளையே தாக்கினான். வகை முறையில்லாமல் தாக்கினான். அவர்களைத் தாக்கியே போஸ்டர்கள் அச்சடித்தான். சுமார் 25 நாட்கள் தேர்தல் பிரச்சாரம். அவனிடமிருந்த பணமோ விண்ணப்பம் தாக்கல் செய்த மறுநாளோடு தீர்ந்துவிட்டது. ஒரு கார் ஓடாமல் நின்றுவிட்டது. சில தொண்டர்கள் மட்டும் தங்கள் கைக் காசைப் போட்டுத் தேர்தல் வேலை செய்தார்கள்.



அவனிடம் பணம் இருந்தபோது அதை வாங்கிப் பாத்திரம் வாங்கியவர்கள், பணம் இல்லாதபோது படுத்துறங்கி விட்டார்கள். ஊழியர் கூட்டம் போட்டான். அதில் தன்னிடம் பணம் இல்லாத நிலையை எடுத்துச் சொன்னான். கண்கலங்க ஒருவர் எழுந்தார். அவர் ஒரு ஏழை விவசாயி. தன் மடியில் இருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் கொடுத்தார். மற்றவர்களில் சிலர் பணம் இல்லாமல் வேலை நடக்காது என்று கூறிவிட்டார்கள். சிலர் எங்கிருந்தாவது கடன் வாங்குவதற்கு முயற்சி செய்தார்கள். அவர்கள் அனைவரிலும் அன்று நூறு ரூபாய் கொடுத்தவரை நினைத்தே மெய்சிலித்தான். அவர் பெயர் காளப்பூர் அழகு என்பதாகும். அவ்வளவு நல்லவர் தி.மு.க.வில் வெகுகாலம் இருக்க முடியாதல்லவா? அவர் அடுத்த வருஷமே கழகத்தை விட்டு விலகி காங்கிரசில் சேர்ந்துவிட்டார்.

அவனது தேர்தல் வேலை மிகவும் புரட்சிகரமானதாகும். அவனது கழகத் தோழர்கள் அந்தக் கனத்த சரீரத்தைக் காடு மேடெல்லாம் இழுத்து அடித்தார்கள். ஏறாத வீடெல்லாம் ஏறி இறங்கினான். எவரும் தனக்கு ஒட்டுப் போடுவார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. அந்தத் தொகுதி மக்கள் கழகத்தை உற்சாகமாக வரவேற்கவில்லை.

மேடை போட்டுத் திட்டுவதையே தேர்தல் வேலையாக அவன் ஆக்கிக் கொண்டான். காங்கிரஸ் அபேட்சகரோ உள்ளான் குருவிகளைப் பிடிப்பதுபோல் ஒட்டுகளைப் பிடித்துக் கொண்டிருந்தார். கம்யூனிஸ்ட் அபேட்சகரோ தனக்குச் சாதகமான ஒட்டுகளை உறுதிப்படுத்திக் கொண்டு மற்ற ஒட்டுக்களைக் கவர முயற்சி செய்துகொண்டிருந்தார். அவனோ எந்த ஒட்டு தனக்கு விழுமென்று தெரியாமலே ஓடிக் கொண்டிருந்தான்.

அவன் நடத்திய பிரச்சாரத்தின் வேகத்தில் வாக்காளர்கள் மயங்கவில்லையென்றாலும் காங்கிரஸ் கட்சியினர் பயந்தார்கள். அந்தத் தொகுதியில் பாராளுமன்றத்திற்கு நின்றவர் ராஜாசர் முத்தையாசெட்டியார் அவர்களின் தம்பி இராமநாதன் செட்டியாராகும். அவரை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் போட்டியிட்டவர்கள், ஒரு கம்யூனிஸ்ட் அபேட்சகர் (பெயர் நினைவில்லை), ஒரு பி.சோ. அபேட்சகர் முத்துச்சாமி வல்லத்தரசு ஆகிய இருவரும்.

(சரிதம் தொடரும்)

# விறகு வெட்டி...

தூரத்தில் எங்கோ நாய்கள் ஊளையிடுகின்ற சத்தம் கேட்டது.

அதிகாலை நான்கு மணியளவில் இருக்கலாம்...

கந்தசாமியார் அவசர அவசரமாக எழும்பினார். ஏற்கனவே சேமித்து வைத்திருந்த உமிக்கரியை எடுத்து பல்தேய்த்து விரைவாக வாய் கொப்பளித்துவிட்டு மனைவி தரப்போகும் தேனீருக்காகக் காத்திருந்தார்...

"கெதியாய் தேத்தண்ணியை ஊத்துங்கோ... நேரம் போகுது... குடிச்சிட்டுத்தான் பாஸ் எடுக்கப்போகவேணும்... இப்பவே நூறு சனத்துக்கும் மேல நிற்கும் போல இருக்குது!"

அவரது அவசரம் அவருக்கு. ஆனால் குச்சி விறகால் மனைவியால் விரைவாக வேலை செய்ய முடியவில்லை.

'அடுப்புக்குக் கொஞ்சம் விறகு வெட்டிப் போடவேண்டும். விறகு வெட்டி வீட்டிலேயே விறகு இல்லை.' மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

கந்தசாமியார் யாழ்ப்பாணத்தைச் சொந்தமாகக் கொண்டவர். 90களின் பின் இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையமொன்றில் உள்ளூர் அகதியாய் தங்கியிருப்பவர். யாழ்ப்பாணத்தில் வசதியோடு வாழ்ந்த குடும்பம். இரண்டு பிள்ளைகள்; நோயாளியான மனைவி. நிறையப்பணம் நோய்க்கே செலவழித்தபோதும் அது மட்டும் மனைவியை விட்டு பிரியவேயில்லை...

"இஞ்சேருங்கோப்பா... பிள்ளையளுக்கு ஏதோ பள்ளிக்கூட பரீட்சைக் கட்டணம் இருக்காம்... நூறு ரூபா மட்டில கட்ட வேண்டும் என்று சொல்லிச்சுகள்... இன்றைக்குத் தான் கடைசி நாளாம். வேலை செய்யப் போகிற இடத்தில கேட்டு வாங்கிக் கொண்டு வாங்கோ..."

மனைவியின் குரலை காதில் வாங்கிப் போட்டுக் கொண்டே பாஸை கவனமாக எடுத்து சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டார்...

"நேற்று இரவு தந்த பாண் இருக்கு சாப்பிட்டுட்டுப் போங்கோவன்..."

"வேண்டாம் பிள்ளையளுக்கு கொடுங்கோ.. நான் வெளியில பார்த்துக் கொள்கிறேன்..."

"வெளியில சாப்பிடுறதுக்கு உங்களிட்ட என்ன காசே இருக்குது?..." மனைவியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

"நான் வேலைக்குப் போய்ட்டு வாறன்...!" சொல்லிவிட்டு விரைவாக நடையைக் கட்டினார் பதிலை எதிர்பார்க்காமல்.

வீதியில் ஒரே யோசனைகளே மனதைக் குடைந்து கொண்டிருந்தன. 'எப்படியும் ஒருநாள் சம்பளம் என்றாலும் இருநூறு ரூபாவாவது கிடைக்கும். நாளைக்கும் வேலை இருக்குமென்றால் அந்தக் காசையும் சேர்த்து வாங்கிப்போட வேண்டும். பிள்ளையளுக்கு



ஒரு ஆளுக்காவது ஒரு உடுப்பு, மனைவிக்கு ஒரு மாப்போத்தல் எல்லாம் வாங்க வேண்டும். வருத்தக்காரி நிறையவே கஷ்டப்படுகிறாள். பள்ளிக்கூட காசு வேற கட்ட வேண்டும். சமாளிக்கலாம்...'

'பிள்ளையளின் முகத்தில இப்ப சந்தோசமே காண்பது குறைவு. பாவம் அவள் மட்டும் என்ன சந்தோசமாகவோ இருக்கிறாள்? எவ்வளவு வசதியாக வாழ்ந்தவள். இன்றைக்கு எப்படியும் சந்தோசப்படுத்த வேண்டும்.

பிள்ளையள் எங்கயாவது சாப்பிடப் போன பிறகு அவளுக்கு மிக நெருக்கமாக எதிரில் அமர்ந்து கொண்டு அவளுடைய இரண்டு கைகளையும் எடுத்துக் கோர்த்துக் கொள்ள வேண்டும்.

மெது மெதுவாக வருடிவிடவேண்டும். எத்தனை கஷ்டப்படுகிறாள். இத்தனை வருத்தத்திலும், இவ்வளவு கஷ்டத்திற்கு மத்தியிலும் எவ்வளவு போராடுகிறாள். பழையதை எண்ணி கோபப்படாமல் கனிவாக நடக்கிறாள்....

நான்தான் இடைக்கிடையே கோபப் பட்டுக்கொள்கிறேன்... இன்று அவளுடன் ஆறுதலாக கதைக்க வேண்டும்....

எப்படி அவளால் மட்டும் இப்படி மென்மையாகச் சிரிக்க முடிகிறது...? கல்யாணமான ஆரம்ப காலங்களில் கைகளை இறுக்கிப் பின்னியபடிகிட்டே மிக நெருக்கமாய் இழுத்து பட்டும் படாமலும் நெருக்கமாய் இருந்து அவள் கண்ணுக்குள்ளே என் கண்ணைச் செலுத்தியபடி பார்த்துக் கொண்டிருக்கையிலே வெட்கமாய் சிரிப்பாளே.... அது போல இன்றைக்கும் பார்க்க வேண்டும்... எப்படியடி உன்னால் மட்டும் சிரிக்க முடிகிறது. அடிக்காதை மெதுவாக கடித்து கிசுகிசுப்பாக காதுக்குள்ளே கேட்க வேண்டும்.... அப்படியே முகம் இறக்கி... இறக்கி....

களைத்துப்போய் உடல் வியர்வை துடைத்து, அவளை அணைத்தபடியே மெதுவாய் அவள் பெயரை உச்சரித்துக் கொண்டே தலை கோதிவிட்டு உறங்கிப்போக வேண்டும்...

அவளின் நெருக்கத்திலே எனக்கு மட்டும் நடுங்குகிறதே...' நெஞ்செல்லாம் நெருப்பாய் எரிய சுரக்காத உமிழ்நீர் சேர்த்து இடறு விழுங்கியது நினைவுக்கு வர சந்தோசமாய் உணர்ந்தார்... நடையில் வேகம் கூட்டினார்....

★★★

"இதுதான் நீங்க கொத்த வேண்டிய விறகு!" வீட்டுக்காரர் காட்டிய விறகை பார்க்க சந்தோசமாக இருந்தது. எப்படியும் நான்கு நாட்களாவது எடுக்கும்....

சந்தோசம் கொடுத்த உற்சாகத்தில் வேலையை சற்று வேகமாகவே செய்யத் தொடங்கினார். வியர்வை வழிந்தோட களைப்பு அதிகமாகியது... காலையில் சாப்பிடாமல் வந்தது தவறாகப்பட்டது. வயதின் இயலாமையும் போசாக்கற்ற உணவும் இலேசாக மயக்கம்வர வேகமாக வீசிய கோடாலி விறகிலிருந்து வழுக்கி வலது காலில் முழங்காலுக்குக் கீழே ஆழமாகப்பதிந்து சென்றது...

இரத்தம் வழிந்தோட காயத்தின் வேதனை பாதிபேற்படுத்தத் தான் கந்தசாமியாருக்கு காயத்தின் அளவு புரிந்தது...

ஒற்றைக் கையால் காலைப் பொத்தியபடியே மயங்கிப் போனார்...

கண்விழித்தபோது ஏதோ தனியார் மருத்துவமனையில் கிடந்தார்... வீட்டுக்காரர் பக்கத்தில் கவலையோடு அமர்ந்திருந்தார்....

"என்ன கந்தசாமி கவனமாகப் பார்த்துக் கொத்தக்கூடாதோ? இப்ப பார் ஏழு தையல் போட்டிருக்குது... காசுக்கு என்று விறகு கொத்த வந்து இப்ப நீ எங்களுக்குத் தர வேண்டிவரும்போல... ஆயிரத்துக்கும் மேல செலவு..."

கவலையோடு அவர் சொல்ல கந்தசாமிக்கு என்னவோ போல் இருந்தது....

●●●

"எத்தனை நாளா விறகு வெட்டிறியள்... பார்த்து வெட்டுவதில்லையோ? இப்படி ஆழமாக காலை வெட்டிப்போட்டு வந்து நிக்கிறியள்... இதுல அவைக்கு கடன் வேற... இருக்கிற கஷ்டம் போதாதென்று இது வேற?"

அவர் படும் கஷ்டமும் காசில்லாத இயலாமையும் அவளை அப்படிக் கதைக்க வைத்தது... யோசிக்க யோசிக்க தன்னிலேயே தனக்குக் கோபம் வந்தது... பிள்ளைகள் பரீட்சைக்குக் காசுகேட்டபோது பதில் சொல்ல முடியவில்லை...

"காசு கட்டாவிட்டால் நாங்கள் பரீட்சை எழுத முடியாதாம்... அப்படியென்றால் நாங்கள் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை...."

அவர்கள் வேதனையோடு இலேசாக கோபம் தலைக்கேறியது...

மனைவி மட்டும் கதைத்துக்கொண்டே இருந்தாள்....

"சும்மா வாயை மூடிக்கொண்டு இருக்க மாட்டியோ?" கேட்டபடியே அவள் கன்னத்தில் திடீரென ஓங்கி அறைந்தார்...

அறைந்த பின்புதான் விபரீதம் புரிந்தது... நான் அவசரப்பட்டுவிட்டேன்' என்ற எண்ணம் தோன்ற தலையைக் குனிந்து கொண்டார்... பிள்ளைகள் மெதுவாக பின்வாங்கினார்கள்... பயத்துடன் அவரின் முகத்தைப் பார்த்தார்கள்... மனைவி அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். கண்களில் கண்ணீர் ஓடிக் கொண்டேயிருந்தது....

கந்தசாமியாருக்கு மனது உறுத்தியது... தன் பிழை நெஞ்சை சுட மெதுவாக எழுந்து காயத்தையும் பொருட்படுத்தாமல் வெளியே சென்றுவிட்டார்....

▫▫▫

மாலையில் திரும்பியபோது அமைதியாய் இருந்தார்கள்...

எதுவும் பேச முடியவில்லை... தலையைக் குனிந்தபடியே போய் அமர்ந்து கொண்டார்...

மனைவி கிட்டே வந்தாள்...

"என்னில கோபமா?..."

பதில் சொல்ல முடியவில்லை...

அவளைப் பார்க்க இரக்கமாக இருந்தது... ஆறுதல் சொல்ல முடியவில்லை... குற்ற உணர்வு... பேசாமல் இருந்து விட்டார்.

மெதுவாக எதிரே மிக நெருக்கமாக அமர்ந்தாள்...

கைகளை எடுத்துக் கோர்த்துக் கொண்டு...

தலையை நிமிர்த்தி.... கண்களுக்குள்ளே ஆழமான மிக மிக ஆழமாக பார்த்தபடி....

வெட்கமாகச் சிரித்துக் கொண்டே "சாப்பிட வாங்கோ!" என்றாள்.

கந்தசாமியார் மட்டும் தலை நிமிரவேயில்லை....

**அகன் கபிலன் – வவுனியா**

# மாமியாரின் மனசிலே

ஆபீசிலிருந்து வீடு திரும்பினான் பாஸ்கர்; தன் இளம் மனைவியை அழைத்தான்.

"ஜோதி, எங்க அம்மா எங்கே?"

"கோயிலுக்குப் போயிருக்காங்க!"

"சௌகரியமாப் போச்சு! உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும். உங்க அப்பாவும் அம்மாவும் நாளைக்கு இங்கே வரப் போறாங்க. ஆபீசுக்கு ஃபோன் வந்தது!"

ஜோதியின் முகத்தில் சந்தோஷம் படர்ந்தது.

"அப்படியா? ரொம்ப சந்தோஷங்க. நம்ம கல்யாணம் முடிஞ்சு ரெண்டு மாசம் ஆச்சு. இப்பவாவது நம்மளைப் பார்க்க அவர்களுக்குத் தோணிச்சே!"

"ரொம்பவும் குதிக்காதே! நான் சொல்றதைக் கொஞ்சம் காதில் வாங்கிக்க. முதல்ல, நான் சொல்றபடி ஒரு காரியம் பண்ணு. அப்புறம், பாரு வேடிக்கையை!...."

"என்னங்க. என்னவோ புதிர் போடறீங்க?"

"பெரிசா ஒண்ணுமில்லை. உங்க அப்பா-அம்மாகிட்ட நீ ரொம்பவும் வெறுப்பா நடந்துக்கிற மாதிரி நடி. அவ்வளவுதான்....!" என்று இரகசியக் குரலில் சொன்னான்.

"நான் எதுக்காக அப்படியெல்லாம் நடிக்கணும்?"

"உஸ்! சத்தம் போடாதே! எங்க அம்மா வந்திடப் போறாங்க!" என்று சுற்றும் முற்றும் பார்த்தவன், வீட்டில் யாருமில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, குரலை மேலும் தாழ்த்திக் கொண்டான்:

"கல்யாணமான பிறகு ஒரு பொண்ணு, புருஷனோட மனசில் இடம் பிடிக்கிறதைக் காட்டிலும், மாமியார் மனசிலே இடம் பிடிக்கிறதுதான் ரொம்பக் கஷ்டம். மீறி மாமியாரின் மனசிலே இடம் பிடிச்சிட்டால் உண்மையிலேயே அவள் ரொம்பப் பாக்கியசாலிதான். அப்புறம் சாவிக்கொத்தே மருமகள் கைக்கு வந்தாலும் ஆச்சரியப்பட வேண்டாம்...!"

"நீங்க சொல்றது கொஞ்சமும் புரியலைங்க!"

"ஜோதி, பொதுவா புகுந்த வீட்டோட பெருமையைப் புகழ்ந்தால், எந்த மாமியாருக்கும் தன் மருமகள் மேல் தனிப்பிரியமே வந்திடும். அதிலும் பிறந்த வீட்டைத் தூக்கியெறிஞ்சு பேசினால், கேட்கவே வேண்டாம், போ! நான் சொன்ன மாதிரி நடிச்சுப் பாரு. எங்க அம்மாவோட மனசிலே நீ இடம் பிடிச்சிடுவே!..."

பாஸ்கர் சொன்னதில் உண்மை இருப்பதாகத் தோன்றியது. நீண்ட நேர யோசனைக்குப் பிறகு, பாஸ்கரின் திட்டத்திற்குச் சம்மதித்தாள் ஜோதி.

மறுநாள்....

ஜோதியின் பெற்றோர் வந்தனர். ஏற்கனவே திட்டமிட்டபடி, ஜோதி அவர்களிடம் அவ்வளவாக முகம் கொடுத்துப் பேசவில்லை. அவர்களிடம் வெறுப்பாக நடந்து கொள்ள முற்பட்டாள்.

புகுந்த வீட்டின் பெருமையைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாள். அதே சமயம், பிறந்த வீட்டை சற்று உதாசீனப்படுத்தினாள். அவ்வளவும் நடிப்புத்தான்!

என்றாலும், அனைவரும் நம்பும்படி, அவளது நடிப்பு அவ்வளவு பொருத்தமாக அமைந்தது!

பிறந்த வீட்டைத் தாழ்த்தி, புகுந்த வீட்டைப் புகழ்ந்து தள்ளுவதைக் கண்டு அவளுடைய பெற்றோர் அதிர்ந்தனர். அதே சமயம் மகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைந்ததே என்ற பூரிப்புடன் புறப்பட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்ற பின்பு, மாமியார் ஜோதியை அழைத்தாள்.

ஜோதியின் மனசுக்குள் ஒரு எதிர்பார்ப்பு. சந்தோஷத்துடன் மாமியாரை அணுகினாள்.



"என்னங்க அத்தை?"

மாமியார் பொரிந்து தள்ளினாள்:

"ஜோதி, எனக்கு வரப்போகும் மருமகள் நல்ல குணவதியா இருக்கணும்னு காலமெல்லாம் பிரார்த்தனை பண்ணுவேன். உன்னோட போக்கை, இந்த ரெண்டு மாசமாப் பார்த்துப் பூரிச்சுப் போனேன். நான் நினைச்சமாதிரியே நல்ல ஒரு மருமகள் கிடைச்சிட்டதாச் சந்தோஷப்பட்டேன். ஆனால் உங்க அப்பா- அம்மாகிட்ட நீ நடந்த முறையைப் பார்த்தேன். உன் மேல இருந்த நல்ல அபிப்பிராயம் போயிட்டுது! பிறந்த வீட்டையும், பெற்றவங்களையும் மதிக்கத் தெரியாத உன்னால், புகுந்த வீட்டை மட்டும் எப்படிப்பெருமைப்படுத்த முடியும்? புகுந்த வீட்டையும் நீ உதாசீனப்படுத்தமாட்டேன்னு என்ன உறுதியிருக்கு? இனி காலத்துக்கும் என் மனசிலே உன்னால் ஒரு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்த முடியாது!"

பாஸ்கரும் ஜோதியும் போட்ட கணக்கு தலைகீழாக மாறிப்போயிற்று! ஜோதி அதிர்ந்து போனாள்!-

**அமுதகுமார்**

# வதிவிட வுரிமை

அகதி வாழ்க்கை என்பதை அல்லல்படும் வாழ்க்கையென்று சொன்னால் அது மிகையாகாது. ஒரு சில வசதி வாய்ப்புக்களைத் தவிர நிச்சயமாக இந்த வாழ்க்கையில் மிஞ்சுவது எதுவுமே கிடையாது. மனைவி, குழந்தைகளைப் பிரிந்து அகதியாக ஒரு நாட்டுக்குள் புகுந்த ஒருவர் படும் வேதனையை அனுபவித்துப் பார்த்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

சிங்கத்தாரும் அப்படியான வேதனைகளைச் சுமந்துகொண்டுதான் அவுஸ்திரேலியாவில் அகதியாக வாழ்ந்துகொண்டிருந்தார்.

சில வருடங்களுக்கு முன்பு நாட்டிலே சீரும் சிறப்புமாக வாழ்ந்த குடும்பம் அவருடையது. அருமையான மனைவி, அழகழகான இரு குழந்தைகள். இவர்களுடன் குதூகலமாக வாழ்ந்தவர்தான் சிங்கத்தார். மில் ஒன்றை சொந்தமாக வைத்திருந்த இவரிடம் கிட்டத்தட்ட பதினான்கு பெயரளவில் தொழில் பார்த்து வந்தார்கள்.

பாழாய்ப்போன தேசத்தில் சாபக்கேடாய் தோன்றிய இனப்பிரச்சனையால் இவரின் மில் தொழிலும் முடங்கிப் போக ஆரம்பித்தது. இதனால் கொஞ்சங் கொஞ்சமாக வறுமையும் அவர்களை வந்து ஒட்டிக் கொள்ளத் தொடங்கியது.

வசதியாக வாழ்ந்தவர்கள் வறுமைப் படுவதென்பது கொடுமையான விஷயமாகும். சிங்கத்தாரும் அந்தக் கொடுமைக்கு ஆளானபோது இனிமேலும் நாட்டிலிருப்பது உசிதமல்ல என்று தோன்றியது. அந்த நேரத்தில் வெளிநாடு போகலாமென்று மனைவியும் நச்சரித்ததனால் அவருக்கும் அது நல்ல சகுனமாக அமைந்து வந்தது.

கிடந்த காணிகளை அறாவிலைக்கு விற்றெடுத்தபோது, அது குடும்பத்துடன் பயணம் பண்ணுவதற்கு போதுமானதாக இருக்கவில்லை.

"இதனால் கவலைப்படத்தேவையில்லை, நீங்கள் மட்டும் அவுஸ்திரேலியாவிற்குப் போனாலே போதும். அங்கு வதிவிட உரிமை பெற்று குடும்பத்தினரை இலகுவாகவே கூப்பிடலாம்!" என்று தெரிந்தவர்கள் சாதகமாகச் சொன்னார்கள்.

ஏஜன்சிக்குப் பணம் கட்டிய ஏழாம் நாளே அவர் அவுஸ்திரேலியா வந்து சேர்ந்தார். இங்கு வந்தபோதுதான் தான் தனிமையில் நிர்க்கதியாகிவிட்டது போல் அவருக்குத் தோன்றியது.

சொல்லிக் கொள்ளக் கூடியளவிற்கு இங்கு உறவினர்கள், நண்பர்களென்று சிங்கத்தாருக்கு யாருமே இருக்கவில்லை. இதனால் ஒரு நேர உணவுக்கென்றாலும் உழைத்தே ஆகவேண்டுமென்ற நிர்ப்பந்தம் எழுந்தது. வேலை பெறுவதென்பது குதிரைக்கொம்பாக வேறு தென்பட்டது. சிங்கத்தார் விடவில்லை. யார் யாரையோவெல்லாம் தொடர்பு கொண்டு ஒரு 'ரெஸ்ற்ரோறண்டில் கிளினிங் ஜொப்'பில் சேர்ந்தார். அவரைப்போலவே நடுத்தரவயதினர் இருவர் சிங்கத்தாருடன் கூட்டாக அமைந்து வந்தார்கள். மூவரும் ஒரு வீட்டை வாடகைக்குப் பெற்றுக் காலத்தை ஓட்ட ஆரம்பித்தார்கள். சிங்கத்தாரைப்போலத்தான் மற்ற இருவரும் வதிவிட உரிமைக்காக விண்ணப்பித்துவிட்டுக் காத்திருந்தார்கள்.

சிங்கத்தார் வந்து கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் கடந்து போனது. அப்போதுதான் ஒருநாள் அவருக்கு வதிவிட உரிமை தர முடியாது என்று காரணப்படுத்தி கடிதம் ஒன்று அனுப்பியிருந்தார்கள்.

மிகவும் எதிர்பார்த்ததொன்று கிடைக்காமல் போனால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்வதென்பது முடியாத காரியம்.

சிங்கத்தாரும் அப்படியே துவண்டு போனார். வதிவிட உரிமை இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும்; மனைவி மக்களை கூப்பிடலாம் என்றிருந்த அவருக்கு இந்த ஏமாற்றம் தாங்க முடியாத வேதனையாக இருந்தது. 'இனி நான் எப்போது என் மனைவி குழந்தைகளைப் பார்ப்பேன்' என்ற கலக்கம் வேறு அவரைத் தொற்றிக்கொண்டது.

பிரிவுகளைத் தாங்க முடியாமல் அவஸ்தைப்படத்தொடங்கினார் சிங்கத்தார். ஏற்கனவே அளவோடு பாவித்து வந்த மது இப்போது பிரிவு, கவலை, ஏக்கம், எதிர்பார்ப்பு எல்லாவற்றையும் மறக்கும் அருமருந்தாக இருந்தது. சிங்கத்தாரும்கூட இருப்பவர்களும் குடித்துக் குடித்தே நாட்களை கடத்திக் கொண்டிருந்தார்கள்.



காலையில் வேலைக்குப் போவது, மாலையில் வீடுவந்து நன்றாகக் குடிப்பது, பின் சாப்பிடுவது பாதி, சாப்பிடாதது பாதியாக நித்திரைக்குப்போவது. இப்படியே சிங்கத்தாரின் வாழ்க்கை சுழலத் தொடங்கியது. 'வின்ரர் சீசனில்' அவுஸ்திரேலியாவில் குளிர் மிகக்குறைவென்றே சொல்லலாம். ஆனால் இக்காலங்களில் மழை அடிக்கடி தூறிக் கொண்டிருக்கும். அன்று வெள்ளிக்கிழமை. சிணுங்கிடும் குழந்தைபோல் மழையும் தூறிக் கொண்டிருந்தது. சிங்கத்தாருக்கும் மற்றவர்களுக்கும் அடுத்தநாள் விடுமுறையாதலால் மிகவும் அதிகமாகக் குடிக்கத் தொடங்கினார்கள். தலைகால் புரியாதளவு குடித்துவிட்டு அரட்டையடித்தார்கள். அப்பொழுது அவருடன் றூமில் இருக்கும் நபரொருவரின் உறவுக்கார இளைஞன் ஒருவன் அங்கே வந்தான். சிங்கத்தாரின் மகனைப்போல இருக்கும் அவனிடம் அவர் மிகவும் பாசமாகப் பழகுவார். "தம்பி இரு தேத்தண்ணி ஊற்றிக் கொண்டுவாறன்," என்று சிங்கத்தார் தள்ளாடியபடியே சமையலறைக்குச் சென்றார்.

"வேணாம் அங்கிள்!" என அவன் மறுத்தான். "இல்லை இல்லை தேத்தண்ணி குடிச்சிற்றுத்தான் போகவேணும்," என்று சிங்கத்தார் தேனீர் ஊற்றுவதற்கு முனைந்து கொண்டிருந்தார்.

"அங்கிள் எனக்குக் கிளாசுக்கு நேரமாச்சு" என்று அந்த இளைஞன் தேனீர் குடியாமலேயே எழுந்துபோய்விட்டான்.

ஓய்ந்திருந்த மழை அடுத்தநாள் சனிக்கிழமையும் பெய்ய ஆரம்பித்தது.

காலை ஏழுமணியிருக்கும். சிங்கத்தாரின் வீட்டில் முதல் நாள் குடையை மறந்துவிட்டுச் சென்ற அந்த இளைஞன், குடைக்கான தேவை ஏற்படவே அங்கு வந்தான்.

அழைப்பு மணியை அழுத்தினான். யாரும் எழுந்து வந்து கதவைத் திறப்பதாக இல்லை. கிட்டத்தட்ட ஐந்து நிமிடமளவில் முயற்சி செய்த அவன் அடுத்து கதவிலே பலமாகத் தட்டத்தொடங்கினான். அப்பொழுதும் உள்ளிருந்து பதில் வராமல் இருந்தது. கதவில் அடிக்கும் சத்தம் கேட்டு பக்கத்து அறையில் வசிக்கும் இத்தாலிக் கிழவர்கூட எழுந்து வந்துவிட்டார். கிழவரும் சேர்ந்து கதவைத் தட்டிப் பார்த்தார். அப்போதும் பதிலில்லை.

இந்த நேரத்தில் யாரும் எழுந்து வெளியில் போவதற்குச் சந்தர்ப்பமேயில்லை என்று உணர்ந்த இளைஞனும், இத்தாலிக் கிழவரும் பொலிசுக்குப் 'ஃபோன்' பண்ணினார்கள்.

பொலிஸ்காரர்கள் விரைந்து வந்து விசாரித்துவிட்டு 'றியல் எஸ்ரேற்றில்' திறப்புப்பெற்றுக் கதவு திறக்கப்பட்டது.

சிங்கத்தார் அடுப்படிக்கும் அறைக்கும் இடைப்பட்ட இடத்தில் படுத்திருந்தார். மற்றவர் அறைக்குள் கட்டிலுக்குப் பக்கத்தில் நிலத்திலே சரிந்திருந்தார். இளைஞனின் சொந்தக்காரர் தொலைக்காட்சிக்குப் பக்கத்தில் சாய்ந்தபடியிருந்தார். மூவரும் பிணமாகக் கிடந்தார்கள். பொலிசார் ஆராய்ச்சி செய்து விசாரித்தார்கள்.

முதல் நாள் அந்த இளைஞன் வந்தபோது தேனீர் ஊற்றுவதற்காகத் திறந்த 'காஷ் சிலிண்டர்' முற்றாக மூடப்படாமல் இருந்திருக்கிறது. இதனால் பூட்டியிருந்த அறையினுள் வாயு பரவி அத்தனைபேரின் உயிரையும் குடித்திருக்கிறது.

வதிவிடவுரிமை கிடைக்கும் அதன் மூலம் விடிவு வந்து பிறக்கும் என்றிருந்த அவர்களின் கற்பனைகள் அந்த இரவுடனேயே கரைந்து போனது.

அவுஸ்திரேலிய மண்ணில் அவர்களின் உயிரற்ற உடல் ஐக்கியமாகிவிட்டதால் ஒரு வகையில் இங்கு அவர்களுக்கு 'நிரந்தர வதிவிடவுரிமை' கிடைத்ததென்னவோ உண்மைதான்!

**களுவாஞ்சிக்குடி யோகன்**
**அவுஸ்திரேலியா**

இலக்கிய நயம்

# மறந்தால் மன்னிப்பில்லை

தருவது ரஜீகன்



அழகுக்கு இவள்தான்
அகராதி!

எழிலுக்கு இவள்தான்
உதாரணம்!

மோகத்தை ஊட்டுகிறாள்
மேகமாய் ஓடுகிறாள்
தாகத்தை தந்துவிட்டு
மாயமாய் மறைகிறாள்!

விழிகளில்
காதல் வேல்!
இதழ்களில்
காமன் வில்!
நெஞ்சினில்
மோக முள்!

புன்னகை
ஓர் மாயம்!
மென் நடை
ஓர் கோலம்!

மான் என்பதா?
கான மயில் என்பதா?

நிலவு என்பதா? அதனிலும்
அழகு என்பதா?

தென்றல் என்பதா?- அதனிலும்
சுகம் என்பதா?

கையிலொரு குடம்
நெஞ்சிலிரு குடம்
மெய்யில் இவள் ரதம்
பொய்யில்லை இவள் நிஜம்!

மோகத்தில் துஷ்யந்தன்
மூழ்கிப் போனான்!

சகுந்தலை! சகுந்தலை!
பெயர் அறிந்து
உயிர் உருகினான்!

விடா முயற்சிக்கு
மறு பெயர் காதல்!

அடிமேல் அடி அடித்தால்
அம்மியும் நகரும்!
இதயமும் இடம் பெயரும்!

இடம் பெயர்ந்தது
அவள் இதயம்
இடம் பெயர்ந்தது!

'இவனே எனையாளும்
மன்னன்'
என்று குறித்தாள்!

ஆனால்-அவன்
நாடாளும் மன்னன்
என்பது தெரியாது!

ஒருநாள் சகுந்தலை
நீராடி முடித்து
வெளிவந்தபோது

துஷ்யந்தன் தோன்றினான்.
ஈரமான துகில்
எழில்களையெல்லாம்
எடுத்துக்காட்டியது!

ஊகிக்க வேண்டிய
தேவையே இல்லாமல்
அழகுகளின் திரட்சி
பிரகடனமாகிக்
கொண்டிருந்தது!

துஷ்யந்தனுக்கு
காலைக் குளிரிலும்
உடல் தணலானது!

அவன் விழிகள்
தாவிய இடமெல்லாம்
சகுந்தலைக்கு
தீப்பிடித்துக் கொண்டது!

கண்கள் சந்தித்து
மீண்டன!

தவிப்பும் தவிப்பும்
தகிப்பாகின!

'வா' என்றான்
கைதொட்டு பிடித்து!

அவன் கைகள்
ஊர்ந்து பரவ,
தேகம் கொடியாகி
அவன்மீது
புரண்டு விட்டது!

வரவேற்பு கொடுத்தது
பெண்மை!

வரவேற்பை ஏற்றது
ஆண்மை!

பொங்கு கடலாய்
காமம்
கரை சேர முயன்றது
காதல் ஜோடி.

ஒன்று கலந்தவன்
அவளுக்கு
ஒன்று கொடுத்தான்,
அது கணையாழி!

"ஞாபகமாய் இருக்கட்டும்
சென்று வந்து
கைப்பிடிக்கிறேன்!"

கணையாழி விரலில்
சுமந்தவள்-அவன்
வாரிசை
கருப்பையில் சுமந்தாள்!

கருவை தந்து போனவன்
வந்து சேரவில்லை!

மனதிலும் பாரம்
வயிற்றிலும் பாரம்!

எழிலரசி சகுந்தலை
தினம் அழுதாள்!

துஷ்யந்தன்
நாடாளும் மன்னன்
என்பதையறிந்தாள்!

நூலாய் இளைத்தவள்
துஷ்யந்தன் சபைக்கு
தேடிப் போனாள்.

"யார் நீ?"
முதல் கேள்வியே
முகத்தில் அறைந்தது!

"முத்தத்தில் தோய்ந்ததும்
மோகத்தில் நனைந்ததும்
ஒருடலாய் இணைந்ததும்
மறந்தா போனது?

சோகம்
உள்ளத்தை துளைத்தது.

"உங்கள் காதலி
சகுந்தலை!"
சொல்லும்போதே
உதடு அழுதது!

துஷ்யந்தன்
சலனமற்று இருந்தான்!

"எந்தச் சகுந்தலை
எத்தனையாவது சகுந்தலை?

காதலிக்கும் பெண்களுக்கு
கணையாழி கொடுப்பேன்
உன்னிடம் தந்தேனா
என்னிடம் காட்டு!"

சகுந்தலையிடம்
கணையாழி இருந்தது
காட்டவில்லை!
"தொலைந்துவிட்டது"
என்றாள்!

திரும்பிப்பாராமல்
நடையைக் கட்டினாள்!

நடை காட்டிக்
கொடுத்தது- நினைவை
மீட்டிக் கொடுத்தது!

'ஓ. அவளா இவள்?'
அன்று பெற்ற சுகம்
நினைவில் இனித்தது!

"சகுந்தலை! நில்
என் உயிர் நீ!"
என்று கூவினான்!

அவள் நிற்கவில்லை
போய்க் கொண்டிருந்தாள்!

விரைந்து போய்
வழிமறித்தான்!

"கணையாழி
இல்லாவிட்டாலும்
பரவாயில்லை!" என்றான்.

"இந்தாரும்
கணையாழி!"
முகத்துக்கு நேராக
எடுத்து நீட்டினாள்!

துஷ்யந்தன்
ஆச்சரியப்பட்டான்!

சகுந்தலையே
விளக்கம் உரைத்தாள்.

காதலனை
தேடி வந்தேன்!
காமுகனைச் சந்தித்தேன்!

காதலுக்கு சாட்சி
மனதில் இருக்கவேண்டும்!

கணையாழி
காதல் பரிசாக இருக்கலாம்.
ஆதார முத்திரையாக
முடியாது!

காதலுக்கு ஆதாரம்
காதலனே கேட்டால்
அக் காதல்
சேதாரமாகிவிட்டது
என்று பொருள்!

உமது அந்தரப்புர
நந்தவனத்தில்
எத்தனையோ ரோஜாக்கள்!

முகர்ந்து வீசிய
ரோஜாக்களை
மறந்து போவீர்தான்!

மறக்க முடியாததும்
மறைக்க முடியாததும்
காதல்!

ஒழுக்கமே
வாழ்க்கையின் முதல்
துணை!

ஒழுக்கத்தை துறந்து
வாழ்பவர் நீர்!

உம்மோடு துணையானால்
துன்பமே மிஞ்சும்!"

சகுந்தலை
போய்விட்டாள்!
கணையாழி
சிரித்துக் கொண்டிருந்தது.

ஒழுக்கமே உயர்வு
உயர் பதவியோ
பெரும் புகழோ அல்ல!

ஒழுக்கமற்றவன்
மன்னனேயானாலும்
மரியாதைக்குரியவனல்ல!
என்று சொல்லாமல்
சொல்லி விட்டாளே!

துஷ்யந்தன்
முதற் தடவையாக
ஒரு பெண்ணிடம்
தோற்றுப் போனான்!

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"
அதிகாரம்: 14 குறள்: 131

(இது அந்தக்கால துஷ்யந்தன்
சகுந்தலை கதையல்ல)

---


ஸ்போர்ட்ஸ்

## அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி தற்போது அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. வருகின்ற ஜனவரி மாதம் அவுஸ்திரேலியாவில் உலகத் தொடர் கோப்பைக்கான ஒருநாள் போட்டிகள் ஆரம்பமாகின்றன. இந்தப் போட்டிகளில் அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுடன் இலங்கை அணியும் கலந்து கொள்கிறது.

இதற்காக இலங்கை அணி வரும் வருட முதல் திகதியன்று அவுஸ்திரேலியா செல்லவுள்ளது. இந்த முத்தரப்புப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இலங்கை அணியில், காயம் காரணமாக ஷார்ஜா போட்டிகளில் சலந்து கொள்ளாத முத்தையா முரளிதரன் மறுபடி சேர்க்கப் பட்டுள்ளார். சகலதுறை ஆட்டக்காரரான குமார தர்மசேன நீக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணி பங்குபற்றவுள்ள முத்தரப்புப் போட்டிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:



ஜனவரி 8 அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மெல்பேர்ன் (பகலிரவு)
ஜனவரி 11 இங்கிலாந்துக்கு எதிராக பிறிஸ்பேர்ண் (பகலிரவு)
ஜனவரி 13 அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னி (பகலிரவு)
ஜனவரி 19 இங்கிலாந்துக்கு எதிராக மெல்பேர்ன் (பகலிரவு)
ஜனவரி 21 அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஹோபேர்ட் (பகல்)
ஜனவரி 23 இங்கிலாந்துக்கு எதிராக அடிலெய்ட் (பகலிரவு)
ஜனவரி 24 அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அடிலெய்ட் (பகலிரவு)
ஜனவரி 29 இங்கிலாந்துக்கு எதிராக பேர்த் (பகலிரவு)
ஜனவரி 31 அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பேர்த் (பகல்)
பெப்ரவரி 03 இங்கிலாந்துக்கு எதிராக சிட்னி (பகலிரவு)
பெப்ரவரி 07 அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மெல்பேர்ன் (பகல்)

## தென்னாபிரிக்கா வெற்றி

இந்தியாவில் நடைபெற்ற பார்வையற்றோருக்கான முதலாவது கனிஷ்கா உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தென்னாபிக்கா வெற்றிபெற்றுள்ளது.

அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்கா, இந்தியாவை 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது. மற்றொரு அரையிறுதியில் பாகிஸ்தான், அவுஸ்திரேலியாவை 8 ஓட்டங்களால் வென்றது.

இதையடுத்து தென்னாபிரிக்காவும், பாகிஸ்தானும் இறுதிப் போட்டியில் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 40 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 372 ஓட்டங்கள் எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 37.1 ஓவர்களில் வெற்றி இலக்கைத் தொட்டது.

இப்போட்டியில் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கிய தென்னாபிரிக்க வீரர்கள் ரூரி பீல்ட் மற்றும் ஸ்கொட் பீல்ட் ஆகிய இருவரும் சகோதரர்கள். இவர்கள் இருவரும் தலா 193, 159 ஓட்டங்களைப் பெற்றனர்.

கோப்பையை வென்ற தென்னாபிரிக்க அணிக்கு ஒரு இலட்சம் ரூபா பரிசாக வழங்கப் பட்டது. இரண்டாவதாக வந்த பாகிஸ்தான் அணிக்கு 50 ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப் பட்டது.

## மேற்கிந்திய சாதனை

மேற்கிந்தியத் தீவுகள் அணி, தென்னாபிரிக்க அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்துள்ளது. இப்போட்டியில் மேற்கிந்தியத்தீவு வீரர் கொட்னி வோல்ஷ் 4 விக்கெட்டுக்களை வீழத்தியதன் மூலம் அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்திய மேற்கிந்தியத்தீவு வீரர் என்ற சாதனைக்குரியவராகியுள்ளார்.



இதற்கு முன்னர் மேற்கிந்தியத் தீவு அணி சார்பாக 378 விக்கெட்டுக்களை வீழ்த்தி மால்கம் மார்ஷல் சாதனை படைத்திருந்தார். 375 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்த வோல்ஷ், 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி மார்ஷலின் சாதனையை முறியடித்துள்ளார்.

---

★ விமான சேவை பற்றி இப்போது தமிழ்க் கட்சிகள் பேசுவதே இல்லையே?

ஏ.வெங்கடேஷ், கொழும்பு-11.

புலிகள் மட்டும் தடுத்தால் ஜனநாயக (?!) உணர்ச்சியுடன் கண்டிக்கலாம். ஜனாதிபதியே "விமான சேவை நடத்தோம்!" என்று கூறிவிட்டார். அதனால் ஜனநாயக உணர்ச்சியை சுருட்டி வைத்து விட்டார்கள்.

✧✚

★ சிந்தியா! தொல்லை தவிர்ப்புக் குழு பற்றி இரா.சம்பந்தன் எம்.பி ரூபவாஹினியில் ஆற்றிய தொகுப்புரை பார்த்தீரா?

கே.ஞானதாஸ், மட்டக்குளி.

புளுகினார்-பார்த்தோம்! பதிவு செய்தும் வைத்துள்ளோம்! தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு தலைவர் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி. அவர் பொறுப்பில் உள்ளது இந்து கலாசார திணைக்களம். அதன் உதவிப் பணிப்பாளரும், பத்திரிகையாளருமான தெய்வநாயகம்பிள்ளை பலமாதங்களாக விசாரணையின்றி வாடுகிறார்! இது ஒன்று போதாதா சாதனையை அளவிட?!

✧✚

★ விடுதலைப் புலிகளிடம் ஹெலி இருப்பதாக சந்தேகம் தெரிவிக்கப் பட்டபோது, புலிகளிடம் ஹெலி ஒன்றும், விமானம் ஒன்றும் இருப்பதாக நூறுவீதம் உறுதிபடுத்திக் கூறினீர்கள். ஆனால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் மறுத்துள்ளாரே?

ஆர்.கஜேந்திரன், மட்டக்களப்பு.

அப்படியானால் மாவீரர் தினத்தன்று வானில் பறந்தவை என்ன-தும்பிகளா?!

✧✚

★ சமீபத்திய தேர்தல்களில் பாரதிய ஜனதாவின் தோல்விக்கு யாது காரணம்?

சி.கருணாகரன், வத்தளை.

வெங்காயம்! அதாவது வெங்காயம் விலை ஏறியதும் ஒரு காரணமாம்! கூட்டணிக் குத்து வெட்டுக்களும் இன்னொரு காரணம்!

✧✚

★ முதுகுக்குப் பின்னால் பேசுகிறவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

எஸ்.லலிதா, கம்பளை.

அவர்கள் தொகைதானே அதிகமாகிறது! அது போகட்டும், சமீபத்தில் படித்த ஒரு ஜோக் கதையை எடுத்துவிடுகிறேன்:

ஒரு வீட்டின் சொந்தக்காரர் வெளியூருக்குப் புறப்பட்டார். அப்படிப் போகும் போது தனது கிளியை தன் வீட்டில் வாடகைக்கு இருந்த குடும்பத்திடம் கொடுத்து விட்டு போனார்.

சில வாரங்கள் சென்று திரும்பி வந்தார். "ரொம்ப நன்றி. என் கிளியை பத்திரமாகப் பார்த்துக் கொண்டீர்கள்," என்று கூறிவிட்டு கிளியை வாங்கிப் போனார்.

அன்று இரவு கிளி பேசியதைக் கேட்ட வீட்டுக்காரருக்கு முகம் கோணலாகியது.

அப்படி என்னதான் கிளி பேசியது என்கிறீர்களா?

"நாசமாப் போகிறவன். இங்க நாம் இருக்கவே இடம் போதாது. இதிலே கிளியையும் கொடுத்துவிட்டு போய்விட்டான். வாடகை ஒருநாள் தாமதமானால் மட்டும் குரைப்பான்- படுபாவி!"

✧✚

★ உன்னைப் போல் உன் அயலானையும் நேசி என்பதை யார் பின்பற்றுகிறார்கள்?

செல்வி இ.நிரோசா, கண்டி.

'உன் அயலானையும் (தமிழராயிருந்தால்) சந்தேகி' என்று கூறுகின்றனவே பாதுகாப்பு விதிகள்.

✧✚

★ நல்ல விஷயங்களை சிலர் கிரகிப்பதே இல்லையே?

மா.ரவிபாலன், வவுனியா.

பாதிரியார் ஒருவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அவர் எப்போது பிரசங்கம் செய்துகொண்டிருந்தாலும் மக்கள் தூங்கிவிடுவார்கள்.

பொறுத்துப் பார்த்த பாதிரியார் ஒருநாள் அவர்களுக்கு புத்தி புகட்ட நினைத்தார்.

வழக்கம் போல் அன்றும் பிரசங்கத்தை ஆரம்பித்தார். அனைவரும் தூங்கிக்கொண்டிருந்தனர். திடீரென்று தனது உரையை நிறுத்திவிட்டு ஒரு விசிலை எடுத்து பலமாக ஊதினார்.



சல்மான் கான்

தூங்கிக் கொண்டிருந்த அனைவரும் திடுக்கிட்டு கண் விழித்தனர்.

உடனே பாதிரியார் "இவ்வளவு நேரம் நல்ல விஷயங்களை சொல்லிக் கொண்டிருந்தேன். நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். ஒரு பிரயோசனமும் இல்லாத முட்டாள்தனமான செயலை நான் செய்ததும் விழித்துக் கொண்டீர்கள். இந்த அளவுக்காவது நீங்கள் சுயபுத்தியோடு இருப்பதைக் கண்டு நான் சந்தோசப்படுகிறேன்!" என்றார். எல்லோரும் வெட்கத்தில் தலை குனிந்தனர்.

✧✚

★ "தமிழர்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் பூர்வீகக் குடிகளல்ல," என்று ஜனாதிபதி கூறியதாக செய்தி கண்டோம். அது பற்றி என்ன கூறுகிறீர்?

வி.சிவராசா, கொழும்பு-13.

அப்படிக் கூறியிருந்தால் அது மேலும் ஒரு மகாதவறு! விஜயனும் அவன் ஆட்களும் வருவதற்கு முன்னரே இங்கு வாழ்ந்த ஆதிக்குடிகள் தமிழர்கள்! எல்லாம் சரி, சிங்கள மக்களும் பூர்வீகக் குடிகளல்ல என்று ஜனாதிபதி தம்மிடம் கூறியதாகக் கூறும் தமிழ்க் கட்சிகளுக்கு ஒரு சவால்! அதனை ஜனாதிபதி பகிரங்கமாக கூறுமாறு செய்யுங்கள் பார்க்கலாம். பௌத்த துறவிகள் ஒன்றும் தமிழ்க் கட்சிகளல்ல, பொங்கி எழுந்துவிடுவர்!

✧✚

★ ஆண்மை என்பது வீரத்தின் அடையாளம், பெண்மை?

தா.சூர்யா, திருமலை.

அதுவும் வீரத்தின் அடையாளம்தான்! நீங்கள் எந்த நாட்டில் இருக்கிறீர்கள்?

✧✚

★ ஜெயலலிதா காங்கிரஸ் தலைவி சோனியாவோடு சேருவாரா?

பி.செல்வரத்தினம், மன்னார்.

ஆம்! ஆனால் சற்றுத் தாமதமாக!

✧✚

★ சல்மான்கான் மான்களை வேட்டையாடியது சரியா?

எம்.பெரோஸ்கான், புத்தளம்.

தவறுதான்! தனது பெயரில் மான் இருப்பதால், வெளியே ஏன் மான் இருக்க வேண்டும் என்று நினைத்தாராக்கும்!

✧✚

★ இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி தனக்கு வழங்கப்பட்ட டாக்டர் பட்டத்தை ஏற்க மறுத்து விட்டாராமே?

எம்.ஜோசப், காலி.

டாக்டர் பட்டம் வாங்கும் அரசியல் வாதிகளுக்கு உள்ள மரியாதையை அவர் புரிந்து கொண்டிருப்பார். ஒரு குட்டிக்கதை:

அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர் ஸ்டிபன் லீகாக் என்பவர் தன் பெயருடன் இலக்கியத்துறையில் தான் வாங்கிய டாக்டர் பட்டத்தையும் சேர்த்து எழுதுவார்.

ஒருமுறை அவர் கப்பலில் பயணம் செய்தார். அப்போது கப்பல் பணிப்பெண் ஒருத்தி தவறி விழுந்து காலில் தசைப் பிடிப்பு ஏற்பட்டது.

உடனே கப்பல் கப்டன் பயணிகள் பட்டியலைப் பார்த்து ஸ்டிபன் லீகாக்கை டாக்டர் (மருத்துவத்துறை) என்று நினைத்து அவரை அழைத்து: "ஒரு இளம் பெண் தவறி விழுந்து கால் வலியால் துடிக்கிறாள். இடுப்பிலிருந்து பாதம் வரை வலியென்கிறாள். வந்து பாருங்கள்!" என்றார்.

ஸ்டிபன் லீகாக் இளம் பெண்ணின் கால்களை சோதிக்கும் ஆசையில் தான் டாக்டர் இல்லை என்பதை கூறாமல் குசியாகச் சென்றார்.

அப்பெண்ணின் அறைக்குள் நுழைந்தவர் அதிர்ச்சியாகி நின்று விட்டார்.

ஏனெனில்; டாக்டர் பட்டம் வாங்கிய ஒரு அரசியல்வாதி அப்பெண்ணின் கால்களை தடவிக் கொண்டிருந்தார்!

✧✚

★ 'படையப்பா', 'மருதநாயகம்', இரண்டில் எது முதலில் வரும்?

சி.மணிவண்ணன், பதுளை.

இரண்டும் ஒரே நேரத்தில்!

# திருமறை தரும் பொது நெறி 38


# தாவீதின் பெருமையும்... சிறுமையும்...

ஆண்டவரின் பேழையை தாவீது நகருக்கு எடுத்துவரும் பொருட்டு தாவீது மன்னன் 30 ஆயிரம் இஸ்ரயேல் வீரர்களுடன் சென்றார். பாலை யூதாவிலுள்ள குன்றின் மீதிருந்த அபிநதாவின் இல்லத்தில் பேழை வைக்கப்பட்டிருந்தது. அங்கு சென்ற தாவீதும் குழுவினரும் இரு காளை மாடுகள் பூட்டப்பட்ட ஒரு புதிய வண்டியில் பேழையை ஏற்றிக் கொண்டு புறப்பட்டனர்.

ஓரிடத்தில் காளை மாடுகள் இரண்டும் ஏதோ ஒரு காரணத்தினால் மருண்டன. அப்பேழையின் அருகில் அபிநதாவின் புதல்வர்களான ஊசாவும் அகியோவும் வந்து கொண்டிருந்தனர். மாடுகள் மருண்டதும் வண்டி கவிழ்ந்து விடுமோ என்ற அச்சம் தோன்றியது. வண்டி கவிழ்ந்தால் பேழை கீழே விழுந்துவிடக்கூடும் என்ற பயமும், அருகில் வந்து கொண்டிருந்த ஊசாவுக்கு உண்டானது. பேழை கீழே வீழ்ந்து விடாமல் அதனைத் தாங்கிப் பிடிக்க ஊசா முன்னோடிச் சென்று பேழையைத் தொட்டான்.

ஊசா பேழையைத் தொட்டதும் பேரிடி ஒன்று விழுந்தது போல ஊசா தாக்கப்பட்டுத் தரையில் சரிந்தான். அவனுடைய உயிரும் பிரிந்தது. இதனால் தாவீது மன்னனும் உடன் வந்து கொண்டிருந்த ஏனையோரும் பெரும் கிலேசமடைந்தனர்.

தூய மனதுடன்- ஆண்டவரின் பேழையை- பயபக்தியுடன் எடுத்து வரும்போது, அசம்பாவிதம் எவ்வாறு ஏற்பட முடியும்? அத்தகைய விபரீதம் ஏற்படும் என்று சந்தேகப்படலாமா? ஆண்டவர்மீது அவநம்பிக்கை ஏற்பட்டமையால் தான் ஊசா பேழையைத் தாங்கிப்பிடிக்க முனைந்தான். இதனால்தான் கர்த்தரின் கோபாக்கினியால் சுட்டெரிக்கப்பட்டான், ஊசா.



ஊசா தண்டிக்கப்பட்டதால் மன்னர் தாவீது மருண்டுதான் போனார். அதனை ஒரு துர்க்குறியாகவே கருதினார். சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகேயிருந்த ஒபேது ஏதோன் என்பவரின் இல்லத்தில் பேழையை எடுத்துச் சென்று வைத்தனர். ஏதோம் வீட்டில் மூன்று மாதங்கள் அப்பேழை இருந்தது. ஆண்டவர் அவ்வீட்டார் அனைவருக்கும் ஆசி வழங்கினார்.

ஏதோம் வீட்டிலுள்ளவர்கள் அனைவருக்கும் ஆண்டவர் ஆசி வழங்கியதை அறிந்த தாவீது, எப்படியாவது பேழையை தனது தாவீது நகருக்குக் கொண்டுவர வேண்டும் என்று துணிந்தார். விரிவான ஏற்பாடுகளனைத்தையும் செய்தார்.

மூன்று மாதங்கள் வரை பேழை ஏதோம் வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் முறைப்படி பலிகளைக் கொடுத்து, பிரார்த்தனைகளைச் செய்து மிகவும் தூய்மையாக பேழையை எடுத்துக் கொண்டு ஊர்வலமாக வந்தனர். தாவீது, தான் மன்னன் என்ற அந்தஸ்தை விலக்கிவிட்டு, தனது அரச உடைகளைக் களைந்துவிட்டு நார்ப்பட்டாலான ஆடைகளை உடுத்திக்கொண்டு பேழையின் முன்புறமாக ஆடிப்பாடிக்கொண்டு வந்தார். இக்காட்சி பார்ப்பவர் அனைவரையும் பரவசத்தி லாழ்த்தியது.

## மீகாள் பரிகசித்தாள்

எருசலேம் நகருள் புகுந்து தாவீது நகரை பேழை அடைந்தபோது ஆண்டவரின் பேழையைச் சூழ்ந்து வந்த மக்கள் பக்திப் பரவசமேலீட்டால் ஆடினார்கள். மாளிகை ஒன்றின் உப்பரிகையில் நின்று பார்த்துக்கொண்டிருந்த- சவுல் மன்னனின் மகளும் தாவீது மன்னரின் முதலாவது மனைவியுமான மீகாள், தாவீதின் கோலத்தைக் கண்டு பரிகசித்தாள்

"ஒரு பெரிய மக்கள் சமுதாயத்தின் மன்னர், ஒரு பரம ஏழையைப் போல் சாதாரண உடைகளுடன் வீதிகளில் ஆடிப்பாடி வருகிறாரே! பார்ப்பவர் பரிகசிக்கும் வண்ணம் இப்படிக் கோலங்காட்டலாமா?"

மீகாள் இவ்வாறு கூறிக் கேலி செய்ததை தாவீது அறிந்து கொண்டார். "ஆடுகளை மேய்த்துக் கொண்டு கானகத்தில் திரிந்த என்னை நாடாளும் மன்னனாக உயர்த்திவிட்ட ஆண்டவரின் முன் எனக்கென்ன உயர்ச்சி தேவை? இறைவனின் முன்னிலையில் என்னைத் தாழ்த்திக் கொள்வதனால் எதுவும் குறைந்து விடப்போவதில்லை. ஆண்டவன் முன் நான் ஓர் ஏழைதான்!"

இவ்வாறு தாவீது கூறினார். அவரை நாடி பேழை வைக்கப்பட்டிருந்த இடம் தேடி வந்தவர்களுக்கெல்லாம் இறைவாக்குக் கூறி ஆசீர்வாதமும் வழங்கினார். இச்சம்பவத்தின் பின் மீகாளுக்கு தாவீது மன்னர் மூலமாகக் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை.

தாவீது நகரில் மன்னர் தாவீது தனக்கென ஒரு மாளிகையை அமைத்துக் கொண்டார். இதனால் மட்டும் அவர் மனம் திருப்தி அடையவில்லை. தான் மாளிகையில் வசதிகளுடன் வாசம் செய்யும்போது, ஆண்டவரின் இல்லம் சாதாரண ஒரு கூடாரத்தில் இருக்கிறதே என்று கவலைப்பட்டார். ஆண்டவரின் பணிவிடைகளில் ஈடுபடும் குருவான நாத்தானை அழைத்து, ஆண்டவருக்கான ஒரு நிரந்தரமான கோவிலை அமைப்பதற்கு கர்த்தரிடம் கருத்தறிந்து சொல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

ஆண்டவர், தாவீது ஆலயம் அமைப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆலயம் அமைக்கும் பொறுப்பினை தாவீது மன்னரின் வாரிசுகளில் ஒருவனே அமைப்பான் என்று ஆண்டவர் கருதுவதாக நாத்தான் கூறினார். இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரால் வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தில் வாழ்ந்தபோதிலும், அவர்களுடைய நாடோடி வாழ்க்கை முடிவுறவில்லை. மக்கள் மத்தியில் ஒற்றுமை வலுவடையவில்லை. ஏனைய இன மக்களுடனான சண்டைகளும் முடிவடையவில்லை. ஆகவே இத்தனை துன்பங்களும் மறைந்து, இஸ்ரயேல் மக்கள் நிலையானதொரு வாழ்க்கையினை வாழத் தலைப்பட்டதும் தனக்கானதோர் இல்லத்தை அமைத்துக்கொள்ள இறைவன் இச்சை கொண்டிருந்தார் போலும்.

இறைவனை முன் நிறுத்தி தாவீது மன்னன் தீட்டிய திட்டங்களெல்லாம் திருப்திகரமாக நடந்து முடிந்தன. இருப்பினும் பெண்கள் விடயத்தில் தாவீது சபல புத்தியுடையவராக இருந்தார். பல பெண்களைத் தனது ஆசை நாயகிகளாக வைத்துக் கொண்டார். பல குழந்தைகளுக்கும் தந்தையாகினார்.

## தாவீதின் தகாத உறவு

ஒருநாள் மன்னன் தாவீது தனது மாளிகையின் உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்தபோது, கீழே நீரோடையில் ஒரிளம் பெண் குளித்துக்கொண்டிருந்ததைக் கண்ணுற்றார். அவளுடைய அழகில் மனதைப் பறிகொடுத்தார். காவலன் ஒருவனை அனுப்பி அப்பெண்ணை அழைத்துவருமாறு பணித்தார்.

அம்மோனியருக்கெதிரான போர் அப்போது நீடைபெற்றுக் கொண்டிருந்தது. இரபா என்ற நகரை தாவீதின் படைகள் முற்றுகையிட்டிருந்தன. யோவாபு என்பவன் தலைமையில் இப்படைகள் போரிட்டுக் கொண்டிருந்தன. அப்படைகளில் ஓர் அதிகாரியாகச் செயற்பட்ட இத்தியனான உரியாவின் மனைவியான பத்சேபா என்னும் பெயருடைய பெண்ணே தான் மன்னரின் உள்ளத்துள் புகுந்து கொண்ட அழகி. இப்பொழுது பத்சேபா மன்னர் தாவீதின் அந்தப்புரத்து அழகிகளுள் ஒருத்தியானாள்.

பத்சேபா சில மாதங்களில் கருவுற்றாள். இதனை அறிந்த தாவீது மன்னர், பத்சேபாவின் கணவர் உரியாவைப் போர் முனையிலிருந்து தருவித்தார். சில நாட்கள் தனது வீட்டுக்குச் சென்று மனைவியுடன் மகிழ்ச்சியாக இருந்து விட்டு போர்முனைக்குச் செல்லலாம் என்று கேட்டுக்கொண்டார்.

நேர்மையாளனான உரியா, வீடு செல்ல மறுத்து அரண்மனையின் முன்புறமாக உள்ள திறந்த வெளியில் படுத்துறங்கினான். இதனைக் கேள்வியுற்ற மன்னர் தாவீது, உரியாவை அழைத்து, வீடு செல்லாததன் காரணம் என்ன என்று கேட்டார்.

போர்முனையில் தன்னுடன் முன்னணியில் நின்ற போர் வீரர்கள் அனைவரும் திறந்த வெளியில் துன்பகரமான சூழ்நிலையில் கிடக்கும் போது, தான் மட்டும் தனது இல்லம் சென்று மகிழ்ச்சியாக இருக்கமுடியாது என்று உரியா கூறினான். அவனை மீண்டும் போர் முனைக்குச் செல்லுமாறு மன்னர் தாவீது பணித்தார். உரியாவை போர் முனையின் முன்னணிக்கு அனுப்பி, எதிரிகளால் கொல்ல வைத்து விடுமாறு யோவாபுக்குத் தகவல் அனுப்பினார். அதன்படி உரியாவும் கொல்லப்பட்டான். உரிய துக்க அனுஷ்டானம் முடிவடைந்ததும் உரியாவின் மனைவியான பத்சேபாவை தன் அரண்மனைக்கு மன்னர் தாவீது அழைத்துக் கொண்டார். அவளும் சில மாதங்களில் அழகிய ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

## இருபெரும் தவறுகள்

தாவீது செய்த நயவஞ்சகம் ஆண்டவரின் கோபத்தைப் பொங்கியெழ வைத்தது. நாத்தான் ஆண்டவரின் எண்ணத்தை தாவீதிடம் எடுத்துரைத்தார். விரைவில் மன்னர் செய்த கொடும் பாவத்துக்கான தண்டனையை அனுபவித்தாக வேண்டிவரும் என்றும் எச்சரித்தார். தான் இரு பெரும் பாபச் செயல்களைப் புரிந்து விட்டதை மன்னர் தாவீது உணர்ந்தார். முதலாவது- பிறன் மனை நாடியது. அடுத்தது சுயநல நோக்கோடு ஓர் அப்பாவியைக் கொலை செய்தது. இப்பாபச் செயல்களுக்காக மனம் மிக வருந்தி ஆண்டவரிடம் மன்னிப்பு அருளுமாறு வேண்டிக் கொண்டார்.

★★★

சவுல் மன்னரின் மகனும் தாவீதின் உற்ற நண்பனுமான யோனத்தானின் ஒரு மகனான மேவிபோசேத்து என்பவன் லோதேபார் என்ற இடத்தில் இருப்பதாகத் தாவீது அறிந்தார். அவனைத் தன்னிடம் அழைத்துவருமாறு ஆள் அனுப்பினார். மேவிபோசேத்து இரு கால்களும் ஊனமடைந்தவன். அவனுக்கு உதவியாக- சவுல் மன்னரிடம் பணியாளனாகவிருந்த சீபா என்பவனையும் அழைத்து மேவிபோசேத்துவுக்குப் பணி புரியுமாறு கேட்டுக் கொண்டார் தாவீது. சவுல் மன்னருக்குச் சொந்தமாக இருந்த சகல சொத்துக்களையும் மேவிபோசேத்துவிடம் கொடுத்து விடவும் ஏற்பாடு செய்தார். உணவு வேளையில் மன்னர் தாவீதின் மேசையிலிருந்து உணவினை உண்ணும் உரிமையையும் மன்னர், யோனத்தான் மகனுக்கு வழங்கினார். மேவிபோசேத்து எருசலேமில் ஓர் இளவரசனின் அந்தஸ்துடன் வாழ்ந்து வந்தான்.

இக்காலகட்டத்தில் பெலிஸ்தியர், மோவாபியர், சோபா, சீரியா போன்ற அரசுகளையெல்லாம், கர்த்தரின் துணையுடன் முறியடித்தார் தாவீது மன்னர். அந்தந்த நாடுகளில் கிடைத்த திரண்ட செல்வத்தையெல்லாம் கொண்டு வந்து எருசலேமில் உள்ள தாவீது நகர்க் கருவூலத்தை நிரப்பினார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 36 விடை:** அங்கியின் ஒரு துண்டு, தண்ணீர்ப் பாத்திரம், ஈட்டி.

**பரிசு பெறுவோர்:**

1. ஆர்.தாரணி, 66, செல்லப்பா வீதி, பாண்டிருப்பு-01, கல்முனை.
2. கிரேஷியன் குணசீலன், தேவிசிறிபுர, தலவாக்கல்ல.
3. எம்.எஸ்,றமீலா, 3ம் வாட், குச்சவெளி, திருகோணமலை.
4. எம்.எஸ்எம்.முஹாஜிரீன், 190 A, மீவலதெனிய, ஹன்தெஸ்ஸ.
5. எம்.எம்.எம்.முன்சீப், ரம்யா பிளேஸ், கொழும்பு-10.

**திருமறை 38 வினா:-** யோனத்தானின் மகன் யார்?

டிச. 12க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 38 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

## பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : வாக்குறுதி |
| தொழில் | : காற்றில் பறப்பது. |
| நண்பர்கள் | : அரசியல் தலைவர்கள். ஆட்சியில் இருப்பவர்கள். |
| எதிரிகள் | : நம்ப மறுப்பவர்கள். |
| பிடித்த வார்த்தை | : விரைவில் நடவடிக்கை |
| பிடிக்காத வார்த்தை | : செயல். |
| சாதனை | : அரசியல்வாதிகள் பலரை பதவியில் அமர்த்தியது. |
| சோதனை | : சாயம் வெளுக்கத் தொடங்கியிருப்பது. |
| நம்புவது | : மக்களின் மறதியை |
| பிடித்த தொழில் | : கயிறு திரித்தல். |
| பிடித்த மனிதர் | : கோயபல்ஸ் |
| சுவாசிப்பது | : பொய்களை. |
| நேசிப்பது | : பொய்யர்களை. |
| பிடிக்காத குறள் | : *"எப்பொருள் யார் யார் வாய்க்–கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."* |

## நீதிமன்றத்தில் செல்வி



செல்வி: ஹா ஹா ஹா, வழக்கு, கணக்கு, பிணக்கு! யாரிடம் நடத்துகிறீர்கள் விசாரணை? யாரிடம் அனுப்புகிறீர்கள் சம்மன்?

நீதிபதி: நான்தான் நீதிபதி.

செல்வி: நீர் நீதிக்கு அதிபதி. நான் நாட்டுக்கே அதிபதி. நான் விரலசைத்தால் அரசும் ஆடும். அமைச்சர்களின் சிரசும் ஆடும்.

நீ: அதிகாரமான பேச்சு

செ: அது என் கூடப்பிறந்த குணம்.

நீ: நீதிக்கு தலை வணங்குங்கள்!

செ: என் முன்னால் அடுத்தவர் தலை வணங்கித்தான் பார்த்திருக்கிறேன். என்னையே தலை வணங்கச் சொல்கிறீரா?

நீ: உங்கள் வழக்கு பற்றி என்ன கூறுகிறீர்கள்?

செ: தமிழ் நாட்டில் புலிகள் நடமாட்டம் அதிகமாகி விட்டதால் நான் எக்கேள்விக்கும் பதில் சொல்ல முடியாது.

நீ: அதற்கும் இதற்கும் என்ன சம்மந்தம்.

செ: புலிகள் குறிவைக்கக்கூடும் என்று பயந்து கொண்டிருப்பதால், உங்கள் கேள்விகளுக்கு சரியாக பதிலளிக்க முடியாது.

நீ: எப்போதான் பதில் கூறப்போகிறீர்கள்?


செ: இதற்கான பதிலை கலைஞர்தான் கூறவேண்டும்.

நீ: ஏன் அவர் கூறவேண்டும்?

செ: புலிகளது நடமாட்டத்தை எப்போது கட்டுப்படுத்தி முடிப்பார் என்பதை அவர் கூறட்டும். பின்னர் நான் கூறுகிறேன் பதிலை.

(நீதிபதிக்கு தலை சுற்றுகிறது)

## தண்டனை




பம்மந்தர்: சேர், சேர்! மூன்றாம் நபர் உதவியுடன் பேசலாம் என்றுதான் கூறினேன். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்று கூறவேயில்லை.

கதிரர்: நீர் ஒரு ஒழுங்கான மாணவன், அடக்கமான ஸ்ருடன்ட். என்னிடம் கேட்காமல் நீர் எதையும் பேசக்கூடாது. ஏறும் மேசைக்குமேலே. மற்ற மாணாக்கரைப் பாருங்கோ எவ்வளவு அடக்கமாக, அசடுகளாக நாங்கள் சொல்லுறதை கேட்டபடி இருக்கினம்.

தமிழ்க் கட்சிகள்: சேர், எங்களுக்கு ஒரு பாட்டு பாடிக்காட்டுங்கோ.

கதிரர்: நிலா நிலா
ஓடிவா
நில்லாமல் ஓடிவா,
மலைமீது ஏறிவா
பொதி ஒன்று கொண்டுவா!

த.க: ஆஹா! அருமையான பாட்டு.

(சொக்கிப்போய் வாய்திறக்க அனைவருக்கும் அல்வா ஊட்டப்படுகிறது)

காதிலை பூ கந்தசாமி




பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, கடல் வீதி வெள்ளவத்தை கொழும்பு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331





## பந்தய நகர்

⬅ உலகில் உள்ள உல்லாச புரிகளில் மிக உன்னத மானதாகக் கணிக்கப் படுவது லாவேகஸ் என்ற நகரம். அமெரிக்காவில் நிவேடா மாநிலத்திலுள்ள இந்நகரம் 24 மணி நேரமும் விழித்திருக்கும்.

பல நாடுகளில் சூதாட்டம் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் சூதாட்டம் சட்ட அனுமதியுடன் இங்கு நடைபெறுகிறது. ஏனைய நாடு-நகர்ப்புறங்களில் தடை செய்யப்பட்ட கேளிக்கை வகைகள் இங்கு தங்கு தடையின்றி நடைபெறும். இவற்றில் நாட்டம் கொண்ட தனவந்தர்கள்- உலகெங்கிலுமிருந்து இந்நகரை நோக்கி-பண மூட்டைகளுடன் படையெடுக்கிறார்கள்.

உலகப் பிரசித்திபெற்ற பொப்பிசைப் பாடகராக இருந்து மறைந்த எல்விஸ் பிரெஸ்லி பிரிசில்லா பியூலியுவைத் திருமணம் புரியத் தேர்ந்து கொண்ட இடம் லாவேகஸ்தான்.

இவர்களைத் தவிர டெமி மூர்-புரூஸ் வில்லிஸ், சின்டி குரோஃபோர்ட்-ரிச்சர்ட் கெரி ஆகியோரின் திருமண வைபவங்களும் லாவேகஸில்தான் நடைபெற்றுள்ளன.

சூதாடி நாட்டையே இழந்தார் தருமர். அது மகாபாரதம். இங்கே சூதாட்டத்தால் ஒரு பெரிய தில் தில் நகரே உருவாக்கிவிட்டது. இங்கு போய் சூதாடுதல் தப்பு காரியம் என்றால் உதைத்தே கொன்றுவிடுவார்கள்.





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


## மலை யுத்தம்



[illegible]

மா மலையை மற்றொரு மாமலை தூக்குவது போலுள்ளது இக்காட்சி. இருமாமிசமலைகளும் ஜப்பானுக்கே உரித்தான 'சுமோ' மல்யுத்த வீரர்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே உணவை அதிகமாகக் கொடுத்து சுமோ மல்யுத்தத்துக்காகவே இவர்கள் வளர்க்கப்படுகிறார்கள்.

தனது எதிரணி மல்யுத்த வீரரை அனாயாசமாகத் தூக்குபவர் ஹவாயில் பிறந்தவரான சாட்ரோவன் என்ற பெயருடைய அகே போனோ. இவர்தான் இன்றுள்ள சுமோ மல்யுத்த வீரர்களில் மிக உயரமானவரும் அதிக எடை கூடியவருமாவார்.

சுமோ மல்யுத்த களத்தில் அதிக எடையும் உயரமுமான வீரருக்கு 'யோகோசூனா' என்ற கௌரவப்பட்டம் வழங்கப்படுகிறது. இப்பட்டத்தைப் பெறும் ஜப்பானியரல்லாத முதலாவது பிறநாட்டவர் அகேபோனோ தான். 1996ல் இப்பட்டம் ஜப்பானில் வழங்கப்பட்டது. பட்டம் பெற்றதைத் தொடர்ந்து அவர் ஜப்பானின் குடிமகனாகிவிட்டார்.

யோகோசூனா அகேபோனோவின் உயரம் 2.04 மீட்டர் (6 அடி 8 அங்குலம்) எடை 227 கிலோ. அகேபோனோவிடம் அகப்பட்டுத் திணறுபவர் ரொச்சினோவகா என்ற ஜப்பானிய வீரர். ■

## பேரினம்



## ஏவுகணை



➡ விமான எதிர்ப்பு ஆயுதங்களை விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள், விமான எதிர்ப்பு ஏவுகணைகள் என்று இரண்டு வகையாக பிரிக்கலாம். அந்த இரண்டு வகைகளுக்குள் பற்பல ரகங்கள் உள்ளன.

கெரில்லா அமைப்புகள் பயன்படுத்துபவை தோளில் வைத்து இயக்கக் கூடிய சாம் 7, ஸ்ரிங்கர் போன்ற ஏவுகணைகளேயாகும். விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளையும் பயன்படுத்துவர்.

படத்தில் காணப்படுவது சப்ரால் ஏவுகணை. இது தரையில் வைத்து ஏவக்கூடியது. விமானத்தில் இருந்து வெளியேறும் வெப்பத்தை மோப்பம் பிடித்து சென்று துல்லியமாக தாக்கிவிடும். ஒரே நேரத்தில் நான்கு ஏவுகணைகளை இதில் பொருத்தலாம்.

இரண்டு மூன்று விமானங்கள் ஒன்றாக வந்தாலும் எதிர்கொள்ள ஏற்றது. எனினும் கெரில்லா போருக்கு ஏற்றதல்ல. உடனுக்குடன் நகர்த்திச் செல்ல முடியாது.

பீரங்கிகளின் நவீன வடிவமே ஏவுகணைகள். தற்காலத்தில் யுத்தத்தில் பீரங்கிகளும், ஏவுகணைகளும் பிரதான பாத்திரம் வகிக்கின்றன. ஆட்டிலெறி எனப்படும் கனரக பீரங்கி 14ம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆங்கிலேயருக்கு எதிராக ஃபிரான்சுக்காரர்கள் இதனை பயன்படுத்தினார்கள். இன்று மக்களுக்கெதிராகக்கூட பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ■

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



தாவடியைச் சேர்ந்த நடேசானந்தன்-நந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜனனி தனது 2வது பிறந்த தினத்தை 5.10.98 கொழும்பில் சிறப்பாக கொண்டாடினார். ஜனனியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அப்பம்மா, பெரியம்மா, மாமாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, மாமாமார், மாமிமார், மச்சானமார், மச்சாளமார், பாட்டாமார், பாட்டிமார், கதுமலையில் வசிக்கும் பூட்டி அனைவரும் தாவடிப் பிள்ளையார் அருளுடன் எல்லாச் செல்வங்களும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

செல்வி ந. ஜனனி [illegible]



➡ அமெரிக்காவின் பொப் இசைத்துறையில் வழுவேகமாக முன்னேறிவரும் தாரகை லியாம் ரிம்ஸ் என்ற 15 வயதுப் பெண். 1998 மார்ச் மாதம் 14ம் திகதியன்று நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பாடும்போது எடுக்கப்பட்ட படம் இது.

ரிம்ஸ் பல விருதுகளைப் பெற்று முன்னணிப் பொப்பாடகராக-இச்சிறுவயதிலேயே திகழ்கிறார். கடந்த வருடம் இசைத்துறையில் சுடர்விடும் புதிய கலைஞர் என்ற பட்டம் கிடைத்தது. வாராவாரம் அமெரிக்காவில் விற்பனையாகும் இசைத் தட்டுகளின் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது. இக்கணக்கெடுப்பில் தொடர்ந்து-தனிப்பாடல் வரிசையில்-முதலிடத்தைப் பெற்றவர் என்ற மகாசாதனையும் லியாம் ரிம்ஸுக்குண்டு. இத்தனை சிறு வயதில் இச்சாதனையை நிலை நாட்டியவர் வேறு எவருமில்லை.

ரிம்ஸ் தனியாகப்பாடிய முதல் இசைத் தட்டு, அவருக்கு 13 வயது 11 மாதமாக இருக்கும்போது வெளியிடப்பட்டது. அமெரிக்காவில் மட்டுமல்லாமல், பிரிட்டனிலும் லியாம் ரிம்ஸ் இசைத் தட்டுகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இசை கேட்டால் புவி அசைந்தாடும். இந்தப் பெண்ணின் குரல் கேட்டால் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள இளம் தலைமுறை எழுந்தாடுகிறது. ●

## முதலிடம்



இப்பத்திரிகை கொழும்பு ... பதிப்பித்து வெளியிடப்படுகிறது.